ஓம் பரப்பிரம்மணேநம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

“ எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். ” (திருக்குறள்.)

கமலம்-3. Vol. 3. | சென்னை: விபவஹூ கார்த்திகைமீ 1உ 1928-ம்ஹூ நவம்பர்மீ 15உ | இதழ்-32. No. 32.

ஆநந்த  தரிசனம்

“ உண்டவர்க்கன்றி ருசிதெரியுமோ, கண்டவர்க்கன்றி காதல் விளங்குமோ ? ” அதுபோல் பகவத் தியானத்தின் சுவையை அநுபவித்தவர்களே உணரவல்லார். மனதால் ஒன்றைத் தியானிக்கிறோம். மனது மகா பலமுடையது. மனதை வசப்படுத்திக் கொண்டவன் செய்தற்கரிய காரியங்களைச் செய்யலாம். யோகவித்தியுடையோர் தங்கள் மனதால் எதை எப்படியாக்கவேண்டுமென்று நினைத்தாலும் கூடும். மனதால் ஒருவன் இறக்கவேண்டுமென்று யோகி நினைத்தால் அவ்வாறே அவன் இறந்து போகிறான். உலகத்தில் மருந்துகளுக்கு வியாதியைப் பரிகரிக்கும் குணம் அமைந்திருப்பது போலும், விஷத்துக்கு சுகத்தைக் கெடுத்து மரணத்தைக் கொடுக்கும் தன்மை வாய்ந்திருப்பதுபோலும், வார்த்தைகளுக்கு சில சக்திகளும், குணங்களும் ஏற்பட்டிருக்கின்றன. சில மந்திரங்களை உச்சரிப்பதால் விஷ ஜந்துக்களால் தீண்டப்பெற்றவர்கள் குணமடைந் தெழுந்ததைப் பார்த்திருக்கிறோம். இதைப்போலவே தியானத்துக்கும் ஓர்வித சக்தியும் ருசியும் இருப்பதால் அடிக்கடி தெய்வத் தியானம் செய்யும்படி பெரியோர்கள் கூறுகின்றனர். மனது என்னும் மகா ஏரியில் சித்த விருத்திகளென்னும் அலைகள் உண்டாகாமல் அடக்கினாலன்றி நமது நிழலாகிய கடவுளை அறியமாட்டோம். ஆதலின் மனதை முதலில் நல்வழியில் நடத்திப் பிறகு ஒரே நிலையில் நிறுத்தி இறைவனின் அருளைப்பெற்று முக்தியடையுமாறு எப்போதும் ஈசுவரனைத் தியானம் செய்வோமாக.

***

“ அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே ” என்றார் தாயுமானவர். கடவுளுக்கு வேண்டுவோர்கள் இன்னாரென்றும், வேண்டப்படாதவர்கள்

“ அமிர்த குணபோதினி ” தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புதுந்து நிலவும் அறிவு விளக்கப்பத்திரிகை—ஞான கலாவாரிதி, நீதிமாலினி,

இன்னொன்றும் பேதம் உண்டோ? இல்லவேயில்லை. ஈசன் ஸகல ஜீவர்களிடத்தும் ஒரே விதமாகிய ஸ்வபாவமே உடையவர். அவர் பாரபக்ஷமுடையவரல்ல. ஈசன் ஸ்வபாவத்தில் ஸுகரூபன். அவரது ஸ்வபாவ நியதமாகிய ஸுகமானது ஸகல ஜீவர்களாலும் அனுபவிக்கப்படுகின்றது. ஆயினும் சில ஜீவர்கள் பாவங்களைச் செய்து துக்கத்தையும், சிலர் புண்யங்களைச் செய்து ஸுகத்தையும் அனுபவிக்கின்றனர். இவ்விதமேயன்றி ஈசன் பாரபக்ஷ முடையவன் என்பதும், அவன் ராகத்வேஷாதிக குணவனென்பதும் மிக்க அநுசிதமே என்க. நீதிநெறி மாறாத அரசனை ஈசனுக்கு நிகராகச் சொல்லலாம். அரசன் ஸகல பிரஜைகளுக்கும் நலத்தையே செய்வோனாயினும், குற்றம் செய்தவர் தண்டனையையும், கண்ணியமாகிய நடத்தையுடையோர் கௌரவத்தையும் பெறுகின்றனர். அதுபோலவே, ஈசன் ஸ்வபாவ நியதமாய் ஸகல ஜீவர்களுக்கும் ஸுகஹேதுவா யுள்ளவனாயினும், சிலர் புண்ணியம் செய்தால் ஸுகத்தையும், சிலர் பாவம் செய்தால் துக்கத்தையும் அனுபவிக்கின்றனர். உலகில் கொலை செய்தவன் கடுந் தண்டனையைப் பெறுதற்கு ஹேதுவானது, அவன் செய்த குற்றமே என்பதை விட்டு, அரசனுக்கு அக்குற்றவாளியிடம் துவேஷ முள்ளது என்பது உசிதமா? நீதிவழுவாத மன்னனிடம் பாரபக்ஷத்தைக் கற்பிப்பது உச்சிதமல்லவன்றோ? கௌரவமாகிய நடத்தையுடையோரிடம் அரசனுக்குப் பிரியமுள்ளதென்று சொல்லி, அரசனுக்குப் பாரபக்ஷமிருக்கின்றது என்பது அநுசிதமேயன்றோ? இது போலவே, ஈசன் எல்லோருக்கும் பொதுவாய் ஸுகத்தையே செய்வோன். ஆயினும், ஜீவர்கள் அதனோடுகூட தமது செயலால் சுகதுக்கங்களையும் அனுபவிக்கின்றனர் என்றறிக.

***

“ஈசனடியே நந்தலை முடியாம்” பிரிதிவு, அப்பு, தேயு, வாயு ஆகாசங்களும், மனசும், மற்றுமுள்ள இந்திரியங்களும், மகதகங்காரங்களும், மூலப்பிரகிருதியும் எவனுடைய ரூபங்களோ அந்த சர்வேஸ்வரனுக்கு தண்டன் ஸமர்ப்பிக்கின்றேன். இயற்கையில் சுத்தனாய், சூட்சும ரூபியாய், ஞானத்தில் எங்கும் வியாபித்தவனாய், பிரகிருதிக்கும் பரனா யிருக்கிற புருஷ ரூபமும் எவனுடைய ரூபமா யிருக்குமோ அந்த குணாகரனை புருஷோத்தமனுக்குத் தண்டன் ஸமர்ப்பிக்கின்றேன். பிரிதிவி முதலான பூதங்களும், கந்தாதி குணங்களும், புத்தியாதிகளும், பிரகிருதியும், சம்சாரியான ஜீவனும் ஆகிய இவர்களைக் காட்டிலும் பரனான முக்தபுருஷவடிவம் எவனுடைய ரூபமா யிருக்குமோ அந்த ஜகத்பதிக்குத் தண்டன் ஸமர்ப்பிக்கின்றேன். பகவானே, பரம லக்ஷணமுள்ளதாய், ஸகல லோகத்துக்கும் அதிபதியாய், சுத்தமாயு மிருக்கிற நின் சொரூபத்துக்கு வந்தனஞ் செய்யா நிற்கிறேன். பரம புருஷனாய் ஸர்வத்திலும் வியாபித்து பூமி என்று சொல்லப்பட்ட சராசரமயமான பிரபஞ்சத்தைக் காட்டிலும் பன்மடங்கதிகமாக மேற்பட்டிருக்கிறாய். பூதபவிஷ்யத் வஸ்து சாதனங்கள் நீயே. புருஷோத்தமனே, நின்னிடத்துப் பிரபஞ்சமெல்லா முண்டாயிற்று. லோகநாயகனே, பட்டைகளொன்றின்மேலொன்றாய் மூடப்பெற்று ஏகாகாரமாகத் தோன்றுகிற வாழைக்கன்றே பெரிதாகி வேறாகாம லிருப்பதுபோல், சூக்ஷ்மசித்து அசித்துக்களோடு கூடிக் காரண

தாங்கள் இச்சித்த ஸ்திரீயை உத்தேசித்து அவளது கணவனுடன் வெகு உறவாய்க் குலாவுகிற திருட்டு நரிகளும் உண்டு,

ரூபமாய்க் காரியமான இந்தப் பிரபஞ்சமும் வேறாகாமலிருக்கிறது. இவ்வண்ணம் நீர் எல்லாவற்றிற்கும் காரணமாய், எல்லாவற்றிலும் வியாபித்து எல்லாவற்றினுள்ளும் இருக்கிறீரானபடியினால், நீரே அடியேனுடைய மனோரத முழுதும் அறிந்தவராவீர். அடியேனுடைய சித்த விருத்தியை உமது தியான மார்க்கத்தில் பிரவர்த்திக்கும்படி கிருபை சாதித்தருளவேண்டும். ஓம் தத் சத்.

***

தரிசனம் என்றால் என்ன ?'' நான் தரிசித்தேன் என்று சொல்வதால் தங்களுடைய முகத்தைப் பார்த்தேன் என்று அர்த்தமாகிறது. தரிசிப்பதென்பது முகத்தைக் குறிக்கிறது. அதிலும் முகத்திலுள்ள கண்களைக் குறிக்கிறதென்று அர்த்தம். கண்ணானது மற்றொரு கண்ணைப் பார்க்கிறது. இன்னும் ஆராய்ந்தால் கண்ணிலுள்ள பார்க்கும்படியான சக்தி (இது நாமரூப மில்லாதது) மற்றொரு கண்ணிலுள்ள பார்க்கும்படியான சக்தியைக் காணுகிறது. இதனால் நாம ரூபமில்லாத ஓர் பொருள் தன்னைத்தான் பார்த்துக்கொள்ளுகிறது என்று அர்த்தமாகிறது. இதற்குத் தான் **தரிசனம்** என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். குருவை சிஷ்யன் தரிசித்தான் என்றால், குருவின் தன்மையை சிஷ்யன் அடைந்தானென்று அர்த்தம். எந்தப் பொருள் பார்க்கப்படுகிறதோ அதன் தன்மையை நாளடைவில் பார்க்கும் பொருள் அடைகிறது.

***

“ கஞ்சி வரதப்பா, எங்கு வரதப்பா ” என்பது பழமொழி. கஞ்சி என்ற க்ஷேத்திரத்தில் ஒருவர் பகவஸ்துதியாக கஞ்சி வரதப்பா என்று சொல்லவும், அங்கு மிகப் பசியுடன் இருந்த ஒரு எளியவன் கஞ்சிதான் வருகிறதென்றெண்ணி, எங்கு வரதப்பா (வருகிறதப்பா) என்றானும். இதைப் போலவே, பிச்சைக்காரன் தனவானுடைய வீட்டு வாசலில் நின்று அம்மா பிச்சைபோடுங்களென்று கூவுகிறான். அவனுடைய செவி உள்ளே யிருந்து வரும் சப்தத்தையேற்கத் தயாராயிருக்கிறது. ஏதேனும் சப்தமுண்டானால் உடனே கதவுதான் திறக்கப்படுகிறதோ, நமக்கு அன்னம் வருகிறதோவென்று பிரமிப்பான். இப்படியே கடவுளை ஸ்தோத்திரம் செய்யும்போது கடவுள் நமக்குப் பதில் சொல்வாரென்று நம்பிக்கையோடு காதுகளைத் தயாராய் வைத்துக்கொள்ளவேண்டும்.

***

“ முக்கிய ப்ராரப்தம், அவாந்தர ப்ராரப்தம் ” ப்ராரப்த கர்மமானது முக்கிய ப்ராரப்தமென்றும், அவாந்தர ப்ராரப்தமென்றும் இருவிதமாகும். ஓர் பெரும் புண்ணியம் செய்யும் காலத்தின் இடையில் சில பாவங்களைச் செய்தலும், ஓர் பெரும்பாவத்தைச் செய்யும் காலத்தின் இடையிலேயே சில புண்யங்களைச் செய்தலும் உலகில் காணப்படுகின்றது. இவைகளுள் பெரிதாய்ச் செய்யப்படும் கர்மம் முக்கியமாயும், இடையில் செய்யப்படுவன அமுக்கியங்களாயும் இருக்கின்றமையால், இவைகள் மனதிலூன்றி யிருந்து, பின்னர் பயன்தரும் காலத்தில் முக்கிய ப்ராரப்தமெனவும், அவந்தர ப்ராரப்தமெனவும் சொல்லப்படுகின்றன. சிலர் ஓர் பெரிய ஸுகத்திலிருக்கும்போது

விரோதப்பட்டுக்கொண்டு போனவர்களைச் சிந்திக்கும்போது, அவர்களுக்கு உழைத்த உழைப்பும் செலவுகளும் நினைவுக்கு வந்து கஷ்டமாகிறது.

இடையில் சில துக்கங்களையும், சிலர் பெரிய துக்கத்தை யநுபவித்துக்கொண்டிருக்கும் காலத்திலேயே இடையில் சில ஸுகங்களையும் அநுபவிக்கும்படி ஏற்படுகின்றதை நாம் காண்கின்றோம். இதனில் நீடித்தது **முக்கிய ப்ராரப்தம்** என்றும், மற்றவை **அவாந்தர ப்ராரப்தங்கள்** என்றும் கொள்ளத்தக்கது.

***

"தியானத்தால் உண்மை தெரியும்" ஈசுவரனுடைய நாமத்தை வாயாற் சொல்வதில் மட்டும் பிரயோஜனமிராது. அவரைத் தியானித்தால் அப்போதுதான் பகவானைத் தரிசித்ததுபோலாகும். தியானத்தாலே கடவுளின் மகிமை நன்றாகப் புலப்பட்டு அவருடைய ஸ்வரூபத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை பெருகும். நாம் மூக்சு விடுந்தோறும் எமனோடு சண்டை செய்வதுபோல் தோன்றுகிறது. பிரதிதினமும் நம்மை எமன் அழைக்கிறான். நாம் வருவதில்லை என்று கூறுவதற்கடையாளமாய் மூச்சு விடுகிறோம். நமது ஹிருதயம் படபடவென்று அடித்துக்கொள்கிறது. கடைசியில் எமனுக்கு இணங்கவேண்டியதுதான். இதைச் செவ்வையாயறிந்தவர்கள் எமனெனும் கள்வனிடம் சிக்குவதற்குள் ஈசுவரனுடைய பிரஸாதத்தை தியானத்தின் மூலமாய் அடையக்கடவர்.

***

"நிர்விசார நிலை" இந்த நிலை எவருக்கு உண்டாகத்தக்கது? எவர் தமது அந்தியத்துக்கு வேண்டிய ஆறுதலையும், ஈச்வர நம்பிக்கையையும் பூரணமாகப் பெற்றுக்கொண்டு பகவானிடத்து பரம பக்தியுடன் ஜ்வலிக்கின்றனரோ அவர்கட்கே விசாரமற்ற இந்த நிலைமை உண்டாகவல்லது. அந்தகைய பக்திமான்கள் என்ன கூறுகின்றனர்? அன்னோர் மொழிவது இதுவே:- எழும்பின அலை படிவதும், படிந்த அலை எழும்புவதும் இயற்கை. ஒருமுறை லாபமும், ஒரு முறை நஷ்டமும் உண்டாகின்றன. தேகம் புஷ்டிப்பதுமுண்டு, இளைப்பதுமுண்டு. வாடிப்போமே யென்று புஷ்பம் மலராதிருக்கிறதா? அதுபோல் இறந்துபோவோமென்ற துக்கமேன்? பத்து நூற்றாண்டுகட்கு முன்னேயே நாம் ஏன் பிறக்கவில்லையென்று கவலைப்பட்டோமா? பிறக்கவேண்டுமேயென்ற கவலையைப்படாதபோது, இறக்கவேண்டுமே என்ற கவலை ஏன்? விளக்கை ஏற்றும்போது வெளிச்சமுண்டாகிறது. அதை யவித்தால் இருள் சூழ்கிறது. இதைப்போல் பகவான் நம்முடைய பிராணனாகிய தீபத்தை யேற்றினார். இறக்கும்போது அவரே ஆற்றுகிறார். ஆகவே, நாமேன் துக்கமடையவேண்டும்? எல்லாம் பகவத் ஸங்கல்பமென்று அவரது திருவுளத்தின்படி நடக்குமென்று அனைத்தையும்விட்டு அவரைத் தியானித்தலாகிய ஒன்றில் மட்டும் நமது சிந்தையைச்செலுத்தி ஆநந்தமாய் விளங்கக் கடவோம் என்று முற்றுமுணர்ந்த பெரியோர்கள் கூறுகின்றனர்.

***

"நீரின்மேற்குமிழி, யுயர்நீள் விசும்பின் மின்னலென நிலையாக்காயம்" நமது ஆயுள் நாளோ ஸ்வல்பம். அதில் உலக ஆசாபாசத்தினாலும், நித்திரையினாலும், வியாதியினாலும், சோம்பலினாலும், நமது தேகத்தை வளர்ப்பதற்

கணவனை எதிர்த்துக்கொண்டு தாய்வீடுபோகிற பெண்ணின் ஆரவாரம் எத்தனை நாளைக்கு?

குரிய எண்ணிக்கையில்லாத வேலைகளைச் செய்வதினாலும், செலவாகும் நாட்கள்போக, மீதியாய் இருக்கும் நாட்களோ மிகக் கொஞ்சமாகும்; அந்தக் கொஞ்ச நாட்களையும், நம்மையுண்டாக்கி நமக்குச் சகலத்தையும் கொடுத்தருளுகின்ற பரிசுத்தமான கடவுளை வணங்காமல் வீணாகக் கழித்துவிடுகின்றாயே நெஞ்சமே! இக்கருத்தினைப் பின் வரும் பாடலிற் காண்க.

ஆயுணாள் சிலவெங்காம மனந்தர்நோய் சோம்புகோண்ட
காயமே வளர்க்கவெண்ணில் கருமங்கள் செயலிவ்வாறே
தேயுநாள் கழியநிற்குஞ் சேடநா ளற்பமாதந்
தூயநாதனைத்தோழாமற் றலைக்கின்ற யதையுநேஞ்சே.

⁂

"பேரானந்த வெள்ள மதிற் றேய்வாயே" என்றார் பெரியோர். பாவிகளைச் சுடும்படியான நெருப்பும், புண்ணியவான்களுக்கு ஒப்பற்ற நிழலும், ஆராய்ந்தறிவதற்குக் கூடாத பரம பொருளும் ஆகிய கடவுளை, மனமே நீ மிகுந்த ஆசையுடன் வாழ்த்துவாயாக. அப்படி ஆசையுடன் வாழ்த்துவாயானால், துன்பசாகரத்தினின்றும் கரையேறி, அடைதற்கரிதாகிய பெரிய ஆநந்த வெள்ளத்தில் மனமே நீ மூழ்கி இன்புறுதல் கூடும். இக்கருத்தைப் பின்வரும் பாடலிற்காண்க.

தீயர்தமைச் சுடுந்தழலைச் சீலர்தமக் கோருநிழலை
யாயரிய பரம்போருளை யாவலினேத் தாய்மனமே
யர்வலினீ யேத்துவையே லல்லற் கரையேறி
மேவநும்பே ரானந்த வெள்ளமதிற் றேய்வாயே.

ஒரு நாயின் கோரி.

நெடுநாள் தங்களுக்குத் துணையாயும் தோழர்களாயுமிருந்து, தங்கள் வாழ்நாளில் மிகுந்த சந்தோஷத்தை யுண்டாக்கி வந்து, கடைசியில் பரலோகம்சென்ற எளிய நாற்கால் ஜீவனான நேசர்கள் விஷயத்தில் அன்புவைத்து, பாரீஸ் நகரத்தில் ஒரு சிறிய தீவில் விசித்திரமான சவச்சாலைக் கட்டிடம் ஒன்று கட்டியிருக்கிறார்கள். அதில் ஒரு நாயின் கோரியில் எழுதியிருக்கும் சிலாசாஸனத்தைப் படித்தால் எப்படிப் பட்ட மனிதனும் வெட்கப்படாமல் போகமாட்டான். அந்த சிலாசாஸனத்தின் கருத்தாவது :—

"இது நாற்பது மனிதர்களுடைய பிராணன்களைக் காப்பாற்றியது. இது காப்பாற்றப்போன நாற்பத்தோராவது மனிதனால் கடைசியில் கொல்லப்பட்டது"—என்பதாம்.

☞ பிராணிகளிடத்து அன்பாய் இருங்கள்.

ஆனந்தகுணபோதினி

விபவஹு கார்த்திகைமீ 1௳

அநுபவித்து உணர்வதிலுள்ள சுவை நயங்கள்.

IV

ஆசைக்கு ஒரு பெண்ணும், ஆஸ்திக்கு ஒரு பிள்ளையும் வேண்டுமென்று தவங்காத்து நின்றவர் நமது தந்தை. "ஆணை அடித்து வளர், பெண்ணைப் போற்றி வளர்" என்ற விதமாக நம்மைத் திருத்தி உலகத்திலே ஒரு உருவாக்கிவிட்டவர் நமது தந்தை. "ஆணுக்கு அவகேடு செய்தாலும், பெண்ணுக்குப் பிழைசொல்லலாகாது" என்று நமது தங்கை தமக்கைகளுக்காக உள்ள சொத்தை எல்லாம் செலவிட்டு அவர்களுக்கு நல்ல இடம் பார்த்துக்கொடுத்து நாநாவித சீர்களும் செய்து வாழவைத்தவர் நமது தந்தை. பையனுக்கென்ன, எப்படியாவது தலையெடுத்துப் பிழைத்துக்கொள்கிறான், பெண்ணைத்தான் முக்கியமாகக் கவனிக்கவேண்டுமென்று அவர் ஆயிரம் அரும் பாடுகள் பட்டார். இப்படிப் பட்டதிலே ஆண்குழந்தைகளிடத்து அவர் அன்பு தாழ்ந்துவிட்டாரா? அது இல்லை. ஆண் குழந்தை என்றைக்கும் வீட்டிலேயே இருக்கக்கூடியது. அதற்கு அது இது செய்யவில்லையென்று குற்றம் குறை பேசுபவர்கள் இல்லை. பெண் குழந்தையோ பிறர் வீட்டில் வாழச்செல்வது. அதற்கு ஒரு சொட்டுவார்த்தையும் வரக்கூடாது; அது நாளைக்குக் கண் கலங்கும்படியும் இருக்கவொண்ணாது என்று கருதியே அவர் உள்ளதையெல்லாம் பெண்ணுக்குச் செலவிட்டு நடந்துகொண்டார். தன் அருமை மைந்தன் தன் அன்பையும், தன் உள்ளத்தையும் அறிவான்; நாளைக்குத் தனக்கு எதும் செய்யவில்லையே யென்று தவறுகாணான்; இன்றைக்குப் பெண்குழந்தைகட்குத் தான் செய்யப் பிசகினாலும், பிறகு செய்யவேண்டிய கடமை அவனுடையதாகவே வந்து முடி

எவ்வளவு பணம் செலவிட்டு இத்தனை சாமான்கள் வீட்டுக்கு வந்தன என்று கணவனின் கஷ்டத்தை நினையாத மனைவி குடித்தனத்துக்குப் பொருந்தியவளல்ல.

யும்; அதையே தான் இன்று செய்வதில் தனக்குச் செய்ததாகவே அவன் கருதுவான் என்றும் அவர் நம்பினர். உள்ள மிச்சத்தை, கடவுள் கொடுத்து மிகுந்ததைப் பையன் எடுத்துக்கொள்ளட்டு மென்று நம்மீது பக்ஷமாய் அவர் எண்ணினர். நமது ஆண் குழந்தைதான் நமக்குக் கடைசி காலத்துத் துணை என்று நம்மீது அவர் வைத்த பற்றுதலுக்கும் உறுதிக்கும் எல்லையில்லை. "ஆசை பெரிதோ மலை பெரிதோ" என்பார்கள். அவர் நம்மீது கொண்ட ஆசை தான் பெரிதாக இருந்தது. "ஆசை பெருக, அலைச்சலும் பெருகும்" என்றபடி நம்மிடத்து அவருக்கு இருந்த பிரேமையில், நாளைக்கு நாம் எவ்விதம் ஜீவிப்போமோ, எதைக்கொண்டு உயிர் வாழ்வோமோ, பின்னுக்குத் திக்கு எப்படியோ, ஏதாவது ஒரு ஆதாரம்—துணைசெய்து வைக்கவேண்டுமேயென்று அவர் நமக்காகப் பட்ட பாட்டிற்கு ஒரு அளவு எல்லையுண்டா? நல்ல துணியுண்டா? நல்ல புசிப்புண்டா? நாம் நன்ருக உடுத்தி யிருந்தால் அதைக்கண்டு தாம் நன்ருக உடுத்தியிருப்பதாக அவர் திருவுள்ளம் மகிழலானது. நாம் திருப்தியாகப் புசித்துச் சுவைத்தால், அவர் தாமும் புசித்ததாக நினைத்துக்கொள்வதானர். நாம் உண்டு மிகுந்த எச்சிலை அவர் ஆசையுடன் ருசிப்பதானர். நம்மிடமிருந்து ஒரு தின்பண்டத்தில் ஒரு சிறு துண்டு பெற்று அதை எவ்வளவோ பிரியமாய் வாயில்போட்டு மென்று பரவசப்பட்டுப் போயிருக்கிருர். நமது மகிழ்ச்சி அவர் மகிழ்ச்சி. நமது பூரிப்பு அவரது பூரிப்பு. நம்முடன் தானும் ஒரு சிறு குழந்தையாக அவர் விளையாடியது எத்தனையோ தடவைகளில்! நாம் எதெதில் ஆநந்திப்போமோ வென்று பார்த்து அவற்றை யெல்லாம் வாங்கித் தந்து நமது சந்தோஷத்தைக் கண்டு தாம் இன்ப பரிபூரணராயினர்.

"ஆசைப்படுவது அவ்வளவும் துன்பம்" என்றவாறு, நம் மீது அவருக்கிருந்த பற்றுதலில், நாம் நோய்நொடி யுற்றகாலத்து அவர் தெய்வத்தை வேண்டி நின்றது கொஞ்சமா? செய்துகொண்ட பிரார்த்தனைகள் எண்ணி முடியுமா? நமது காலின்மாட்டிலேயே அவர் நமது தாயோடும் இருந்து இரவு முற்றும் கண்விழித்துக் காத்துக்கிடந்தார். நாம் சுகப்பட்டு எழுந்தபோது அவர் தாமும் சுகப்பட்ட விதமாய் நினைத்துக்கொண்டு ஆநந்தம் பொங்கி நின்ருர். அவர் நம்மீது பல காலங்களிலும் கொண்ட கோபம் நாம் சுகப்பட வேண்டுமேயென்ற கவலைக்கு மிஞ்சியதல்ல. நமது எத்தனையோ பிழைகளை அவர் கருணையுடன் பொறுத்துக்கொண்டு நலமே நாடினர். "ஆசைப்பட்ட பண்டம் ஊசிப்போயிற்று" என்றவிதமாக, அவர் அளவுகடந்து ஆசை வைத்து நின்ற இடத்தில் ஏமாறிப்

ஆண் பெண்களின் மீறியபேச்சும் சிரிப்பும் அதைக் கவனிக்கிறவர்களைச் சந்தேகப்படச் செய்துவிடுகிறது. கேவலமாய் நினைக்கவும் செய்துவிடுகிறது?

போன துயர பரிதாபங்கள் எத்தனையோ உண்டு. நாம் பிறப்பதற்கு முன்னே தோன்றி மறைந்த குழந்தைகட்காக அவர் பட்ட துயர், விட்ட கண்ணீர், அலறிய தொனி அளவிடப்போமோ! அவற்றை யெல்லாம் அவர் சகித்து நின்றார். உலகின் சோதனைகள் எத்தனை எத்தனையோவற்றை யெல்லாம் நமக்காக அவர் பட்டுச் சுமந்து நொந்து பரிதபித்தார். அத்தனை பரதவிப்பையும் தம் நெஞ்சத் துள் அடக்கிக்கொண்டு நம் முன்பாகப் புன்னகை தவழ்ந்த வதன மாய்க் குளிர்ந்த நோக்கோடும் குலாவினர். எங்கே நமது கஷ்டங் களைக் குழந்தைகள் அறிந்து இளைத்துப்போகின்றனவோ வென்று நமக்குத் தெரியாமல் அவர் மறைத்துவிட்ட பாடானபாடுகள் எத் தனையோ கோடானுகோடியுண்டு. எவ்வளவோ கசப்புகளை நம் பொருட்டு அவர் தித்திப்புகளாக மென்றிருக்கிறார். "ஆசையுள்ள இடத்தில் பூஜை நடக்கும்" என்றவாறு நம்மீது அவருக்கு இருந்த பிரியத்தில் எத்தனையோ விதமாகவெல்லாம் நம்மைச் சிங்காரித்துப் பார்த்து சிந்தை குளிர்ந்திருக்கின்றார். அவற்றை யெல்லாம் நாம் ஒரு சிறு துரும்பளவு நினைத்துப் பார்த்தாலும் கடவுளின் அன்பைத் தந்தையின் வழியாகக் கண்டுணர்ந்தோம் என்றல்லவோ சொல்லும் படியாக இருக்கும். கடவுள் பரம பிதா. நமது தந்தையோ அவர்தம் ஒரு தனிச்சாயல்; அவரது பிரதிநிதி. "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பதும் உண்மையான பழமொழியே.

"தந்தை எவ்வழி அவ்வழி புதல்வன்" என்பர். நமது உத்தம உயர் குணங்கள் யாவும் நமது இனிய தந்தையிடமிருந்து கிரகித் ததே. அப்பெரியோர் நம்மை எவ்வகையில் பயிற்சி செய்வித் தனரோ அதற்கேற்ப நாம் இன்றும் உள்ளோம். இந்நாள் நாம் உண்ணும் உணவு அவர் நமக்குக் காட்டிக்கொடுத்த வழியிலிருந்தும் பெறுவதே. "தந்தையோடு கல்வி போம்" என்பதும் அநுபவ மன்றோ? நாம் கற்ற கல்விப் பிரதாபம் அனைத்தும் அப்பெரியவர் வருந்திப் போதித்ததன்றோ? அவரது மனப்பயிற்சி இருந்த திறத் துக்குத் தக்கவாறு நமது திறமும் அமைந்தது. நமது உருவம அவர் உருவையே யொத்ததாயிற்று. நமது குணங்கள் அவரது குணங்களே. தந்தையே மைந்தனாக ஜனிக்கின்றான் என்பது உலக வசனம். அவர் தமது தோற்றமனைத்தையும் நம்மில் பிரதிபலிக்கச் செய்திருக்கின்றார். அவர் நடந்த நடையழகை நாம் இன்று நம்மில் காண்கின்றோம். அவரது தொனி, சாயல், தத்துவம் யாவும் நம் மிடத்தே இந்நாள் நிலவப்பெறுகின்றது. அவரே நாம். நாமே அவர். அவர் மூலவிக்கிரகமாயின், நாம் உற்சவ விக்கிரகம்போலா வோம். அவர் பிரபஞ்ச நாடகத்திலே ஆடிக்களைத்து முடிவெய்தின வர். நாம் இப்பொழுதுதான் அவர் காட்டிய உலக நாடகத்தில் ஆரம்பப்பிரவேசமாக நடிக்கத் தொடங்கியுள்ளோம்.

நமது தந்தைக்குவந்த வரவு எல்லாம் எவ்வெவ்விதமாகவோ செலவே. எந்த நாளும் பெரும்பணம் விரயமே. "கோடி வித்தையும் கூழுக்கே" என்பதற்கிணங்க, நமது தந்தையார் தமது திறன் அனைத்தையும் காட்டித் தேடிய செல்வம் உண்டு உடுத்து உயிர் வாழ்வதற்கே சரியாய்ப்போயிற்று! வந்த வரவு போதாததாகி நொந்த பகலிரவுகள் எத்தனையோ! இருந்தவற்றை நமக்கு ஊட்டி விட்டுப் பட்டினிகிடந்த காலங்களும் எவ்வளவோ? அவர் கையும் கணக்கும் சரி. ஆனால் மிஞ்சியபாடு ஒன்றுமில்லை. "கையில் ஒரு காசுமில்லை, கடன் கொடுப்பார் ஆருமில்லை" என்ற அவதிகள் மிக மிக. "கொக்கரித்த பேரெல்லாம் கூடத் திப் பாய்வார்களா?" இருக்குநாளில் தின்றுகழித்தோர், இல்லாத நாளில் உதவிக்குக் கூடுவரோ? "கையில் இருந்தால் கர்ணன்" தான். "கையில் இல்லாதவனே கள்ளன்." "கையில் உண்டானல் காத்திருப்போர் ஆயிரம் பேர்!" குடும்பம் கொடுந்துன்பமென்றாலும், நாம் பின்னுக்குக் கண் கலங்காதிருக்க, இரண்டொரு காசு துணை நமக்குச் சேர்த்து வைத்துவிட்டுப் போகவேண்டுமேயென்று அவர் பட்ட கவலை சொல்லுந்தரமா? எவ்வளவோ பாடுபட்டுத் தன் வாயைக் கட்டி, வயிற்றைக்கட்டி அந்தச் சிறு சொத்தை நமக்கு அவர் சேர்த்து வைத்தார். நாம் பிறந்த தினத்திலேயே அவர் தமக்கு ருசிகரமாய் உண்பதை யெல்லாம் விட்டுவிட்டார். எல்லா ருசி நயங்களையும் நமது நாவுக்கே புகட்டினர். "பிள்ளை பிறக்கிறதற்கு முன்னே தின்றுபார், மருமகள் வருகிறதற்கு முன்னே கட்டிப்பார்" என்றபடி நமது தாயும் அவரோடு துணையாகி தன் வாயைக்கட்டி நமக்கே அனைத்தையும் உண்பித்து மகிழ்ந்தார். "பிள்ளையைப் பெற்றுப் பேரிடவேண்டும்" என்று நமது அன்னையும் பிதாவும் தம்முள்ளே கொண்ட ஆசைகள் அபரிமிதம்.

"பிள்ளையில்லா பாக்கியம் பெற்றிருந்தென்ன சிலாக்கியம்" என்று அவர் தம் வாணாளை வெறுத்ததற்கு அளவுண்டா? "பிள்ளையில்லாச் சோறு புழு" என்றல்லவோ அவர் எண்ணினர். "பிள்ளையின் மடியிலே பெற்றவன் உயிர் விட்டால் பெருங்கதியுண்டு" என்று அவர் நம்பினர். நம்பி, நாம் தீர்க்காயுளுடன் நெடுங்காலம் வாழ வேண்டுமென்று கண்ட கோயில்களுக்கெல்லாம் கையெடுத்துக் கும்பிடுவதானர். "பிள்ளை வருத்தம் பெற்றவளுக்குத் தெரியும்" என்று பொங்கிய அன்பிலே நமது அன்னை திகழ்ந்தார். "பிள்ளைக்குப் பெண்தேடப் பத்து செருப்பு தேய்ந்தது" என்பதுபோல, நமது விவாகத்திற்காக அவர் அலைந்த அலைச்சலுக்கு எல்லை வகுக்க இயலுமோ? "குரங்கானாலும் குலத்திலே கொள்ளவேண்டும்" என்று அவர் நமக்குப் பட்ட கவலை எவ்வளவோ!

எல்லா செல்வமுங் கூடிநின்ற ஒரு தந்தை காலவினையின் பயனாக யாவும் இழந்து அகதியாயினர். அவரது ஒரே குமாரனை ஸம்ரக்ஷிக்கவும் வழியின்றித் தமது உறவினரிடம் ஒப்புவித்துவிட்டார். தீபாவளி நாள் வந்தது. பட்டாசு முதலியன வாங்குவதற்குத் தந்தையைப் பணம் கேட்கத் தனயன் வந்தான். அவன் வந்த நோக்கம் கண்டுகொண்ட தந்தை தம் கையில் ஒரு காலணாவேனும் அன்று இல்லாதிருப்பதற்குத் திகைத்துத் தனயனின் கன்னத்தைத் தமது கரத்தால் பற்றி, "என்ன அப்பா, எங்கே வந்தாய், பட்டாசுக்குப் பணம் கேட்கவா வந்தாய்" என்று பரிதபித்த முகமாய்த் தமது இரக்கக் கண்களை அவன் கண்களுக்குள் செலுத்திக் கூர்மையான நோக்குடனே அவனை உற்றுப்பார்த்தார். அதுகாலை அவர் விழியினின்றும் பெருகிய இரண்டொரு துளிக்கண்ணீர்கள் அவரது மைந்தன் மீது விழுந்தன. தனயன் திடுக்கிட்டான். தந்தையின் உருகி நிற்கும் அன்பையும், தவிப்பையும், நீர் பெருகிச் சோர்ந்திடுங் கண்களையும் கண்டு அந்தப் பார்வையை அவன் என்றுமே மறக்கமுடியாத வனாயினன். அதன் பின்னர், "சும்மா பார்க்கவந்தேன், பட்டாசுக்குக் காசு என்னிடம் இருக்கிறது" என்று சொல்லித் தந்தையின் மனத்தைத் தேற்றுவித்து, வேறு பல பேச்சுகளால் இந்நினைவை அவர் உள்ளத்தினின்றும் அகற்றி, அதை அவர் மறந்துவிடச் செய்துவிட்டு, பின் விடை பெற்று வெளியில் வந்து, தன் தந்தை தன்னை நோக்கிய பரிதாபக்கண்களை நினைத்து நினைத்து விம்மிவிம்மி யழுதுக் கதறினன்! கடைசி காலம்வரையில் அவன் அந்தக் கண்கள் நோக்கிய பார்வையை மறக்கவேயில்லை. மறக்கவும் முடியவில்லை. மறப்பதும் ஏது? அன்பும், பாசமும், வறுமையும், கருணையும், தவிப்பும் ஆய அனைத்தும் ஓர் உருக்கொண்டு திரண்டு தோன்றின அவ்விழிகளில்!

ஒருவர் தமது உத்தியோகசாலையில் பணிசெய்துகொண்டிருந்த காலையில், அவர் தந்தை போய்விட்டாரென்று மற்றவர் வந்து சொல்ல, அதை அவர் நம்பவேயில்லை. அன்று காலையில் தான் நலியாயிருந்த தமது தந்தை இனி குணப்பட்டுவிடுவார் என்று எண்ணியவராவர். தந்தையும் போய்வா என்று சொல்ல, இவரும் உத்தியோகசாலைக்குச் சென்றவர். அவ்வித நிலையில் தந்தை மறைந்தாரென்ற கொடிய வாசகத்தை நம்புதற்கு எப்படி மனம் ஒப்பும்? உடனே வேகமாய் ஓடிவந்து வீடுசேரவும், அங்கு கூடியிருந்த கூட்டத்தால் தந்தைபோனது உண்மையேதானோ என்று கலங்கினர். வீட்டிற்குள் நுழைந்தார். சிங்காரித்து வீற்றிருக்கவைத்துள்ள தந்தையைக் கண்டார். அழவில்லை, கதறவில்லை. தம்மையே மறந்து செயலற்றவாறு நின்று சிரித்தார்! என் பிழைப்பு சிரிக்கும்படி முடிந்ததா என்றார். மறுகணத்தில் மூர்ச்சையாயினர்!

மற்ருெருவர் தமது வர்த்தகசாலையினின்றும் இல்லம் புகுந்ததும், தம் தந்தை அவரது அறையில் இருக்கிருரா என்று ஜாடையாகப் பார்த்துக்கொண்டு குளிர்ந்த உள்ளமாய்த் தமது உடைகளைக் கழற்றுவது வழக்கம். அத்தகைய விசுவாசி தமது பிதா போன பின்பு அவர் இருந்த அறையின் பக்கமே நெருங்குவதில்லை. அந்தப் பக்கம் தவறிச்சென்றுவிடின் திகீர் என்று வயிறு பற்றிக்கொள்ளும்! உடனே தந்தையின் நினைவு தோன்றித் தடுமாறிவிடுவார். அவர் தன்னைத் தானே திடப்படுத்தித் தேற்றிக்கொள்வதற்குப் பல வருஷ காலங்கள் வேண்டியிருந்தன!

தமது பதினுருவது பிராயத்தில் ஒருவர் 'தான் எத்தொழிலைப் புரிவது' என்று தமது தந்தையை வினவினுர். அதற்கு அவரது தந்தை "உன் தகுதிக்கேற்ற தொழில் எதுவென்று என் உள்ளம் அறியும்; நான் பெற்ற இன்பம் நீயும் பெறுக; பத்திராசிரியனுகவும், நூலாசிரியனுகவும் விளங்கி உலகுக்கும் உனக்கும் உதவிக்கொள்க" என்ருர். அவ்வண்ணமே அவரும் ஆனுர். மாசீர் பெருகிட இது பிதாவின் ஒரு தனி ஆசீர் வசனம்.

தூர நாடொன்றில் இருந்த தந்தையொருவர் தமது அருமைத் திருமகளின் நினைவுதோன்றிடவே வருந்திச் சோர்ந்தவராகி,

"ஆசைக்குமர னருச்சுனனைப் போல்வான்றன்
மாசற்ற சோதி வதனமினிக் காண்பேனே?"

என்று கண்ணீரைப் பெருக்கினுர். அன்னியதேயமொன்றில் தங்கியிருக்கத் தலைவிதி நேர்ந்த தேசபக்தர் ஒருவர் தமது தந்தையின் ஞாபகம் வரப்பெற்றவராய்,

"வேதமுனி போன்ருர் விருத்தரா மெந்தையிரு
பாதமலர் கண்டு பரவப் பெறுவேனே?"

என்று கரைந்துருகினுர். தந்தையின் அன்பே அன்பு! அதன் மாக்ஷிமையே மாக்ஷிமை!! அதனை நன்கு சுவைத்து அநுபவித்து ஆநந்திக்கக்கடவோம் அப்பெரியாரின் பொன்னடி போற்றக் கடவோம். அவரது ஆசியினைப் பெறக்கடவோம். தந்தையின் அளவிடற்கரிய அன்பினைச் சிறிய தந்தையிடம் காண இயலுமோ? ஒருவர் உணர்த்திய அன்பை மற்றவரிடம் பெற இயலா. அதற்கு அதுவே நிகர். மற்றெதுவும் சமானமாகாது. எனவே தந்தையை மறவேல்; தந்தையை மறவேல். நமது தந்தைக்குச் செலுத்தும் அன்பின் வழியில் தான் நமது ஆதித்தந்தையின் அருளினையும் நாம் அடைதற்கு உரியவராவோம். வாழ்க நமது தந்தையின் அன்பு.



தந்தையை மறவேல்.

தந்தையை மறவேற் றந்தையை மறவேல்
தாணடை குறைந்து தலைமயிர் நரைத்துத்
தண்டுகைக் கொள்ளுந் தருணம் வந்ததால்
தந்தையை மறவேற் றந்தையை மறவேல்.

கல்விநீ கற்கக் கைப்பணம் அளித்துக்
கல்வியுங் கீர்த்தியும் கலந்துளா னென்னப்
பெரியோ ருரைக்கப் பெருமகிழ்ச்சி கொள்ளும்
தந்தையை மறவேற் றந்தையை மறவேல்.

இளமை முதலா யின்னாள் வரையும்
வளமையிற் காத்த மகனமக் குளனால்
இனிமனம் வருந்தி ஏங்குவதென்னே !
கனிவுறு மன்பாற் களிப்போ டுருகி
அன்னையும் என்னையும் ஆதரிப் பானென
உன்னி யனைத்தையும் உனக்கென் றளித்த
தந்தையை மறவேற் றந்தையை மறவேல்.

தேகமெலிந்து திடமது குன்றி
சாவுவருந் தினம் ஈதென வறியாத்
திண்ணையி லிருந்து சிவசிவ ராமா
கண்ணனே யடியனைக் காத்திடு வாயெனப்
பண்ணுமோர் செபத்தின் பலனை யறிந்து
தந்தையை மறவேற் றந்தையை மறவேல்.

'அதை வாங்கிக்கொண்டுவா'—'இதை வாங்கிக்கொண்டுவா' என்று பணப்பெட்டியைத் திறவாமலே தங்களுக்கு வேண்டியதைப் பெறப் பார்க்கின்றனர்.

வருமொரு மங்கையின் வாழ்க்கையிற் படுவோய்
ஒருவழி நில்லாப் பெரும் பேதையனே
அன்னை பிதாவோ முன்னறி தெய்வம்
என்னுமிம் மூதுரை யென்றுமே எண்க.

மங்கை பின்னுமோர் மாய வலைப்பட்
டுய்ந்நெறி யறியா துறங்கு மறிவிலோய்
பொல்லாப் பிள்ளையோ வில்லாப் பிள்ளையால்
நல்லறி வாளனாய் நால்வரும் புகழத்
தந்தையைக் காத்துத் தகைமையின் வாழ்கவே.

II

அன்னையின் அன்பு.

(ஸ்ரீமான் கா. ரா. நமச்சிவாய முதலியாரவர்களின் வாசீது.)

அன்னைதன் அன்பை அறைகுவேன் கேளாய்!
ஈயே மொய்க்கினும் எறும்பே சுற்றினும்
நோயே காணினும் நொடியே நேரினும்
அழுகை ஒன்றே அதன்மொழி யாகத்
தழுவிய சேயாச் சாரும் நாளில்
அவ்வக் காலத்து அதனதன் குறிப்பைச்
செவ்வி தாகத் தெரிந்தே யாற்றியும்
அந்தக் குழந்தை அடைந்திடும் நோய்க்காத்
தந்திடு மருந்தைச் சார்வுடன் கொண்டும்
உப்பே யில்லா உணவினை யுண்டும்
கப்பிய இரவெலாம் கண்விழித் திருந்தும்
உடல்நோ தன்னுடன் உள்ளநோய் கொண்டும்
விடலில் அன்பு மேலும் மேலும்
குலவும் அன்னைதன் குணங்கள் முற்றும்
நிலவும் வகையால் நிகழ்த்தவும் படுமோ?

அநுபவம் என்பது தவறியும் பிசகியும் போனதிலிருந்தும் பெறும் நூதன அறிவு—ஞானம்,

ஔவையாரும் திருவள்ளுவரும்

“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்னும் ஔவையார் வாக்கின்படி, திருவள்ளுவரும் **ஆதி—பகவன்** என்னும் தம் மாதா பிதாக்களை முதற் குறளிலேயே குறிப்பால் தொழுகிறார். அல்லாவிட்டால், தெய்வத்தைக் குறிக்கும் செந்தமிழ்ப் பதங்கள் எத்தனையோ இருக்கவும், **ஆதி—பகவன்** என்னும் இரண்டு வடமொழிகளை யெடுத்துக் கடவுளைக் குறிக்கக் காரணமில்லை. இவற்றைப்போல் ஒற்றுமையை விளக்குவன இன்னும் அநேகம் இருக்கின்றன.

ஆத்திசூடி.	திருக்குறள்.
21. நன்றி மறவேல்.	108. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல, தன்றே மறப்பது நன்று.
39. கேள்வி முயல்.	411. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ், செல்வத்து ளெல்லாந் தலை.
59. தூக்கி வினை செய்.	467. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி, னெண்ணுவ மென்ப திழுக்கு.
67. நிலையிற் பிரியேல்.	964. தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர், நிலையி னிழிந்தக் கடை.
103. ஊருடன் கூடி வாழ்.	140. உலகத்தோ டொட்ட வொழுகல் பல கற்றும், கல்லா றறிவிலா தார்.
கொன்றைவேந்தன்.	
7. எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்.	392. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென்பவாழு முயிர்க்கு.
13. ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு.	168. அழுக்கா றெனவொரு பாவி திருச் செற்றுத், தீயுழி யுய்த்து விடும்.
27. சான்றோ ரென்கை ஈன்றோர்க் கழகு.	69. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச், சான்றோனெனக் கேட்ட தாய்
74. முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும்.	319. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா, பிற்பகற் றாமே வரும்.

29. சீரைத்தேடி னேரைத்தேடு.	1033. உழுதுண்டு வாழ்வாரே வாழ் வார் மற்றெல்லாந், தொழு தூண்டு பின்செல்பவர்.
46. தொழுதூண் சுவையி னுழு தூணினிது.	
77. மேழிச் செல்வங் கோழை படாது.	

சி. சுப்பிரமணியாசாரியர், பி. ஏ., எல். டி

இந்த ஒருவனுல் நின்றுவிடாது.

தொடர்ந்து ஒரு பத்திரிகையையோ ஒரு தொழிலையோ நடத்திச் செல்லுபவருக்கு எத்தனையோ பேர்கள் எத்தனையோ காலங்களில் எவ்விதமோ உதவி மனுஷ்யர்களாய் வந்து எவ்வளவோ உதவிகளைப்புரிந்து காரியானுகூலம் செய்கிறார்கள். அதில் ஒருவர் தமது உதவி இல்லாவிடில் ஒரு காரியமும் ஆகாதென நினைத்துக்கொள்ளுகிறார். எப்படி நடக்கிறது பார்ப்போமென விலகுகிறார். அவர் போனபின்பும் எப்போதும்போலவே எல்லாக் காரியங்களும் நடந்தபடியே யுள்ளன. நூல்களோ, பத்திரிகையோ காலதாமதப்பட்டு விடுவதில்லை. தம் அறிவின் சக்தியை நம்பியவர்களுக்கு ஈசனே துணையிருந்து தொழிலை நிறைவேற்றுவிக்கிறார். தன்னால் தான் சக்கரம் சுற்றுவதாய் நினைத்துக்கொண்டிருக்கும் அந்த அற்பமான ஈ அந்த சக்கரத்தை விட்டுப்போன பிறகுங் கூடச் சக்கரம் சுற்றியபடியே தான் இருக்கிறது!

வீட்டிற்குள்ளேயே குலாவிக் கற்பைக் கெடுத்தவன் பெயர் வெளி வருவதில்லை. ஏதோ அவன் ஜாடை காட்டினனும், அது மெய்யோ பொய்யோ; அது மட்டும் வெளிவந்து பெரிய சண்டையாய்ப் பிரமாதமாகிறது!

விபசாரம் என்பது ரகசியமாயிருந்தால் மானக்குறைவு இல்லையாம்! வெளிவந்தால்தான் மானக்கேடாம்! இது சிலரின் சுயநல சித்தாந்தம். இவர்கள் கடவுளை மறந்து விடுகின்றனர்.

நல்ல பணக்காரர்கள் விசேஷ காலங்களில் இன்னொரு வீட்டில் விருந்தினராய்க் குந்திவிடுகிறார்கள். செலவு மிச்சப்படுத்தவாக்கும்! தங்கள் வீட்டிலேயே நல்ல நாளில் உண்ணக்கொடுத்து வைக்கவில்லையே!

குழந்தைகள் பக்கம்

ரகர றகர பேதங்கள்.

(322-ம் பக்கத் தொடர்ச்சி.)

8. **அர்க்கம்**—எருக்கு. **அற்கம்** வெண் துளசி. (8) விஷ்ணு அர்ச்சனைக்கு அற்கம் பறித்து வருவதற்கு மாறாய் அர்க்கம் கொண்டுவந்ததால் அவனை அதட்டிக் கோபித்தான்.

9. **ஆரல்**—ஆரான் மீன். **ஆறல்**—ஆறுதல். (9) பூனை ஆறல் பொருக்காது சமைத்த ஆரலைத் தின்றது.

10. **ஆரை**—கோட்டை, அரண். **ஆறை**—ஆற்றூர். (10) ஆறையில் பலத்த ஆரையொன்று கண்டேன்.

11. **இந்துரு**—பெருச்சாளி. **இந்துறு**—இலந்தை. (11) அவன் முளைக்கப் போட்டிருந்த இந்துறு வித்தை, இந்துரு நேற்றிரவு தோண்டி எடுத்து விட்டது.

12. **இரங்கல்**—அழுதல். **இறங்கல்**—இறங்குதல். (12) அவன் தூக்கு மேடையினின்று மீண்டும் இறங்கலைக் கண்ணுற்ற யாவரும் இரங்கலுற்று நின்றனர்.

13. **இரத்தல்**—பிச்சை. **இறத்தல்**—சாதல். (13) தான் பிறந்த ஊரில் இரத்தலினும் இறத்தல் நலம்.

14. **இரப்பு**—தரித்திரம். **இறப்பு**—சாவு. (14) இரப்பு காலத்தில் இறப்பு வெகு நலம்.

15. **இரவு**—இராத்திரி. **இறவு**—இறப்பு. (15) இறவு காலத்தில் இரவு வெகு தொந்தரை செய்யும்.

16. **இரவை**—அற்பம், வச்சிரக் கல். **இறவை**—ஏணி. (16) திருட்டுத் தனமாய் மதிலின் மேல் இறவைச் சாத்தி அதின் வழியாய் ஏறி, இரவைப் பெட்டியைத் தூக்கிச் செல்லல் இரவைத் தொழிலாம்.

17. **இருத்தல்**—தங்கல். **இறுத்தல்**—வெட்டல். (17) இன்றிரவு என்னை இங்கு இருத்தல் செய்யில், ஏதோ இறுத்தல் செய்யுமுபாயத்திற்கோவென்று அஞ்சுகிறேன்.

18. **இருப்பு**—இருக்கை. **இறுப்பு**—குடியிறை. (18) அளவிற்கு மிஞ்சிய இறுப்புக்குடி இருப்புக்குத் துன்பத்தைத் தரும்.

19. **இரும்பு**—கரும்பொன். **இறும்பு**—தாமரைப்பூ. (19) இரும்பு வளையல்களில் தொங்கவிட்டிருக்கும் மலர்ந்த இறும்புச் சரத்தைப் பார்.

(20) **இரை**—உணவு. **இறை**—அரசன். (20) இறையவன் தினந்தோறும் பட்சிகளுக்கு இரை போடும் படி உத்திரவு கொடுத்தான்.

21. **இரைதல்**—சீறுதல். **இறைதல்**—சிதறுதல். (21) புற்றினின்

உத்தம மனையாள் வேண்டுமென்று கோருபவனுக்கே உதவாக் கரையான ஒருத்தி வந்து சேருகிறாள்.

றும் பாம்பு இரைத்தெழும்பியதால், அதின் வாயினின்று இரத்தினம் இறைந்து விழுந்தது.

22. இரைப்பு—வீக்கம். இறைப்பு—இறைக்குந் தன்மை. (22) உன் கையில் இரைப்புள்ள புண் இருத்தலால், நீ இறைப்புச்சால் பிடித்திறைத்தல் கூடாது.

23. ஈரல்—பித்திருக்குந்தானம். ஈறல்—துக்கம். (23) ஆட்டின் ஈரலைப் பிடுங்கித் திருகியதைப் பார்த்த அதன் குட்டி ஈறல் உற்றது.

24. உரக்கம்—வசத்தி விருப்பு. உறக்கம்—நித்திரை. (24) அவன் உரக்கத்தில் (ரொக்கத்தில்) வைத்திருந்த சொத்தை, அவன் உறக்கம் கொள்ளும் சமயம் பார்த்து எவரோ கொண்டுபோய்விட்டார்கள்.

25. உரண்டை—காக்கை. உறண்டை—துற்கந்தம். (25) மேல் மாடியில் உரண்டை செத்துக் கிடந்ததால் அதன் உறண்டையால் யாவரும் வெறுப்படைகிறார்கள்.

26. உரவு—அறிவு, வலிமை. உறவு—சுற்றம். (26) என் உரவை உறவோர் நன்கு தெரிந்துதான் இவ்விதம் அடங்கியவாறுள்ளார்.

27. உரல்—கோட்டான். உறல்—கிட்டல். (27) உரல் பிடிக்கத் தடாகம் உறல் அபாயம்.

(தொடரும்.)

செலவு என்ன ஆகும்?

எல்லோரும் வந்து—போக—இருக்கவேண்டு மென்பது என் நினைவு; நீங்களோ அதற்கு எதிரிடை என்கிறாள் மனைவி. அதற்குக் கணவனோ—'எல்லோரும் வரவேண்டியதுதான், பந்துக்கள் வந்து போய்க் கொண்டிருக்க வேண்டியதுதான், ஆனால் ஒரு கூட்டமாகப் பத்து நாள் குந்திவிட்டால், அதை நிர்வகிக்க சிறு வருமானம் போதாதே. வரவு வீட்டுச் செலவுக்கு மட்டுமே சரிகட்டக் கூடியதாகிறது. மேல் விருந்துகளுக்கு அதிகம் உபசரிக்க சக்தியில்லையே. செலவு என்ன ஆகும்—என்கிறான். விருந்தினருக்கு மட்டுமல்ல, கொண்ட மனைவிக்கும், பெற்ற பெண்ணுக்கும் நாலு நகைகள் செய்ய விரும்பியும் அதற்கு—செலவு என்ன ஆகும்?—என்று பார்க்கிற வகையில் மௌனமாய்விட வேண்டியதாய் எனது வரவின் நிலைமை இருக்கிறதே என்கிறான். மனைவியோ இவற்றையெல்லாம் காதில் வாங்குவதாகக் காணோம்!

பச்சைத் தண்ணீரில் குளிப்பது நினைத்தவுடனே. வென்னீரில் ஸ்நானமாயின் அதை வைத்துத்தர மனுஷ்யர்கள் வேண்டும், காத்திருந்து குளிக்க வேண்டிய தொல்லைபிடித்த சங்கதி.



வழக்கம் போல் நமது கடை கூடிற்று. "நமது நாட்டினது வருங்காலத்தின் முன்னேற்றத்துக்காகத் துருக்கிக்குச் சென்று பயிலுமாறு அனுப்பப்படும் மாணவர்களை ஆப்கானிஸ்தானத்து ராணியார் முத்தமிட்டு அனுப்பியதாக பத்திரிகைகளில் படித்தேன். அதுசமயம் என் குமாரன் பாடசாலைக்குச் செல்லுவதற்காக வீட்டு வாயிற்படியைத் தாண்டினான். அவனையழைத்து அவன் இரு கன்னங்களிலும் முத்தமிட்டு போய்வா அப்பா என்று அனுப்பி, ஆப்கானிஸ்தானத்து ராணியார் அநுபவித்த ருசி என்னவாறு இருக்குமென்பதை ஒரு வகையாய்த் தெரிந்துகொண்டேன்'' என்று புளகித மனத்தினராய் அல்லா பிச்சை கூறினார்.

***

ஊருக்கு அஞ்சுகிற காலம் புளிய மரம் ஏறிவிட்டது என்று தாண்டவக்கோன் சொன்னார். "ஒருவன் தான் என்ன அக்கிரமம் செய்தாலும் அதற்குப் பயப்படுகிற காலம் இதுவல்ல. தர்ம நினைவுடன் தங்கை தம்பிகளைக் காத்துக் கல்யாணம் செய்து கொடுத்தால்தான் உண்டு. இல்லாவிட்டால் அவனை என் என்று கேட்பவர் இல்லை. கேட்கக்கூடிய மனுஷ்யர்களும், கட்டுப்பாட்டின் சக்தியும் இருந்தால் கோயில் குருக்கள் பகிரங்கமாய் பிராமணத் தெருவில்தானே வேறு ஜாதி ஸ்திரீயை வைத்துக்கொண்டு அவளுக்குப் பிறந்த குழந்தைகளுடனே நிற்பாரா? இந்தக் குருக்களே கோயில் வேலையையும் செய்வதை யார் கண்டிக்கிறார்கள்?'' என்று கேட்டார்.

***

தன் சுயநலம் நாடிப் பிறர் க்ஷேமத்தை வெகு அக்கரையான பாவனை காண்பித்து விசாரிக்கும் 'பாவனைத் திரைகள்' பலபல வென்று பக்கோடா பிள்ளை கூறினார். "தனது விஷயத்தை முடித்துக்கொண்டு விடுவதற்காக ஒருவனை வீட்டிற்கு வெகு பிரியமாய் அழைப்பதான பாவனை செய்து அவனுக்கு விருந்திடுவது; விவாகத்தில் மாப்பிள்ளைக்கு மிக வேண்டியவனான பாவனை செய்து அவனுடன் கூடிக் குலாவுவது; இப்படியே பாவனைத் திரைகள் அநேகம் நெடுக உண்டென்றும், இந்தப் பாவனையின் திரையை விலக்கிப் பார்த்தால் உடனே சுயநலத்தின் உண்மை வெட்டவெளிச்சமாய்விடு'' மென்றும் அவர் பேசினார்.

***

"ஆள் பலம் இல்லாத குடும்பத்தானை உலகத்தார் பொருட்செய்ய மாட்டார்கள். ஒரு அற்ப வார்த்தைக்குக்கூட எதிர் மனிதன் அவர்களிடம் கையை ஓங்கிவிடுவான். ஒரு அவசரத்துக்கும் ஆபத்துக்கும் உதவ மனிதர்கள் இல்லாமல் அவன் திண்டாடவரும். எப்பொழுதுமே சுகமாகவும் நோயின்றியும் சோதனைப்பொழுதற்றும் இருக்கிற காலம் மனித வாழ்

என் குமாரனிடமே இருப்பேன், கணவனிடம் இரேன் என்று சொல்லும் பெண்ணைக் கோர்ட்டார் என்ன செய்ய முடியும்?

வில் இல்லை. ஆகவே, எதற்கும் ஒரு உதவியாக நிற்க 'ஆள் பலம்' ஒருவனுக்குத் தேவை. இனி எப்போதோ ஒரு சமயத்துக்கு உதவுவதற்காகவே பலருக்கும் அன்னமிட்டும், உபசரித்தும், அறிமுகம் நட்பு கொண்டாடியும் மனுஷ்யர்களைத் தன் பக்கத்தில் சேர்த்துக்கொண்டிருப்பது உலகின் ஒரு வாடிக்கையான போக்கு" என்று கெட்டிச் செட்டியார் தமது பிரசங்கத்தை மடமடவென்று கொட்டினர்.

***

"நாசப்பார்வை"யைப் பற்றி நடுவீதி நம்பியார் பின்வருமாறு விவரித்தார். "தாசி ஒருவனை ஜாடையாகப் பார்க்கும் பார்வை நன்னோக்கத்துடனா? அல்ல. அவன் வாழ்க்கையை நாசமாக்க நினைக்கும் பார்வை அது. அவன் மனைவியை ஒண்டிக்காரியாக்கித் திண்டாடச் செய்ய எண்ணும் பார்வை அது. தாயாதி ஒருவன் நம் வீட்டிலே உண்டுவிட்டு மேலே வீட்டின் அழகைப் பார்க்கிறான். அது என்ன பார்வை? இவனும் இந்த வாழ்வு வாழ்கிறனா? இவன் சந்தி சிரித்து நடுத்தெருவுக்குவந்து நட்டுக்கொள்ள வழிவகையொன்று மில்லையா என்று எண்ணுகிற நாசப்பார்வை அது. ஒருவனுடன் ஒருவன் வெகு பிரியமாகப் பேசுகிறான். அது என்ன பார்வை? அவனை மயக்கித் தன் காரியத்திலிழுத்து அவன் பொருளை நாசப்படுத்த நினைக்கும்பார்வை. இவ்விதமே நாசப்பார்வைக்கு நெடுக வியாக்கியானம் செய்துகொள்ளலா" மென்றார்.

***

பூனைகள் புலிகளாவதைப் பற்றி புஸ் புஸ் முதலியார் புகன்றதாவது:— "தன் வீட்டில் ஒருவரைப் புகவைத்து விட்டுப் பிறகு அவர்களால் தான் நொந்துபடும் வேளையில், ஏனடா இவர்களை உள்ளுக்குள் வந்து தங்கியிருக்க வைத்தோம் என்று வேதனை மிகுவோர் வெகு பேராவர். பிறகு ஸஞ்சலசித்தம் தோன்றுதிருத்தற்காக முன்னதாகவே ஒரு துணிவான தைரியத்துடன் அவர்களை உட்புகாதபடி தடுத்துவிட முயலுகை ஆயிரம் விதத்தில் நன்மையாக முடியும். அவர்கள் வாயிற்படியில் காலை மிதிக்கும் சமயம் பேசும் பேச்சு வெகு அடக்க வணக்கமாகவே எங்கும் இருக்கும். பின்னர் உட்புகுந்துவிட்டாலோ, முந்திய பூனைகள் பிறகு பெரிய புலிகளாய் நம்மீது பாய்ந்து நம்மையே அதிகாரம் செய்யத் தலைப்பட்டுக் கொள்வார்கள். ஆதலின், வருமுன் காத்தல், நெஞ்சுத் திறங்கொண்டு மறுத்தல் இவற்றை முதலிலேயே சிந்திக்கை எக்காலத்தும் நலம் செய்யும்" என்றார்.

***

அவரவர் அநுபவங்கள் வெவ்வேறு என்று அல்லாபிச்சை ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தார். "வீட்டுக்காரன் தான் வெளியில் நாலு காசு சம்பாதிக்கப் படும்பாட்டை வீட்டிற்குள் இருக்கிற பெண்கள் அறிவதில்லையென்று கூச்சலிடுகிறான். இவன் என்ன கதறினுலும், ஆடவர்கள் வெளியில் படும் ஜீவனார்த்த கஷ்டத்தை அப்படியே உள்ளபடி வீட்டினுள் முருங்கக்காயை அறுத்துக் குழம்பாக்கும் பெண்கள் உணர்வது கஷ்டம். அவர்களுக்கு நகை சேலை இன்னும் இஷ்டப்பட்டவைகள் தக்கபடி தங்களுக்கு வாங்கித்தரவில்லை யென்பதிலேயே கண்ணுயிருக்கும். அவ்விதமே ஆடவர்களும் எவ்வளவு தெளிவாகப் பன்னிப்பன்னி யுரைத்தாலும் ஸ்திரீகள் படும் பிரஸவ வேதனையைத் தங்க

அண்ணன் தம்பிகளாயினும் மற்றவரது மனைவிகளிடம் பழகுவதில் ஒரு மட்டு, மரியாதை, நிதானம், ஒரு எல்லை, ஒரு கிரமம் இருக்கவேண்டும்.

வின் சொந்த அறிவால் பகுத்துணர்ந்துகொள்வது முடியாததாகவே இருக்கும். பிரஸவம் ஆகி முன்னைப்போல் தம் இல்லக்கிழத்தியருடன் ரமித்திருக்கும்நாள் எப்போதோ என்பதில்தான் அவர்களின் திருஷ்டி பாய்ந்திருக்கும். ஒருவரின் அநுபவத்தை இன்னொருவர் அப்படியே அவ்வுருவிலிருந்து பட்டாலன்றி உணர்ந்து கொள்ளுதல் முடியாததாகும்'' என்றார்.

***

பெரிய பெரிய அளவில் அநேக நூல்களைப் பொத்து பொத்து என்று பெற்றுப் போட்டுவிட்ட ஒரு வங்க நாட்டு நூலாசிரியர் நமது கடைக்கு வந்திருந்தார். அவர் தமது கஷ்டங்களைப்பற்றி ஒரு குறிப்புரை நவின்றார்.—"எவரையேனும் சந்திக்கவோ பேசவோ நான் விரும்பவில்லை. எனெனில் அதற்குப் பொழுது இல்லாததே காரணம். அவ்வித சந்திப்புகளில் என்னுடைய விலையேறப்பெற்ற காலம் வீணாவதன்றி, நான் வரைவதற்கு யோசித்து நிற்கும் விஷயங்களுக்கு என்னைக் காண வருபவர்கள் குறுக்கிடுவதால், அவற்றை வேகமான கதியில் எழுதிச் செல்வதற்கும் தடைபட்டு விடுகின்றன. எழுதிக்கொண்டிருக்கும் விஷயமும் பாதியளவில் நின்று மறுபாதிக்கான தொடர்புள்ள சங்கதிகள் மறந்தும் விடுகின்றன. நான் உண்மையில் தொண்டு செய்கிறேனென்று என்மீது விஸ்வாசம் வைத்துள்ளவர்கள் தூர இருந்து கொண்டே என் க்ஷேமத்துக்கும் விருத்திக்கும் கடவுளைப் பிரார்த்திப்பது உத்தமமாக இருக்கும். என்னைக் காண விரும்பும் அவாவினைப் பல்லாயிரக் கணக்கில் வெளிவந்துள்ள என் உருவப் படங்களைப் பார்த்துத் திருப்தியுற்று அவ்வாறாக அன்பு செலுத்த வேண்டுகிறேன். அவ்விதமின்றி என்னைக் காண வருவதையும், எனது நல்ல வேலையின் நேரத்தில் பல பேச்சுகளை எடுத்து அந்த வேலைக்குத் தடை செய்வதையும் நான் விரும்பவில்லை. என்னைத் திரை மறைவிலேயே இருக்கவிட்டு, என் நூல்களைக் கொண்டு தூர இருந்தே சந்தோஷப்படப் பார்ப்பதுதான் எனக்குச் செய்யும் பெரிய உதவியும் வந்தனமுமாகும்'' என்றார்.

***

பொன்வண்டு செட்டியார் தமது தேகாரோக்கியத்திற்காக நான்குமாதரஜாவில் பாரீஸ் நகரத்துக்குப் போயிருப்பதால் எவருடைய கையொப்பத்தைவைத்துப் பத்திரிகைக்கு அனுப்புவதென்று கடையின் அங்கத்தினர்கள் யோசித்தனர். கடைசியில் கையொப்பமின்றியே அனுப்புவதென்று முடிவு செய்யப்பட்டு நமது கடையும் பூர்த்தி பெறலானது.

ஒரே விஷயம் ஒருவனுக்குக் கெடுதலாகவும், இன்னொருவனுக்கு நல்லதாகவும் தோன்றுவது அவரவர்களின் குண—மனோ வேறுபாட்டினால்தான்.

ஒருவனுக்குத் தீங்கு விளைத்து அதன் மூலம் பிறனொருவனுக்கு நலம் செய்வதினும், அந்தத் தீங்கையே செய்யாதிருப்பது மேல்.

சினிமா படக்காட்சிகளில் நன்னடக்கைகளைவிட, கெட்ட நடக்கைகளே மனதில் நன்கு பதியும்படி காக்ஷிகள் தோன்றுகின்றன.

காதலின் இன்ப மொழிகள்.

[இவை "விசித்திரத் துப்பறியும் கண்" என்ற நாவலிலுள்ள காதற்கடிதங்களி லிருந்தும் திரட்டப்பட்டவை.]

(325-ம் பக்கத் தொடர்ச்சி.)

(17) உனக்கு நண்பர் பலர் இருப்பினும், பிறரால் மிக்க மரியாதை யுண்டாயினும் உன்னுடைய மனைவியின் கூட்டுறவிற்கு இணையாகுமோ? உன்னுடைய மனைவியின் இனிய பேச்சுக்கும், அழகிய நடைக்கும், அளவற்ற அன்பிற்கும் ஒப்பாகுமோ? (26)

(18) பழய சாராயத்திற்கும் பழய நண்பர்களுக்கும், பழய ஆசாரத்திற்கும், பழய (முதன்)மனைவிக்கும் நாளாக நாளாக மதிப்பதிகம்—கோல்ட் ஸ்மித் பண்டிதர். (40)

(21) மனைவி ஓர்பால்; கணவன் ஓர் இடம்: மக்கள் ஓர் ஊர்; இவ்வாறு தம்பதிகள் பிரிந்திருந்தும், மனைவியோ அவள் உயிரைக் கணவனிடம் வைக்கிறாள். கணவனுக்கோ மனைவிமீது அளப்பரிய அன்புண்டு. அவர் தம் மக்களுக்கோ அவர்கள் மேல் எந்நேரமும் சிந்தை. கணவன் மனைவியை என்றும் அகக்கண்ணால் காண்கின்றான்; மனைவி சூக்ஷ்மசரீரமாக அவன் அருகில் எப்போதும் அமர்கிறாள். அவர் தம் மக்கள் அவர்கள் நெஞ்சில் எஞ்ஞான்றும் வசிக்கின்றனர். இவ்வாறு அவர்கள் உடல் வேறாயினும் மனமோ ஒன்றாகும். இதுவன்றோ குடும்பம் என்பது. இதுவன்றோ மனையாட்சி என்பது. (42)

(22) அறிவில்லாதவரே கஷ்டம் நேர்ந்தால் துக்கத்தில் முழ்கித் தூக்கத்தைத் தவிர்த்துச்சோற்றை யொழிப்பவர்கள். சோற்றை யொழிப்பதால் நோயுண்டாகித் துன்பம் அதிகரிக்கு மென்பதையும், அதனால் மற்றவர்க்கும் கஷ்டம் நேரு மென்பதையும் எண்ணார்கள். இதனால் வாய்க்கும் பயன் யாது? (44)

(23) ஒருவர்க்கு வாழ்க்கைத் துணைவி வாய்க்காவிடில் அவர்களுடைய கல்வியும், அறிவும், கனமும், வாழ்க்கையும். குன்றிவிடும். (45)

(24) ஆண்மக்களுடைய நடையும் குணமும் கட்பார்வையும் தாழ்ந்துள்ளவரை, பெண்கள் அந்நியர்களிடத்தில், பந்துக்களிடமுங்கூட எச்சரிக்கையாய்த் தூரவே நிற்கவேண்டும். (45)

(25) சிறுவர் எக்காலத்தும் அன்று மலர்ந்த அருமலரே யாவர். அவர் தூய மனதுடையவராதலால் கடவுளின் தன்மையுடையவர். (45)

(26) சிறுவரைச் சார்ந்த முதியோரும் தம் துயர் தொல்லை நீங்கி, இளமை வடிவம் தாங்கிச் சிறுவராகி சிறுநகை மிகுவார். சிறுவரோடு சிறு சிறு விளையாடலின் மகிழ்ச்சியிலும் கலப்பார், தம்மையும் மறப்பார். தம் பருவ முதிர்ச்சியையும், தம் பதவியி னுயர்ச்சியையும் அதுகாலை எண்ணார், இளங்குழந்தைகளோடு தாமும் ஓர் குழந்தை யாவர். இதனினும் சிறந்த இன்பம் எங்கு உண்டு? (45)

(27) காதலில் தவறின் சாதலே முடிவு. சாகாவிடினும் சாரமற்ற வாழ்க்கையே அது. (45)

எதிலும் ஒரு அளவோடு நிற்கவேண்டும். மிஞ்சினால் பைத்தியத்திற்கோ அலக்ஷியத்திற்கோ, அவமானத்திற்கோ கொண்டுவந்து விடும்.

(28) படித்தவருக்குப் படியாதவரை கூட்டுவிக்கும் பெற்றோர் மகா கொடியவராவர். (45)

(29) ஓர் வாலிபனும் ஓர் மடமாதும் தனியே சந்திப்பாராயின் ஒருவரை யொருவர் மோகிப்பது இயல்பாகும். (45)

(30) குணம் குறி முதலியவற்றைத் தீர விசாரித்துத் தேர்ந்தபின் காதல் கொள்ளுவார் என்பது எங்கும் இல்லை. (45)

(31) நீ உன் தாய் வீட்டாரால் மதிக்கப்படாவிட்டாலும், உன்னை மணந்த உன் கணவர் உன்குணத்தை உள்ளபடி உணர்ந்து உன்னைப்போலும் பெண்கள் நாயகம் உலகில் இல்லை யென்றும், நீ அவர் கண்ணின் கருவிழியைப் போன்றவ ளென்றும் உன்னை யெண்ணியுள்ளபோது, மற்றவர் எவ்வாறு மதிக்கினும் என்ன ? (47)

(32) வாழ்வை அரண்செய்வதும், வாழ்க்கையை அழகுடன் கட்டியமைப்பதும் பெண்களின் வேலை. (50)

(33) வீடு, சொத்து, அழகு, அலங்காரம், கவி, கூத்து, பாட்டு, அரசாங்கம் இவைகள் உலக வாழ்வுக்கு இல்லாமல் முடியாது. (50)

(34) ஆண்பிள்ளைக்கு வீடு வேண்டியதில்லை. எந்த மண்ணிலும் அவன் படுத்துப் புரளுவான். சொத்து அவனுக்கு எதற்கு ? இயற்கையில் மலிந்து கிடக்கும் காய் கிழங்குகளைப் பறித்துத் தின்றுவிட்டு எவ்விடத்திலும் படுத்து உறங்குவான். (50)

(35) உலகவாழ்வு வேண்டாம் என்று வெறுத்துத் தள்ளுபவர்கள் அனேகரும் ஆண்பிள்ளைகளே. பெண்பிள்ளைகள் சன்னியாசம் கொள்ளுவது அரிதரிது. (50)

(36) தாயாகவேண்டும் என்ற உணர்ச்சி பெண்ணின் உள்ளத்தில் துடித்துக்கொண்டிருக்குமளவும், பெண்பிள்ளை உலகத்தைத் துறந்து வாழமுடியாது. (50)

(37) பெண் என் அழகுபடத் தோன்றுகின்றாள் ? அவள் தியாகம் செய்யத் தயாராயிருப்பதால் அவள் முகத்தில் அழகு பொலிந்து விளங்குகின்றது. (51)

(38) குழந்தைகளை விட்டுவிட்டு ஓடின தாய்மார்களைக் காணுவது அருமை. குழந்தைகளைத் தவிக்கும்படி விட்டு ஓடின தகப்பனார்கள் எத்தனையோ பேர்கள். (51)

(39) நாட்டுக்காகப் பெண்பிள்ளைகள் உழைக்க வேண்டும். வீட்டுக்காகவும் நாட்டுக்காகவும் ஆண்மக்கள் பாடுபடவேண்டும். ஆணுக்கு வீட்டிலே பற்றும் பொறுப்பும் விழவேண்டும். பெண்களுக்கு நாட்டினிடம் மனக்கண் விரியவேண்டும். இவ்வாறு அமைந்தால்தான் நாடு செழித்து நாமும் க்ஷேமம் பெறலாம். (51)

(40) உன் வீட்டிற்கு நீ இராஜா தான். உன் குடிசை உன் மாளிகை. உன் வீடு குச்சாயிருந்தாலும் சரி, மச்சாயிருந்தாலும் சரி, அது மாளிகைதான். (52)

(41) உன் வீட்டு அடுப்பில் காய்ச்சும் அன்னபால் அரசர் மாளிகையிலுள்ள பாலிலும் மேல். உன் சட்டியில் சுண்டும் கலவைக்கீரை சக்கரவர்த்தியார் சாப்பிடும் சகல பதார்த்தங்களிலும் மேல். (52)

ப. சி. கோவிந்தசாமி ராஜா.



உன் நோக்கம் என்ன?

எத்தன்:—நீ வெகு உறவுகொண்டாடுகிற அந்த மனுஷ்யன் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவன். அவன் வீட்டுக்கே நான் போய் வந்திருக்கிறேன். எல்லா சங்கதியும் எனக்குத் தெரியும்.

சித்தன்:—அப்படியா சங்கதி! எப்படியோ அவன் நல்ல மனுஷ்யனென்பது மட்டும் உண்மை. நீ இவ்வளவு சிரத்தையுடன் அவனைக் குறித்துப் பேசுவதின் நோக்கமென்ன? அவனை நான் தாழ்வாயும் கேவலமாயும் நினைக்க வேண்டுமென்றா?

* * *

எது முக்கியமோ அதற்குப் பதில்:—

பிரயாணி:—ரயில்வே ஸ்டேஷன் எவ்வளவு தூரம் இருக்கும்?

வழிப்போக்கன்:—தங்களுக்கு ஸ்டேஷன் வேண்டுமா? ஏறுவதற்கு ரயில் வேண்டுமா? ரயில் வேண்டுமானால் நீங்கள் இப்படி நடக்கக்கூடாது. வெகு வேகமாக நேரே ஓடினால்தான் இந்த 12-மணி வண்டி கிடைக்கும்.

* * *

சொன்னதைக் கிரகிக்கப் புத்தியில்லை:—

கிருஷ்ணன்:—நண்பரே! இதோ இடிந்துபோயிருக்கும் இந்தக் கோட்டை பண்டையகாலத்தது. இதோ எதிரிலிருப்பது முன்னே ராஜன் கொலுவு இருந்த இடம். அதோ தெரியும் அது இராணியிருந்த அந்தப்புரம். ஹா! என்ன அபூர்வவேலை.

கோதண்டம்:—அதெல்லாம் சரிதான். இந்தக் கோட்டையை இப்போதுபோட்ட இந்தப் புதிய ரயிலுக்கு அருகாமையில் கட்டாமல் ஏன் இவ்வளவு தூரம் கொண்டுவந்து கட்டினார்கள்? அது மூடத்தனம் தானே?

* * *

வம்பர் மகா சபை:—

நீலா:—என் மகள் ராஜம் சங்கதி கேட்டாயா? அவர் 'நெருங்கி' வந்து வருஷம் ஆயிற்றாம். என்னவோ அவர் மனதுக்கு வியாகூலமாம்.

கீலா:—இருவரும் தினமும் அறைக்குள்ளேதான் தூங்குகிறார்கள். 'இல்லாமல் இருக்குமா?' நீ என்ன சொன்னாலும் நான் நம்பமாட்டேன். வியாகூலமென்ன வந்தது—அப்போது தான் அதிக குழந்தைகள் உண்டாகிறார்கள்!

* * *

பணம் தராமலே வாங்கிவரச் செய்தபிறகு அதற்குப் பணம்தர மறந்துவிட்டு, வாங்கிவந்தவன் போனபின்பு வெகுவாய் வருந்துவோர் சிலர். நாளை தருவதாய் நாட்களைக் கழிப்போர் சிலர்.

இரக்கமான தீர்ப்பு :—

நியாயாதிபதி:—உன் குற்றத்திற்கு இரக்கம்கொண்டு ஏழுநாள் காவல் தண்டனை விதிக்கிறேன்.

குற்றவாளி:—ஆனால், ஒரு வாரத்துக்குள் எனக்குக் கல்யாணம் ஆகப் போகிறதே. எல்லாம் சித்தமாய்விட்டதே.

நியாயாதிபதி:—அப்படியாயின் உன்மீது பின்னும் இரக்கம் கொள்ளுகிறேன். உன்னை மணக்கும் பெண்ணுக்காக உருகி ஐம்பது ரூபாய் அபராதம் மட்டும் விதிக்கிறேன்.

* * *

தஞ்சாவூர் மேளம் :—

கேசவன்:—நீ வந்தபோது நான் வீட்டிலில்லைதான். தஞ்சாவூர் மேளம் கேட்கப்போயிருந்தேன். வெகு நன்றாயிருந்தது.

வாசவன்:—நீ கேட்டபடியே அந்த மேளத்தை உனக்குக் கொடுத்தார்களா? எங்கே காட்டு?

கேசவன்:—ஐயோ உனக்கு மூளையில்லையே!

* * *

தகுந்த பதில் :—

தாயார்:—(பையனின் காதைப் பிடித்துக் கிள்ளி) ஏனடா அந்த நாயின் வாலில் பட்டாசைக் கட்டிக் கொளுத்தினாய்?

பையன்:—நீ என் அம்மா அக்காவின் மூக்கை அலற அலற ஊசியால் குத்தி ரத்தம் பெருகப் புண்ணாக்கினாய்?

தாய்:—அது அவளுக்கு மூக்குத்தி போட.

பையன்:—அப்படியே நானும் நாய் கத்துகிற வேடிக்கையைப் பார்க்க.

பி. ஜி. குலசேகரன்.

நிந்தனைக்கு மறுப்பு.

தூய உள்ளத்தினர் ஒவ்வோர் தருணங்களில் பிசகித் தவறான அபிப்பிராயங்களை வெளியிடுகையில், அதற்கு மற்றவர் தமது பக்கத்து நியாயத்தைக் காண்பித்து மறுப்பு வரைதல் தக்கதேயாகும். ஆனால், பொறாமையின்பாற்பட்டு நிந்தனை மொழிகளை யடுக்குவோருக்கு மறுப்பு வரையப் புகுதல் அவசியமில்லை. தெருக்குப்பையாகிய அவற்றிற்கு ஒரு மதிப்பு கொடுத்துக் கவனிக்கவேண்டியதுமில்லை. அவர்களே பேசி அவர்களே ஓயும்படி விட்டுவிடுதலே நன்றாம்.



1. பத்து ரூபாய் எடையுள்ள ஜலத்தில் ஐந்து ரூபாய் எடையுள்ள நல்ல காட்டுள்ள புகையிலையை ஊற வைத்துக் கசக்கி அச்சாற்றைக் குடித்தால் பாம்பின் விஷம் பறக்குமாம். நோயாளிக்கு வாய் கிட்டியிருந்தால் அக்கஷாயத்தை மூக்கில் ஊற்ற வாய் திறந்துவிடுமாம். பிறகு ஸ்வல்பமாய் வாயில் ஊட்டலாமாம்.

2. ஆயுர்வேத வைத்தியத்தில் சாதாரணமாக, சாரகர், சுச்ருதர் என்ற இரு மஹான்கள் அருளிய நூல்கள்தான் வழங்குகின்றன. அகஸ்தியரும் போகமுனிவரும் அருளின நூல்கள் தென்னாட்டில் கையாளப்பட்டு வருகின்றன. ருக் வேதத்தில் ரணவைத்திய சிகிச்சையைப் பற்றி விவரித்துச் சொல்லியிருக்கிறது. ஸாம வேதத்தில் நாதபிரும்ஹத்தினால் வைத்திய சிகிச்சை விவரித்து இருக்கிறது. அதர்வண வேதத்தில் மந்திரம், மாந்திரீகம் முதலிய வைத்தியங்களைப் பற்றி விவரித்து இருக்கிறது. வெகுகாலந் தொட்டு மறைந்து கிடந்த இந்த ஆயுர்வேத வைத்தியத்துக்கு, கி. பி. பதினெட்டாவது நூற்றூண்டில் பர்ஹாம்பூர் பட்டணத்தைச் சேர்ந்த கங்காதர ஆச்சாரியார் என்பவரால் தான் மறுபடியும் புத்துயிர் கொடுக்கப்பட்டதாம். நீர் வியாதிகளுக்கும் பால ரோஹங்களுக்கும் இவ்வாயுர்வேத வைத்தியமே சிறந்ததாம்.

3. நாற்பது கோடி ஜனங்கள் சீன பாஷையைப் பேசுகிறார்கள்.

4. இங்கிலாந்தில் பார்லிமெண்டு சபை அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் வருஷத்திற்கு நானூறு பவுன் சம்பளமாம்.

5 தேன் கூட்டில் ஒரு பவுண்டு நிறையுள்ள தேனைச் சேர்ப்பதற்கு அறுபத்திரண்டாயிரம் புஷ்பங்களிலிருந்து தேனை தேனீக்கள் எடுக்க வேண்டுமாம். அப்படி எடுப்பதற்கு அந்தத் தேனீக்கள் இருபத்தேழு லக்ஷம் தடவை அப்புஷ்பங்கள்மேல் உட்காரவேண்டுமாம்.

6. இத்தேசத்தில் பட்டங்கள் பெறுவதற்கு நேராக விலைகொடுத்து வாங்க முடியாவிட்டாலும் யுத்தநிதி, ஆஸ்பத்திரி நிதி, இவைபோன்றவைகளுக்கு நன்கொடை யளித்தால், ராவ் ஸாஹிப் முதலிய பட்டங்கள் கிடைக்குமாம். ஜர்மனியில் 12000-பவுன் ஸர்க்காருக்குக் கொடுத்தால் "பாரன்" என்னும் பட்டத்தை யடையலாமாம். ஸ்பெயின் தேசத்தில் ஆயிரம் பவுனுக்கு பிரபு பட்டமும், இட்டாலியில் 1800-பவுனுக்கு 'பாரன்' பட்டமும், 2400-பவுனுக்கு 'கவுண்டு' பட்டமும் பெறலாமாம். இதுவும் துரைத்தனத்திற்கு ஒரு லாபம்தான்.

7. நாகரீகமுள்ள ஒவ்வொரு மனிதனும் வருஷத்திற்கு சராசரி பத்து பவுண்டு நிறையுள்ள ஸோப்பைத் தேஹத்திற்கு உபயோகப்படுத்துகிறான்.

புதியவை தாக்கியபோதுதான் பழயவை திருத்தமடைந்து ஓங்கிச் சிறப்புறும். பழய மனிதனுடன் விவாகத்தின் மூலம் புதிய பெண் துணையாகுங்கால் அந்த மனிதன் திருத்தமுற்றுப் புதிய உருவாகிறான்.

8. வளர்பிறைச் சந்திரன் முதலில் துருக்கியர்களின் சின்னமாயிருக்க வில்லையாம். ரோம் ராஜாங்க காலத்தில் கிருஸ்தவமதம் பரவ ஆரம்பிக்கும்பொழுது கிருஸ்தவர்களின் மதச் சின்னமாயிருந்ததாம். பிறகு கி. பி. 1453-ல் துருக்கியர்கள் ஆசியா மைனர் தேசத்தையும் தென் கிழக்கு ஐரோப்பாவையும் பிடித்து கான்ஸ் டாண்டிநோபிள் நகரத்தைக் கைவசமாக்கினபொழுது இந்த சின்னத்தைத் தங்கள் மதச் சின்னமாய் ஏற்படுத்திக் கொண்டார்களாம்.

தன் சயனக் கட்டிலில் தன் மைத்துனன், தங்கை, தமக்கை நித்தரித்தால் அது குற்றமாகப் படுவதில்லையாம். ஆனால், தன் மனைவியின் தங்கை தமக்கைப் புருஷனேனும், பருவம் வந்த தன் சகோதரிகளேனும் தன் கட்டிலில் நித்தரித்தபடி யிருந்தால் அது மட்டும் தனக்கு 'சுருக்' என்று தைக்குமாம். அச்சமயம் தன் மனைவியும் அங்கு இருந்தாலோ—? வேறு வினை வேண்டாம்.

9. ஜெர்மனி தேசத்தில் மேயன்ஸ் என்னும் பட்டணத்திலுள்ள மாதா கோவிலின் கடியாரம் 500-வருஷங்களுக்கு ஒரு தரம் சாவிகொடுத்து சரியாய் ஓடிக்கொண்டிருக்கிறதாம்.

10. ஒரு குண்டுமணியிடை புனுகையெடுத்து ஒரு நல்ல காற்றோட்டமுள்ள ஒரு அறையில் வைத்து பத்து வருஷங்கள் சென்ற பிறகு அதையெடுத்து நிறைபோட்டால் கொஞ்சம்கூட அதன் இடை குறையாதாம்.

11. பெர்ஷியா தேசத்து ஸ்திரீகள் எல்லாரும் கோஷா ஜாதிகளானதால், வீடுகளின் ஜன்னல்கள் தெருக்களிலிருந்து கண்ணிற்குத் தெரியாதாம்.

S. A. ஸ்ரீநிவாஸ சர்மா.

ஆச்சு ! போச்சு !! இன்னும் இருக்கு !!!

ஆச்சு:—எப்படியோ நாம் இருவரும் எதிர்பாராதபடி அகஸ்மீகமாக சந்தித்தாச்சு. நெடுநாளாக ஒருவரை யொருவர் பார்க்க நினைத்திருந்த அவாவும் இன்று பூர்த்தியாச்சு.

போச்சு:—ஒருவரைப்பற்றி யொருவர் கொண்டிருந்த தப்பெண்ணங்களும் மனஸ்தாபங்களும் இன்றோடு போச்சு. ஒருவருக்கொருவர் வீண் மனஸ்தாபங்களுடன் கடிதம் எழுதாது நின்றுவிட்டிருந்த காலமும் இனி போச்சு.

இன்னும் இருக்கு:—பழய நாள் நேசமும் அன்பும் பழயபடியே இன்னும் இருக்கு. இரவு முற்றும் பேசியவாறே பொழுது புலர்ந்துவிடினும்கூட, பேசியாகவேண்டியவை எவ்வளவோ இன்னும் இருக்கு. அடிக்கடி சந்திப்பும், அன்பான விருந்துகளும் இனிமேல் இன்னும் இருக்கு.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

மூக்குத்தூளின் அரசாங்கம்!



வாராய் என் பொடியரசே! உற்சாக பொக்கிஷமே! என் கண்ணே! கனிரஸமே! உன் மகிமை யென்ன, அந்தஸ்து என்ன, ஆரவாரமென்ன, நின் அரசின் ஒய்யாரமென்ன, பிரதாபமென்ன, உன் வசிய மயக்கென்ன, அதிலே உன் வெற்றி என்ன, கையின் பெருவிரலாலேயும் ஆள் காட்டி விரலாலேயும் உன்னைப் பிடிக்கும் சிங்காரமென்ன, எடுத்த சிட்டிகைப் பொடியில் பாதியைக் கீழே சிந்திடும் பெருமை என்ன, உன் கொடியாகிய மூக்குத் துண்டென்ன, அதிலே சளியை ஏற்றுவதென்ன! ஆ! உன் பெருமையையும் அருமையையும் இந்த விகடக் கிழவன் என்னென்றுதான் சொல்லட்டுமோ!

***

“உன்னாலே யல்லவோ உலகத்தை யாள்வது சகுனிமாமா” என்றான் துரியோதனன்! நீ சகுனியைப்போல் குடி கெடுப்பவனில்லை. நாளதுவரைக்கும் உன்னால் கெட்ட குடும்பமுமில்லை. ஒரு தம்பிடிக்கும் காலணாவுக்கும் வெகு சுளுவில் கிடைக்கும் கற்பகமாச்சுதே! அது மறுநாளைக்கும் கூட மிச்சம் காணுமே! ஆற்றுப்பெருக்கற்று அடிசுடுங்காலத்தும் ஊற்று நீரால் மகிழ்விக்கும் ஆற்றின் தன்மைபோல், பொடியில்லாக் காலத்தும் உன்னைத் தட்டியதும் மட்டையிலும் டப்பியிலும் உடனே தோன்றக் கூடியவனல்லவோ! ஒரு சிட்டிகைப் பொடி எங்கும் இலவசமாய்க் கிடைக்கவைக்கும் தர்மப் பிரபுவல்லவோ நீ! ஒரு தினத்துக்கு எத்தனையோ சிட்டிகைப் பொடியைப் பிறருக்குத் தரவைத்து தர்ம குணத்தை எவ்வளவோ பெருக்குவிக்கின்றாய்! “கொடையிற் கர்ணன்” என்பது உன்னை உறிஞ்சுகிறவர்களுக்கே தகும்.

***

தர்மகுணத்தை மட்டுமல்ல; முதலாளி—தொழிலாளி என்ற பேதத்தை யகற்றி பெரியதொரு சமரஸமும்

ஒருவருக்குக் காலணா தர மனம் வராது. ஆனால் ரயிலுக்கு மூன்றாம் வகுப்பு டிக்கட்டிலும் மூன்று பங்கு அதிக விலையுள்ள இரண்டாம் வகுப்பு டிக்கட்டுகளை மட்டும் வேண்டியவரை கௌரவத்திற்காக வாங்கத் தயார்!

கற்பிக்கின்றாய்! ஆயிரம் ஏற்றத்தாழ்வு மரியாதைகளை யெல்லாம் கவிழ்த்து விட்டு சரிசமப்படுத்திவிடுகிறாய்! பேத சிந்தனையையே தூரத் தூரத்திவிடு கிறாய்! உயர்ந்த ஜாதியானை தாழ்ந்த ஜாதியானிடத்து ஒரு சிட்டிகைப் பொடிக்குக் கெஞ்சவைக்கின்றாய்! ஜாதிபேதக் குப்பையையும் மூடிவிடுகி றாய்! சிறியவர்கள் பெரியவர்களிடம் ஒரு சிட்டிகைப் பொடி கேட்கவும், அவ்விதமே பெரியவர்கள் சிறியவர்க ளிடம் கேட்கவும் செய்து அனைவரை யும் சரிசமப்படுத்தி மரியாதைக் கிர மங்களை மண்ணாக்கிவிடுகிறாய்! அரச னும் ஏழையும் ஒரு மண்ணில் கிடத் தப்படுவது இறந்தபின் நேரும் காட் சியாக, ஆ! பொடியரசே! நீயோ உயிருடன் உலாவும்போதே அந்த சமரஸ ஞானப்பாலை யூட்டி உயர்வு தாழ்வற்றுப் போகச் செய்கிறாய்!

***

இன்னும் நீ சிநேக குணத்தை வளர்த்து ஒற்றுமையைப் பெருக்கு கிறாய்! ஒருவரை யொருவர் விரும்ப வைத்து உதவிக்கொள்ளும்படி ஒன்று கூட்டிவிடுகின்றாய்! இதற்குமுன் பரஸ்பரம் முக மறியாதாரும் ஒரு சிட்டிகைப் பொடியில் ஒட்டிக் கொள்ளப் பண்ணுகிறாய்! அவர்கள் பிரியும்போது ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டுபோகும் படியும் அத்தனை பந்துமித்திரத் துவத்தைக் கற்பித்துவிடுகிறாய்! ரயில் வண்டியில் இடம் கிடையாத வேளையில் உன் பொடி டப்பியைத் திறந்தால் போதுமே! எவனாவது ஒரு சிட்டிகைப் பொடி கேட்டு உறிஞ்சிவிட்டு, தன்னை நெருக்கிக் கொண்டாவது உட்காருவதற்கு இடம் கொடுத்துவிடுகிறான்! அறிமுக மற்ற இடத்தில் ஒரு சிட்டிகைப் பொடி வேண்டிய பேச்சுத் துணை யைக் கூட்டுவித்துவிடுகிறது! ஒரு சிட்டிகைப் பொடி பெற்றவனை எந்த நாளும் நன்றியுள்ளவனாக்குகிறது! ரயிலில் நம்மிடம் பொடி வாங்கிய வனை நமது சாமான்களைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லி அற்பசங் கைக்கும் போய்வரக்கூடிய அத்தனை நம்பிக்கையையும் உண்டாக்கிவிடு கிறது! அதுமட்டுமா? ரயிலைவிட்டு இறங்குகையில் இரவல் பொடி இழுத் தவனை உள்ளிருக்கும் சாமான்களை வெளியில் எடுத்துக் கொடுக்கவும் செய்து அவ்வளவு விஸ்வாசமுள்ளவ னாக்கிவிடுகிறாய்! நன்றி என்கிற குணத்தை நன்றாக ஒரு நொடிப் பொழுதில் வளர்த்து விடுகிறாயே!

***

ஒரு சண்டை சச்சாவில் சிட்டி கைப் பொடி நம்மிடம் இழுத்தவன் நமது பக்கமாய்ப் பேச முற்பட்டுக் கொள்கிறான்! இப்படி எவருமில்லாத இடத்தில் ஆள் பலம் — துணை — ஜோடிகளை உடனே கூட்டுவிப்பது உன் சிட்டிகைப் பொடியின் மகத் துவமல்லவோ!

***

அன்னதானத்தின் பெரிய தொரு திருப்தியையும் நீ காட்டு கிறாய். வயிறார உண்டவன் "போதும்" என்று திருப்திபட்டுவிடு வது போலவே, உன்னொரு சிட்டி கைப்பொடி இழுத்தவனும் அந்த சமயத்துக்குப் "போதும்" என்று திருப்திபட்டுப் போகிறான்! சிலர் புசித்துவிட்டு மறுவேளைக்குக் கட்டு சாதமும் கொண்டு போவதுபோல், ஒரு சிட்டிகைப் பொடி இழுத்தவர்,

---

கை கனத்திருந்தபோது இரண்டாம் வகுப்பிலேயே பிரயாணம். கை வறண்ட பிறகோ பாவம் மூன்றாம் வகுப்பு!

இன்னொரு வேளைக்கு இழுக்கவும் மற்றொரு சிட்டிகைப் பொடியை எடுத்துக்கொள்ளத் தாராளமாய் உதவுகிறாய். சிலாது அன்னத்துக்கு அதையுண்டவர்களெல்லாம் அவர்களுக்குப் பகைவர்களாய் விடும்படியான ஒரு தோஷ சம்பந்தம் ஒட்டிக்கொண்டு நிற்பதாகிறது! பொடியரசே! உன்னிலே அந்த தோஷமே கிடையாது. உன் சிட்டிகைப் பொடி யிழுத்தோர் துரோகிகளானது அபூர்வ சம்பவம்! அவர்கள் எவ்வளவோ ஆபத்து சந்தர்ப்பங்களுக்குத் துணை மனுஷர்களாய் உதவுகிறார்கள்! அவர்களுக்கு வாரிக்கொடுத்தது ஏதுமில்லை; ஒரு சிட்டிகைப் பொடிதான் தந்தது!.

***

இன்னும் பொடியரசே! நீ வியாபாரத்துக்குப் பெரியதோர் துணையாகிறாய்! முகமறியாத இடத்தில் ஒரு வியாபாரிக்கு மனுஷ்யர்கள் கூடவும், வர்த்தகப் பேச்சுகளைத் தொடங்கவும் காரியசித்தி பண்ணவும் நீ வழி வைத்துக் கொடுக்கிறாய்! பொடியை விட்டுவிட எண்ணினோரும், அது இல்லாவிடில், வியாபாரத்துக்கு ஒரு இடையூறாகுமென்று, அதை விடாமல் பழக்கத்தில் வைத்துக் கொள்கிறார்கள்!

***

பொடியரசே! உன் வித்தியாதானப் பெருமையைப் பேசவுங் கூடுமோ? ஒரு சிட்டிகைப் பொடியில் எவ்வளவு ஞாபகத்தைக் கிளப்புகிறாய்! மறைந்தவைகளை எவ்வளவு துரிதத்தில் நினைப்பூட்டுகிறாய்! இல்லாத எத்தனை புது ஞானங்களையும், யுக்தி புத்தி யோசனைகளையும் உண்டாக்கி விடுகிறாய்! தூங்குமூஞ்சியைச் சுறுசுறுப்புக்காரனாக்குகிறாய்! ஒரு சிட்டிகைப்பொடி ஏறியதும் சோம்பலை முறித்து ஒரு புது மனிதனாகச் செய்துவிடுகிறாய்! பொடி போடுவதற்கு முன்பு ஒரு போட்டோ படம் எடுத்து, பொடிபோட்டதற்குப் பிறகு ஒரு போட்டோ படம் எடுத்தால் எவ்வளவோ பேதம் தெரிய வருமே! கண் பார்வை குறைந்தவன் உன்னில் ஒரு சிட்டிக்கை யிழுத்ததும் கண்ணின் துர்நீரெல்லாம் வெளிவந்து பிரகாசமான பார்வையைக் கொண்டு விடுகிறான்!

***

பொடியரசே! உன் ரவிக்கைப் பொடி மகத்துவம் ஒரு தனி மகத்துவமல்லவோ! நீ பெண்களின் மார்புக் கச்சைக்குள்ளல்லவோ பத்திரப் படுத்தப்படுகிறாய்! அணங்கியரின் எவ்வளவு மிருதுவும் மென்மையுமான ஸ்தானத்தில் போய் நீ உட்கார்ந்து கொள்ளுகிறாய்! இரவெல்லாம் கண் விழிக்கும் தாசிகள், நாடக நடிகர்கள், ஆசிரியர்கள், ரயில்வே உழைப்பாளிகள், வாடகை வண்டியாட்கள்,—இன்னும் எத்தனையோ பேர்களுக்கெல்லாம் நீ பரம ஸஞ்சீவியல்லவோ! ரயில் இஞ்சினின் வேகத்துக்கு எற்ப கரி அதிகம் போடுவதுபோல், ஆசிரியர்களின் எழுதுகோல் வேகத்துக்குத் தகுந்தபடி நீயும் மூக்கில் பல மடங்கு அதிகமாய் ஏறிக்கொள்ளுகிறாய்! இவ்விதம் அதிக உழைப்பாளிகள் உன்னை அதிகம் உறிஞ்சுகிறார்கள்! ஒரு சிட்டிகைப் பொடி இழுத்ததும் சங்கீதம் எவ்வளவு நைஸாகப் பாட வருகிறது! எழுதுகோல் எவ்வளவு வேகமாக ஓட வருகிறது! உழைப்பாளிகளின் கையும் காலும் எவ்வளவு தீவிரமாய் வேலை செய்ய விரைகிறது! அவர்களுக்கெல்லாம் வயிற்றுப் பிழைப்பைக்

பணம் வசூலிப்பதிலும், வசூலித்து அந்தப்படி தர்மம் நடத்தாமல் ஏப்பம் விடுவதிலும் சில சோம்பேரிப் புண்யாத்துமாக்கள் மிக்க சதுரர்கள்.

கொடுப்பதும் நீயல்லவோ! அவர்களின் குடும்ப ஸம்ரக்ஷணியாக நிற்பதும் நீயல்லவோ!

***

ஆ! என் பொடி மன்னவா! நீ இல்லையாகில் உத்தியோகஸ்தர்கள் எது? வக்கீல்கள் எது? நாடகங்களேது? உழைப்பாளிகளேது? அடிமைக் குமாஸ்தாக்களேது? மானேஜர்கள் எது? நூலாசிரியர்கள் எது? பத்திராதிபர்கள் எது? ஜட்ஜிகள் எது? மந்திரிகள் எது? சேனு வீரர்கள் எது? செழிப்பதும் எது? செல்வாக்கு எது? அறிவுகொண்டு உழைப்பவர்கள் எது? எழுதுகோல் எது? தங்களின் தேக உழைப்பைச் செலவிட்டு ஜீவிப்போர் தான்எது? இவர்களெல்லாம்உழைத்து உருப்படுவதுதான் எது? ஒரு சிட்டிக்கைப் பொடி யில்லாமல், அந்த சமயத்து வேலைகளெல்லாம் எவ்வளவு திண்டாடிக் கெட்டுவிடுகிறது! எவ்வளவு புது யோசனைகள் தோன்ருமற் போய்விடுகிறது! அர்த்த ராத்திரியிலே பொடிமட்டை காலியாகிவிட, தூங்குகிற எவ்வளவு பேரை எழுப்பிக்கேட்க வைக்கிறது! அந்த இரவு வேலைகள் எவ்வளவு பாழாய் விடுகிறது! எவ்வளவு தவிக்கப் பண்ணிவிடுகிறது! உலகு தோன்றிய நாள் முதலாக ஆ! என் பொடி வேந்தே, உன்போலும் புகழ் பிரதாபம் யார் கொண்டார்? நீ இல்லையாகில் உழைப்பே சூன்யமாகி விடுமே! உலகமே சுறுசுறுப்பு அற்றுப் போகுமே!

***

பொடியரசே! நேசித்தும், உறவு கலந்தும் பிறகு பிரிந்துவிடுகிற நாற்றக் கூட்டங்கள் போலவா நீ! உன்னைத் தொட்டவர்கள் எந்த நாளாகிலும் விட்டதுண்டா? உன் பழக்கம் விட்டுவிட நினைத்தாரையும் நீ ஒட்டிக் கொண்டல்லவோ போவாய்! பின்னும் நீ ஒரு செட்டும் சிக்கனமுமாக வாழவும் வழி காட்டுகிருய்! ஒரே அடியில் ஒரு சிட்டிகையிலேயே மட்டையிலும் டப்பியிலும் உள்ள அத்தனை பொடியையும் ஒருமிக்க உறிஞ்சிவிட நினைக்கிற பேருண்டிக்காரர்களின் முன்னும், ஊராருடமைக்குப் பேயாய் பறந்து மட்டையிலும் டப்பியிலும் உள்ளதை அப்படியே தங்களின் உள்ளங்கையில் கொட்டிக்கொண்டு விடுகிற பேராசைக்காரர்களின் முன்னும், இரவல் பொடிக்காரர்கள் முன்னும் அதை அவர்கள் கையில் தராமல் நீயே உன்கைப்பட ஒரு சிட்டிக்கைப்பொடி மட்டும் எடுத்து அவர்களுக்குக் கொடுத்துவிட்டு வெகு தந்திரமாய் விலகிக்கொள்கிருய்! டப்பியோ மட்டையோ தவறிக் கீழே விழுந்து பொடி சிந்தினுலும் அதை எடுத்து உறிஞ்சவும் நீ தவறுவதே யில்லை!

***

பொடி வேந்தே! உன்னுடன் பழகியவர்கள் அசங்கிதம் என்பதையே மறந்துவிடுகிருர்கள்! ஓயாது ஒழுகி வரும் துர்க்கந்தமுடைய மூக்குச் சளியை மூக்குத் தூண்டில் சிந்தி அதை நசுக்குப் பிசுக்கி உலர்த்திடவும் வைக்கிருய்! அந்தக் கசுமாலத் துண்டை அப்படியே சளியுடன் தன் ஜோப்பில் போட்டுக்கொள்ளவும் மனமொப்பிப்போகப் பண்ணுகிருய்! பொடி போடுவதற்கு முன்னே மூக்குச் சளியைச் சிந்திவிட்டு, பிறகு பொடியை உறிஞ்சினுல்தான் அதிக காரம் மூக்குக்கு ஏறுமென்கிருய்! இவ்விதம் மூக்குக்கு ஏற்றுமதி இறக்கு

சாப்பிட்டுவிட்டுப் போ என்று சொல்லி நிறுத்தியது ஒரு காலம். போகிருயா—போ என்பதும் ஒரு காலம், ஏன் இப்படி? தான் நடந்து கொண்ட வகையால்.

மதி இரண்டும் செய்வதிலே, கண்ட இடத்திலெல்லாம், சமையற்கட்டில் கூட மூக்குச் சளியை சிந்த வைத்து. அந்த அசங்கிதத்தை எண்ணுமலிருக்கவும் செய்து விடுகிருய்! காமநோய் பற்றினோர் எவ்வளவு அசங்கிதத்திற்கு ஆவலாய் இசைந்து போகிருர்களோ, அவ்விதமே உன்னில் பழகியவர்களும் உன் கசுமால துர்க்கந்தங்களுக்கு மன மொப்பிப் போகிருர்களே!

***

என் பொடியரசே! நீ ஒரு சுகானுபவ வஸ்து! நீ ஒரு ஆநந்த பரிமளம்! திருச்சினப்பள்ளி பொடி ருசி வேறே, பெங்களூர்—மைசூர் பொடி ருசி வேறே, பட்டணம்பொடி ருசிவேறே, சுகந்த மூக்குத் தூள் ருசி வேறே, வைத்தியர்கள் உன்னுடன் பல மருந்துச் சரக்குகளைச் சேர்த்துக் கொடுக்கும் பொடியின் ருசி வேறே! ஒரு பரப்பிரம்மஸ்வரூபமே பல மூர்த்திகளாய் விளங்குவதுபோல் நீயும் பல வடிவங்களாய்த் தோற்றிச் சுவையை வளர்க்கின்ருய்! இன்னும் உன்னைப் பல்லுக்குள் இடுக்கிக்கொள்வோரும் பலராவார்! அந்த அசங்கிதத்தை விகடன் என்னென்று சொல்வதோ? தலையணை ஒரு சுகானுபவ வஸ்துவென்று சொல்லி, சிறையிலே மகாத்மா காந்திக்குத் தர மறுத்தது போல, உன்னையும் ஒரு சுகானுபவப் பொருளாய் மதித்து சிறைச்சாலையில் உன்னை உட்செல்லாது தடுத்திருக்கிருர்கள்! போன காவிரிப் பெரு வெள்ளத்திலே உன் மகிமையறிந்த நேசர்கள் ஆற்றில் நீந்திச் சென்றும் கூட அக்கரை போய் பொடி வாங்க வந்த கதைகள் அநேகம். சொந்த மனைவியைத் தூரப் படுக்க வைத்தாலும், பொடி வேந்தே, உன்னைத் தலையணைக்குக் கீழே வைத்துக்கொண்டு உறங்கிக் கொஞ்சும்படி செய்கிருய்! அந்தப் பாழும் பொடி டப்பிமேலுள்ள பிரியங்கூட என்மேல் இல்லையேயென்று மனைவியை வாய்விட்டுச் சொல்லி நோகவும் வைக்கிருய்!

***

பொடி மண்டலேஸ்வரா! எழுதிக் கொண்டிருக்கும் பொழுதே, பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, கைவேலை செய்துகொண் டிருக்கும் பொழுதே அத்தனையையும் விட்டு விட்டு பொடி மட்டையின்மீது கவனம் புகவைக்கிருய்! உற்சாகத்துக்குத் தக்கபடி ஒரு சிட்டிகைக்குமேல் பல சிட்டிகைப் பொடியை உறிஞ்ச வைக்கிருய்! சாவு — சங்கட நோங்களிலும், வீட்டிலுள்ளவர்கள் பிணியால் படும் இரவின் வேதனை காலத்திலும், கல்வி ஞான கவித்துவ சங்கீத சரஸ ஸல்லாப மதன உல்லாஸ கேளிவிலாஸ மோஹன ஸந்தர்ப்பங்களிலும் கண் விழித்திருக்க நீயல்லவோ அருந் துணையாகின்ருய்! வாழ்விலும், தாழ்விலும், மேட்டிலும், பள்ளத்திலும், மோக்ஷத்திலும், நரகத்திலும், செல்வத்திலும், எழ்மையிலும், பகலிலும், இரவிலும் என்றைக்குமே விட்டுப் பிரியாத தோழனல்லவோ நீ! மண், பெண், பொன் எனும் மூவாசைகளைத் துறந்தோரும் உன் மீதுள்ள ஆசையை விட்டவர்களல்லவே!

***

பொடி ராஜாவே! நீ மருந்தும் ஆகிருய்! ஜலதோஷம் தீர்க்கிருய்! தலைவலி மண்டைக் குத்தை மாற்றுகிருய்! உன்னை மருந்தாக எப்போதோ ஒருநாள் பாவிப்போருக்கு நீ நன்மையே செய்கிருய்! உன்னை

பிரபுக்கள் கௌரவார்த்தம் வாங்கும் ஒரு மோட்டார் வண்டியின் டாம்பீகச் செலவில் சில ஏழைக் குடும்பங்கள் நன்கு பிழைத்துப் போகலாம்.

உறிஞ்சியதும் தும்மினோரை பொடி போட்டறியாதவர்களென்று தெரிய வைத்துவிடுகிறாய்! பொடி போடத் தெரியாதாரையும் மற்றவரைக் கொண்டு போடவைத்துப் பழக்கி நின் அடியானுக்கிக் கொள்ளுகிறாய்! மருந்துமாகி, விருந்துமாகி, பசந்துமாகி, உன்னைப் போடுபவர்களுக்கு ஒரு பெரிய மனிதத் தன்மையையும் கொடுக்கிறாய்! பெரிய மனிதனென்று பேரெடுக்க விரும்பினால் பொடியைப் போடு என்கிறாய்! உடன்பிறந்தார் பிரிந்தாலும் நீ பிரிவதுண்டோ? நீ ஸமய ஸஞ்சீவியல்லவோ! வழித்துணையல்லவோ! உள்ள நித்திரை மயக்கத்தைப் போக்கவும் உதவி செய்வாய்! வராத சுகநித்திரையை வரவும் துணை புரிவாய்! மூச்சு அடைபடாதிருக்க உன்னில் ஒரு சிட்டிகையை இழுத்துக்கொண்டு உல்லாச உறக்கம் கொள்வோரும் அநேகரல்லவோ!

***

பொடியரசே! உன்னை வைத்துச் சிங்காரிக்க பொன்—வெள்ளி டப்பிகளென்ன, கொம்பு—மர டப்பிகளென்ன, இலை—மட்டைகளென்ன! உன்னால் ஜீவிப்பவர்கள் எவ்வளவு பேர்! அவர்களுக்கு மெடல் தோடாக்கள் எத்தனை! தங்கக்காப்புகள் எத்தனை! ஒரு தம்பிடி—காலணு வியாபாரத்தில் எவ்வளவு பெருந்தொகை சேரவைக்கிறாய்! மாடி வீடு கட்டப் பண்ணுகிறாய்! உன் மணமென்ன குணமென்ன, உன்னில் வீசும் நெய்யின் வாடையென்ன, உன் காரத்தின் சாரமென்ன, உன் பூசனை யென்ன, உன் சிலாக்கினை என்ன! உன் பெருமை உன் கூடப்பிறந்த சுருட்டு, புகையிலை இவற்றிற்கெல்லாம் ஏது? அறிவாளிகள்—தொழிலாளிகள் யாவரும் அடங்கிய உலகினை நீயே உண்மையில் ஆள்கிறாய்! ஹா!! ஹா!!!

***

பொடியரசே! கடைசியாக, விகடன் உன்னைப்பற்றி யோசிக்கப் போனால், நீ இத்தனை ஏகசக்ராதிபத்யம் செய்துவந்தபோதிலும், நீயே கெட்ட பழக்கங்களுக்கெல்லாம் நடுத் தம்பிரானாய், முதல் சாமியாராய், தறிதலைக்கொள்ளியாய் நிற்கிறாய் என்பதையும் சொல்லவேண்டி வருகிறது! நீ விட்டுத் தொலையாத பெரிய சனியனாகவும், ஒரு அசங்கிதக் குப்பையாகவும், பிஞ்சிற்பழுத்த கனியாகவும், பின்னுக்குள்ள தீய அப்பியாசங்களுக்கெல்லாம் நீ முதல் விக்கினேஸ்வர பூஜையாகவும், தூண்டுதலாகவும் வந்து முளைத்துக்கொண்டு விடுகிறாய்! உன்னைத் தொட்டுத் தடவிச் சுவைத்து இழுத்தவகையிலும் செலவிலுமாகக் கடன் ஜெயிலுக்குப் போனவர்களும், இன்சால்மெண்டு எடுத்துக் கடுக்கா காண்பித்தவர்களும் இல்லையானாலும், எவர்களுக்கு உன் பழக்கம் கிடையாதோ — எவர்கள் உன்னைத் துரத்தி வெறுக்கிறார்களோ—அவர்கள்தான் உண்மையான சுகவாசிகள் என்பதையும் அழுத்தமாய் விகடன் சொல்லி முடிக்கிறேன்! பொடி மன்னவா! உன் மூக்குத்தூள் சுகந்தமும் வேண்டாம்; உன்னை உறிஞ்சிவிட்டு உடனே சீந்துகிற மூக்குச் சளியின் அசங்கிதமும் வேண்டாம்! அதற்காக ஒரு தனி ஆபாச மூக்குத் துண்டும் அருகில் இருக்க வேண்டாம்! உன்சிறையிற்பட்டோரை விடுவித்துவிடு. விடுதலை கொடுத்து விடு என்று விகடன் வெகுவாய்க் கெஞ்சுகிறேன்! இனி உன் பாடு! உன்னை உறிஞ்சுகிறவர்களின் பாடு! ராம்! ராம்! சுபம்! ஞ! சுவாஹா!!

திருந்தாத துர்க்குணனுக்கு நல்ல நூல் ஏது? பொறுமைப் பேய்களுக்கு எத்தனைச் செல்வம் கூடிடினும் சந்தோஷமேது?



Letter XVII.

From a Gentleman to his Friend, on Happiness.

I

Dear Sir,

It seems to be the fate of man to seek all his consolation in futurity. The time present is very seldom able to fill desire or imagination with immediate enjoyment, and we are therefore forced to supply the deficiencies by recollection or anticipation.

Everyone so often experiences the fallaciousness of hope, and the inconveniences of teaching himself to :xpect what a thousand accidentsmay preclude, that when time has abated the confidence with which youth rushes out to take possessi·n of the world, we naturally endeavour, or wish, at least, to find egtertainment in the review of life, and to repose upon real facts, and certain experience.

But so full in the world of calamity that every source of pleasure is polluted, and tranquillity disturbed. When time has supplied us with events sufficient to employ our thoughts, it has mingled them with so many disasters and afflictions, that we shrink from the remembrance of them, dread their intrusion on our minds, and fly from them to company and diversion.

17-ம் கடிதம்.

ஒரு கனவான் (நிலையற்ற உலக) செல்வத்தைக் குறித்துத் தன் நண்பனுக்கு எழுதியது.

I

அன்புள்ள ஐயா,

மனிதனானவன் சகல ஆற்றலையும் தனக்கு மறுமைக்காகத்தேடவேண்டியவனாய் இருக்கிறான். இம்மையானது ஆசைக்கும் நினைவுக்கும் உடனே பலன் தராது. ஆகையால் இக்குறைவுக்கு நாம் மறுமையின் பலனையே நினைக்க வேண்டியது.

நாம் கொள்ளும் ஆசையானது அடிக்கடி தடமாடிப் போகப் பார்த்து வருகிறோம். அன்றியும் பாலியத்தில் உலகத்தை வசியப்படுத்த நினைக்கும் நமது துணிபு (வார்த்திகத்தால்) குறைந்த பின்பு, நடந்துபோயிருக்கும் உண்மையான காரியங்களையும், கண்டிருக்கும் நிச்சயமான பரீட்சைகளையும் நினைத்துக் காலம் போக்கப் பிரயாசைப் படுகின்றோம்.

உலகத்திலே துன்பம் நிறைந்திருப்பதால், சந்தோஷத்துக்குண்டான சகல வழியும் கெட்டு மன அமரிக்கையும் தத்தளிக்கின்றது. சென்ற காலத்திலே வெகு காரியங்கள் நடந்து அநேக இடையூறுகளும் சஞ்சலங்களும் விளைந்திருப்பதால், அவைகளை நினைக்க மனம் ஒப்பாமல் புத்தியினுள் நுழைத்துக் கொள்ளப் பயந்து அவைகளை மறக்கும்படி மனிதர் சகவாசத்தையும் சந்தோஷகரமான காலக்ஷேபத்தையும் தேடுகிறோம்.

(கடிதம் முடிவுபெறவில்லை,)

சிறுமணித்திரள்

(319-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் வாக்கு.

454. அறிவு ஒற்றுமைக்கு இட்டுச் செல்கிறது; ஆனால் அறிவின்மையானது வேற்றுமைக்கு இட்டுச் செல்கிறது.

455. பாம்பானது அதன் சட்டையினின்றும் வேருயிருப்பதுபோல ஆத்மாவும் சரீரத்திலிருந்து வேருயிருக்கிறது.

456. பரிசுத்த ஞானம், பரிசுத்த அன்பு இரண்டும் ஒன்றேயாம்.

457. நான் எப்பொழுது முக்தனுவேன்? "நான்"! என்பது எப்பொழுது இல்லாமற் போய்விடுகிறதோ அப்பொழுது.

458. "நான்" என்பதும் "எனது" என்பதும் அஞ்ஞானமாம். "நீ" என்பதும் "உனது" என்பதும் —ஞானமாம்.

459. சிஷ்யன் குருவை யொருபொழுதும் குறை கூறலாகாது. குரு என்ன சொன்னுலும் அவன்—பேசாமல் கீழ்ப்படிய வேண்டும். "எனது குரு சாராயக் கடைக்குச் சென்ருலும், எனது குரு பரிசுத்த நித்தியானந்த ராஜரே" யென்று வங்காளத்திலே ஒரு மொழியுண்டு.

460. எனது குரு குடியர்களும் சண்டாளர்களும் கூடுகின்ற அசுத்தமான இடத்துக்குச் சென்ருலும் எனக்கு அவர் களங்கமற்ற, பரிசுத்தமான குருவேயாவர்.

461. மருந்துகள் கொடுத்து போதை வஸ்துக்கள் உபயோகிக்கின்ற சாது சரியான சாதுவல்ல; அத்தகையோருடைய சகவாசத்தை நீக்கிவிடு.

462. பெருங்காற்றின் முன்னே அகப்பட்ட எச்சில் இலைபோல கர்வமற்றவனுய்விடு.

463. வீட்டினுள்ளே யுள்ளவர்கள் கண்விழித்து ஜாக்கிரதையா யிருந்தால் எப்படித் திருடர்கள் வீட்டினுள்ளே நுழையமாட்டார்களோ, அப்படியே நீ எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருப்பாயானுல் தீய நினைப்புக்கள் எதுவும் உனது மனத்தினுள்ளே நுழைந்து அதன் நன்மையைத் திருடிக்கொண்டு போய்விடாது.

464. நம்பிக்கை யுள்ளவனுக்கு எல்லாம் உண்டு. நம்பிக்கை யில்லாதவனுக்கு ஒன்றுமே யில்லை.

465. ஞானமானது உடனே அளிக்கப்பட முடியாதது.

466. பணமானது ஆகாரத்தைத் தான் சம்பாதிக்கக்கூடும். ஆகையால் அதுவே உனது வாழ்நாளின் நோக்கமென்று கருதிவிடாதே.

467. அகங்கார முள்ளவரையில் ஞானமும் உண்டாகாது, முக்தியும் ஏற்படாது, ஜனன மரணமும் நிற்காது.

கா. அல்லாபிச்சை.

வெட்டிச் சோறு தின்றுகொண்டிருப்பவர்கட்கே வாய் நீட்டம் அதிகம், ரோஷமும் ஆர்ப்பாட்டமும் மிகமிக.

2. அற்ப குணம்.

(364-ம் பக்கத் தொடர்ச்சி.)

113. மழை பெய்து நிரம்பாதது மோண்டு வார்த்து நிரம்புமா?

ஒரு பொட்டல் நிலமானது தன்னில் எவ்வளவு மழை பெய்தாலும், அதைத் தனக்குள் அடக்கி ஈரப்படுத்தி நிற்க வைத்துக்கொள்ளாமல், தன்னில் விழுந்த ஜலத்தையெல்லாம் ஓடவே விட்டுவிடக்கூடியதாயிருக்கும். இவ்வித நிலத்தில் குடம், சொம்பு கொண்டு மொண்டுவார்த்தா அது நிறையப் போகிறது? அற்பம் எப்படியும் அற்பமாகத்தான் தொலையும் என்று இப்பழமொழி குறிப்பிடுகிறது.

தனக்குக் கிடைத்த ஆஸ்தி வகைகளைச் செட்டும் சிக்கனமுமாய்ச் செலவிட்டு விருத்தி செய்துகொள்ளத் தெரியாமல் அவற்றைக் கண்டபடி அழித்துக் கெட்டவனுக்கு, மற்றவர்கள் என்ன உதவி செய்தாலும், ஆதியிலிருந்த அற்ப புத்தியே கடைசிவரைக்கும் வந்து அவனை விளங்க ஒட்டாமல் தடுக்குமாதலால், அவன் அந்த உதவியைக்கொண்டு ஒருநாளும் க்ஷேமப்படப் போகிறதில்லை. மழையே பெய்து நிரம்பாதது இந்த மொண்டு வார்ப்பதினால் நிரம்பிவிடப் போகிறதா? எவ்வளவோ நகைகள் தன் மனைவிக்கு அணிவித்திருந்தும் முப்பது ரூபாய் கால்கொலுசு இல்லையென்று முறணுகிறாள். அவ்வளவு நகைகளில் திருப்திபடாத அவள் இந்தக் கொலுசை வாங்கிக் கொடுத்தாலும் திருப்திபட்டுவிடப் போகிறாளா? மழையேபெய்து நிரம்பாதது, இந்த மொண்டு வார்ப்பதில் நிரம்பிவிடப் போகிறதா? இந்தக் கொலுசு செய்தபிறகுங்கூட அதிர்ப்திதான்! என்ன நகை போட்டுவிட்டாய், என்ன வாழவைத்துவிட்டது என்ற சொட்டுச் சொல் எந்த நாளைக்கும் இருக்கவே இருக்கும்தான். அற்ப மனம் படைத்தவர் என்றைக்கும் அற்பதன்மைதான்.

தன் தாயின் அன்பைப் பெரிய பொக்கிஷமாக நினைத்து அந்த அம்மை ஈன்ற பெண்ணான தன் சகோதரியின் குடும்பத்தையெல்லாம் தானே வைத்து ஸம்ரக்ஷித்து, தன் வரவுகள் யாவற்றையும் அதற்கே செலவிட்டு வஞ்சகமின்றி ஹிருதயபூர்வமாய் அன்புகுலாவி ஆதரித்து நிற்க, அந்தத் தாயோ தன் குமாரனின் உழைப்பையும், தன் பெண்வர்க்கத்தைப் பரிபாலிப்பதையும் சொற்பமேனும் நன்றி மனத்துடன் கருதாமல், 'எனக்கா செய்தாய், அவளுக்கு செய்தாய், எந்த நாளாவது எனக்குக் கொடுத்திருக்கிறாயா' என்று வைகிறாள். ஒரு கலியாணத்திற்கென்று போயிருக்கிற இடத்தில் அங்குள்ள கூட்டத்துக்கு

ஒருவர் மூட்டையைக் கொஞ்சம் மேலுக்குப் பிரித்து நோக்குவதும் தப்பு. ஆனால், ஒரு புஸ்தக மூட்டையை அப்படிப் பிரித்துக் கவனிக்கும் நோக்கு அறிவுப் பசியால் நேருவதாதலின் அது அவ்வளவாகக் குற்றம் தராது.

முன்னே தன் குமாரன் தனக்கு ஏதுமே செய்ததில்லே யென்று பேசி அவன் மானம் சிரிக்க வைக்கிருள். கௌரவமாய்ப் பிழைக்கும் அவன், 'உனக்குச் செய்தாலென்ன, உன் மகளுக்குச் செய்தாலென்ன, என் கையில் வந்ததை ஒரு காசுகூட மிச்சப்படுத்தாமல் பொதுவில் வீட்டுக்குத்தானே செலவிட்டு வந்திருக்கிறேன், என்னே ஏன் இப்படி நாலுபேருக்கு முன் அவமானப்படுத்த வேண்டு' மென்று அலறுகிருன். அதற்கு அந்தத் தாய் 'எனக்கா செய்தாய், அவளுக்குச் செய்தாய்' என்று பிரித்து வைத்துப் பேசுகிருள். அதற்கு அவன் 'உன் கையிலிருக்கிற செல்வம் என் கையில் இருக்கிறதா? ஏதோ எனக்கு வருகிற பிச்சைக் காசை அப்படியே செலவிட்டுவிடுகிறேனே, அதை உனக்குச் செய்ததாக நினைத்துக்கொள்ளக் கூடாதா, அவர்களுக்குச் செய்வதை நிறுத்தி விட்டு இனி உனக்கே செய்கிறேன், அப்படி நான் செய்வதானல் அவர்களே ஸம்ரக்ஷிக்கிற பாரம் உன் தலைமேல்தானே ஏறும்' என்கிருன். இப்படியாக உண்மையாய் நடக்கும் மகனிடமே திருப்திகொள்ளாத அந்தப் பணக்காரத் தாய்க்கு இனி அவன் என்ன செய்துதான் திருப்தி ஏற்படப்போகிறது? பல வருட காலங்களின் இந்தப் பெரிய செலவுகளான பெரிய மழையிலேயே நிரம்பப்பெருத அந்த அம்மையினுடைய நெஞ்சம், இனிமேல் புதிதாகச் செய்யப்போய்த்தான—இந்த மொண்டு வார்ப்பதால்தான—நிரம்பப் போகிறது? அது ஒருநாளுமில்லே. ஏதோ தன் மனசாக்ஷி தன்னே வாதிக்கா திருக்க, அந்த ஈன்ற தெய்வமாகிய அன்னே எவ்வளவு தூஷித்துத் தன் கஷ்டங்களே எண்ணுத தன்மையிலிருந்தாலும், ஏதோ மாதாமாதம் இவ்வளவு தொகை அந்த அம்மைக்குக் கொடுத்துவிடுகிறதென்று தனக்குள் முடிவு செய்துகொண்டு, அவ்விதமே கொடுத்துக்கொண்டும் போகிருன். அதிலே ஒரு மாதம் இவன் செலவுகளுக்கே, உதைத்துக்கொள்ள, அந்த சமயம் பாதி பணம் தந்து, மறு பாதியைச் சில நாளேக்குள் கைக்குப் பணம் வந்ததும் கொடுத்துவிடுவதாய்ச் சொல்லுகிருன். இதில் தாய்க்குக் கோபம் வந்து அந்தப் பணத்தை வீசி எறிகிருள். இந்த அல்ப பணத்தை வைத்துக்கொண்டு நான் என்ன செய்ய என்கிருள். அதற்குக் குமாரன், நான் அந்தப் பாதிப் பணத்தையே இந்த மாதத்திற்கென்று தரவில்லேயே, இந்தத் தடவை என் கைக்கே இல்லாததால் இந்தப்பாதியைத் தந்தேன், மறுபாதியையும் கொடுத்து விடுவதாகவல்லவா சொன்னேன், அதற்குள் இந்தக் கையிலில்லாதவனே இப்ப டிக் கோபிக்கலாமாவென்று கண்கலங்கி விழிநீர் பெருக்குகிருன். உடனே எங்கெங்கோ போய்க் கடன் வாங்கிவந்து மறுபாதிப் பணத்தையும் தாயிடம் தருகிருன். அந்த அம்மையோ சிடுசிடுத்து அதையும் வீசி எறிந்து இந்தப் பாழும் பணமே எனக்கு வேண்டாம் என்று கண்டபடி பேசித் தூற்றுகிருள். ஐயோ! அன்னேக்குத் திருப்தியில்லேயே, மகன் என்று கொஞ்சமும் இரக்க மில்லேயே என்று தெய்வத்தின் முன்னே முறையிட்டுக் கதறுகிருன். இத்த கைய விதமாய் மனது பேதப்பட்டுப்போன தாய்க்கு எந்த வகையில் என்ன விதமாய் நடந்துகொண்டு திருப்தி செய்விக்கிறதெனத் தவிக்கிருன்!

இவ்விதமாய் மனம் பேதித்துப்போன இந்தத் தாய் தன் மகனிடத்து வைக்கவேண்டிய அன்பையெல்லாம் தன் குமார்த்தியின் மக்களிடத்து வைத்து அந்தப் பேரப்பிள்ளேகளே வாழவேண்டும், தன் குமாரன் தாழ்ந்தே போக வேண்டும், கெதிகெட்ட பயல், அநாதிப் பயல், பேடிப்பயல், இவனுக்கும் இவ் வளவு ஆணவமா? ஒரு திரும்பாவது அவனுக்கு வைக்கப்போகிறதில்லே, ஒரு

செம்பு பாத்திரம் கிண்ணிகூட, ஒரு தூசுகூட அவனுக்குக் கொடுக்கப்போகிற தில்லை, அவனுக்கு ஏதாவது சொத்தும் வீடும் வைத்தால் அவன் மனைவிக்குச் சொந்தமாய்விடும், அவனுக்குப் பிள்ளைகள் பிறப்பதேது, அவன் பேருக்கு எழுதிவைத்த வீட்டையும் பேரப்பிள்ளைகளுக்கு ஆக்கிவிடுகிறேன் என்று உறுமுகிருள், ஆரவாரிக்கிருள், வருவார் போவாரிடமெல்லாம் சொல்லி அவன் பவிசியைக் கெடுக்கிருள். அவன் பேருக்கிருந்த வீட்டையும் பேரப்பிள்ளைகளுக்குப் பங்கு போட்டுப் பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் செய்தும் விடுகிருள். எல்லா அந்தரங்கப் பேச்சும் காசு பணம் கணக்குகளும் தன் மகள் வயிற்றுப் பேரப்பிள்ளைகளோடேதான்! தன் மகனைச் சேர்ப்பதே யில்லை. அவனுக்காக இரங்குவதுமில்லை. இனி, இந்தப் பேரப்பிள்ளைகளோ காலமுழுதுக்கும் அந்த ஏழையான தாய் மாமனின் ஆதரிப்பிலேயே இருந்து தின்று கொழுத்துவிட்டு அவன் தலைக்கே சட்டி கவிழ்க்க வருகிருர்கள்! அவனைக் கண்டபடி தூஷிக்கிருர்கள்! அவன் மனைவியை அதிகாரம் செய்வதும் வேறே! இன்னும் அவனை விரோதியாகவும் பாவிக்கிருர்கள்! என்ன குழம்பு, என்ன சாதம், கடித்துக் கொள்ள ஒரு மண்ணுமில்லை யென்று சாப்பாட்டின்போது கண்டபடி தூற்றுகிருர்கள்! பின்னும் அவனை, இவனென்ன பிரமாதக்காரன், நாலு ரூபாய் சம்பளத்தில் நாறிக்கிடந்து சந்தி சிரித்தவன், இவன் சங்கதி தெரியாதா? இந்த 'ராங்கி'யெல்லாம் இப்போதல்லவா வந்தது என்கிருர்கள்! அவனை முற்றிலும் பகைக்கிருர்கள்! அவன் தாயின்வீட்டிலிருந்துகொண்டே "உன் வீடா" என்று அவனைக் கேட்கிருர்கள்! வியாதி வந்தகாலத்தில் காற்றுக்குக் கொஞ்சம் பலகணியின் கதவைத் திறந்துவைத்தால், அதை இவர்கள் மூடிவிட்டு, ஓ என் வீடு, பலகணி மூடித்தான் இருக்கவேண்டுமென்று அநீதம் செய்கிருர்கள்! இவர்களுக்கு இந்தத் தாய்மாமன் எவ்வளவோ செலவிட்டும் ஆதரித்துமிருக்க, அவன்மீதே குதிரை ஏறுகிருர்கள்! இவ்வளவு செலவு செய்தும், பாடுபட்டும், காலமெல்லாம் உழைத்தும் நல்ல பேர் காணுதவனுக்கா, இனி மொண்டு வார்த்துக் காணப்போகிறது? அது ஒருநாளுமில்லை.

இனி இந்த ஏழையின் யதார்த்தத்தையும், அவனது கள்ளமற்ற உள்ளத்தையும், அவன் பாடுகளையும் பார்த்துக்கொண்டிருக்கிற கடவுள் ஒருவர் உண்டல்லவா? அவர் யாவருக்கும் பொதுத் தாய் தந்தையல்லவா? தர்மம் தலை காக்காது போகுமா? தாயின் எண்ணத்துக்கு விரோதமாக அவனைக் குழந்தை குட்டிகள் உள்ளவனுக்கி அவன் குடித்தனத்தை ஆசிர்வதிக்கிருர். செம்பு பாத்திரங்கள் அவன் தாய் அவனுக்குத் தராவிடினும் அவனே தன் கைப்பணத்தில் வாங்கி நிறைத்துக்கொள்ள அவனுக்குப் பண வருமானத்தை உண்டாக்குகிருர். கதிகெட்ட பயலென்று வாழ்த்திய தாயின் கண்ணுக்குமுன்னே அவன் கையில் நாலுகாசும் சொத்துகளும் சேர வைக்கிருர். குமாரனுக்குத் தரக் கூடாது என்று மறைத்துச் சேர்த்த பணத்தையெல்லாம் வட்டிக்குத் தந்த வகையில் அதைப் பெற்றவர்கள் முழு முதலையே விழுங்கிவிடுகிருர்கள்! தாயும் தன் வினையை நினைத்துத் திகைக்கிருள். கடவுள் செய்துவைக்கும் திருவிளையாடல் இவ்வாருக, இனி சத்தியவந்தனை அந்தக் குமாரனே, தனக்கு என்ன துரோகம் செய்தாலும் அவள் தாய், அவள் வஞ்சகம் அவளோடு இருக்கட்டும், தான் செய்யவேண்டிய ஆதரிப்பைத் தன் சக்திக்குத் தக்கபடி நடத்த வேண்டியதே என்று தன் வருவாயில் அவளுக்குக் கொடுத்து விஸ்வாசமும் அன்புமாகவே நடந்துகொள்கிருன். என்ன நடந்தாலும், இந்த 'மொண்டு

வார்ப்பதால்' அந்தத் தாய் திருப்தியடைந்து விடுகிறதில்லை. திருப்திகொண்டாலும் கொள்ளாவிடினும் தன் மனசாக்ஷிக்குச்சரியாய் தெய்வத்துக்குப் பிரீதியாக நடந்துகொண்டுவிடுவது தன் கடமையென்று அந்தக் குமாரன் எண்ணி நடந்துவருவதாகிருன். தாயின் அன்பு மூன்று விதங்களில் கெட்டுக் குறைந்து விடுகின்றது. (1) மருமகள்மீதுள்ள துவேஷத்தினுல் மகன் செத்தாலும் சாகட்டும்—மருமகள் தாலியறுத்தால் போதுமென்று நினைக்கிற அவ்வளவு பேத சிந்தைக்கு வந்துவிடுகிருள். (2) சம்பாதிக்கும் குமாரனின் சொத்துக்களை மற்ற குமாரர்களுக்குச் சேர்த்து வைக்க விரும்புவதில், சம்பாதிக்கும் குமாரன் அதைக் கண்டிக்கப் போக, அந்த வகையில் அவனை வெறுக்கிருள். அன்பைத் தன் மற்ற குமாரர்களிடமே கொண்டு சம்பாதிப்பவனிடத்து அன்பு தவறுகிருள். (3) தன் குமாரத்தியின் வயிற்றுப்பிள்ளைகளிடம் அன்பு கொண்டு தன் குமாரனை வெறுப்பதாலும் தாயின் மனம் பேதிக்கிறது. இப்படிப் பேதப்பட்ட தாயாருக்கு எவ்வளவு பணிந்து வணங்கி நடந்துகொண்டாலும், முன்பு எவ்வளவோ நடந்துகொண்டதற்கே திருப்திபடாத நிலையில்—மழையே பெய்து நிரம்பாத ஸ்திதியில், இப்போது நடந்துகொள்கிற இந்த மொண்டு வார்ப்பதால்தானு நிரம்பிவிடப் போகிறது? எந்த நாளும் மனம் வேறுபட்டாருக்கு அதிர்ப்திமுகம் தான். இனி, இவன் ஆதரிப்பிலிருக்கிற அந்தத் தாயின் பெண்ணினது வயிற்றுப்பிள்ளைகளுக்குத் தானுகட்டும், அவர்களுக்கு இவன் செய்கிறது—முன்பு மழை பெய்தே நிரம்பாதது இப்போது இந்த மொண்டுவார்ப்பதால் நிரம்பிவிடப் போகிறதா?

இவ்விதமே, ஒருவனை அவன் எவ்வளவோ அன்புடையவனென்றும், நம்மை நெருங்கி நமக்குத் துணையாக நிற்பானென்றும் நம்பிவிட்டு அவனுக்கு எவ்வளவோ கொடுத்தும், எவ்வளவோபிரியமாயும் நடந்து கொள்ளுகிறோம். இப்படியே நமது நெருங்கிய ஸகோதரர்களென்றும் உறவினர்களென்றும் எவ்வளவோ செலவிட்டும், எத்தனையோ விருந்து உபசாரங்கள் நடத்தியும் விசுவாசமாய் நடந்துகொண்டு போகிறோம். கடைசியிலோ இவர்களெல்லாம் வேற்று மனிதர்களாய், நம்மையே தூற்றியும் பகைத்தும், நமக்கே 'சுண்ணும்பு தடவ'வும் முற்பட்டுக்கொள்கிருர்கள். இத்தகையோருக்கு இன்னும் நாளைக்கும் செய்துகொண்டுதான் வருகிறோம். ஆயினும் என்ன; முன்பு அவ்வளவு செய்ததுக்கும் விசுவாசமாய் நினைக்காதவர்கள், இப்போது நாம் செய்வதற்கு நன்றி மனத்தினராய் எண்ணப்போகிருர்களா? மழையே பெய்து நிரம்பாதது இந்த மொண்டுவார்த்ததால் நிரம்பி விடப் போகிறதா? அது என்றைக்குமில்லை. அற்பம் என்றைக்கும் அற்பமே யென்று கண்டுகொண்டு அதைப்பற்றி விசாரப்படாமல், பட்டும் படாத நிலையில் மானமாய் ஒதுங்கவேண்டுமென்பது இப்பழமொழியின் கருத்து.

> கையில் காசு இருக்கிற வரையில், செலவிடுகிற வரையில் வீட்டுச்சு எல்லாரும் உறவுதான். வரவுதான். தன் வயிற்றுக்கு சம்பாதிப்பதுடன் கூட, வீட்டிற்குவந்து போவார்க்குச் செலவிடவும் சேர்த்து சம்பாதிக்கவேண்டியுளது. வரவு முழுதுக்கும் செலவாய் விடுவதில் நாளைக்குப் பாயிற் படுத்தால் உதவுவோர் யார்? குடும்ப ஸம்ரக்ஷணை எப்படி?

(தொடரும்.)

சாஸ்திர நுட்பங்கள்.

(370-ம் பக்கத் தொடர்ச்சி.)

115. வெண்காரமானது பொன் வெள்ளி முதலிய லோகங்களை ஒட்டுவதற்கும் பற்றவைப்பதற்கும் புடமிடுவதற்கும் வழங்கப்படும்.

116. வெண்காரத்தை • உருக்க, அது நுரைத்து தன்னிலுள்ள நீரை நீக்கி சிவந்த சூட்டுக்குக் குறைந்த சூட்டில் தெளிந்த கண்ணாடிபோலாகும்.

117. இரும்பை ஒட்டுவதற்கு எட்டுகிற பக்கங்கள் இரண்டும் கறையில்லாமல் முழுதும் சுத்தமா யிருந்தாலன்றி அவை ஒட்டாது. ஆகிலும் கறையுண்டாகாதபடி இரும்பைக் காய்ச்சமுடியாது. இதற்குக் காய்ந்த பகுதியில் வெண்காரமாவைத் தூவினால், அது உருகி கறையைக் கரைத்து இரும்பினால் மறுபடி கறைப் பிடியாதபடி அதை சுத்தமாகக் காத்து, இரும்புத் துண்டுகள் தடையின்றி ஒட்டுவதற்கு உதவும்.


118. இரத்தினங்களி லெல்லாம் சிறந்தது வச்சிரம். இதற்கு வைரம் என்றும், ரவை என்றும் பெயர் வழங்கும். வச்சிரம் என்றாலும் வைரம் என்றாலும் மிக உறுதியான வஸ்து என்பது பொருள். உலகத்திலுள்ள வஸ்துக்களிலெல்லாம் அதிக கடினமானது வைரம்தான். இந்த வைரங்களில் சிறந்தவை இந்து தேசத்தில் கோலகொண்டா, பண்டல்கண்டு இவ்விடங்களில் எடுக்கப்பட்டவை. பார்னியோவிலும், பிரேஜிலிலும், யூரல்மலைகளிலும் வச்சிரக் கனிகள் இருக்கின்றன. இது பொன், பிலாடினம் என்ற லோகங்களோடு சேர்ந்ததாயும் காணப்படும். வைரம் கற்பாரில் ஒட்டினதாய்க் காணப்படுவது அரிது. அது பெரும்பாலும் தண்ணீரோடு அள்ளுண்டுபோன மணற் கற்களுக்குள்ளேயே காணப்படும். வைரம் இயல்பிலே சற்று உருவொளியுள்ளதாய், திரண்ட சிறு கூழாங்கற்கள் போல மெல்லிய மங்கற் படலத்தால் மூடப்பட்டதாக இருக்கும். இப் படலத்தை நீக்க, கல் துலங்கும்.

119. வைரத்துக்குப் பெரும்பாலும் நிறமில்லை. நிறமற்ற வைரம் மெத்த விலை உயர்ந்தது. சில வைரங்கள் நீலம், மஞ்சள், சிவப்பு, பச்சை, கறுப்பு நிறமாக இருக்கும்.

120. வைரத்தின் முதல் வடிவம் 1-ம் படத்தில் காண்கின்ற வடிவமே. ஆகிலும், அதன் பக்கங்கள் பெரும்பாலும் குவிந்தும், அருகுகள் திரண்டும் இருக்கும். இது நகைகளுக்காக மூன்று மாதிரியாக வெட்டப்படும். 2-ம் படத்தில் காண்பது ஒரு மாதிரி. 3-ம் படத்திலும், 4-ம் படத்திலும் காண்பது ஒவ்வொரு மாதிரி.




1



2 3 4

கணவனை இழந்தோர்க்கு சுகமான தூக்கமாம். மனைவியை யிழந்தோர்க்கும் அப்படித்தானாம். இவர்களின் உள் ஏக்கத்தை எவர் அறிவார்?


5


6

5-ம் படத்திலும், 6-ம்படத்திலும் காண்பது நகைக்குக் கூடாத வேறு மாதிரிகள். நகைக்கு வெட்டி அழுத்தமாக்குவதால் நிறையில் பாதிவரைக்கும் குறைந்துபோம்.

121. எப்பொருள்களிலும் வைரமே அதிக கடினமானது. இதை வைரத்தின் பொடியால் மாத்திரமே வெட்டலாம், கீறலாம். இதற்கென்றே கீழ்த்தரமான குறைந்த வைரக் கற்களைத் தூளாக்குவார்கள். மினிட்டுக்கு ஈராயிரம் மூவாயிரம் முறை சுற்றும் ஓர் சிறு உருக்குச் சக்கரத்தில் வைரத்தூளும் எண்ணெயும் விட்டு வெட்டுவார்கள். வெட்டவேண்டிய வைரக்கல்லை ஈயத்தில் மாட்டி, அதை ஓர் தண்டில் பூட்டி, தண்டின் ஒரு தலைப்பை மேசையிலே சுற்றிக்கொண்டிருக்கிற உருக்குச் சக்கரத்தில் வைத்து, வைரம் மாட்டியிருக்கிற மற்றத்தலைப்பிலே தேவையானபடி பாரம் வைத்து அமர்த்துவார்கள். வைரத்தை விரும்பியபடி எந்த மாதிரியாகவும் வெட்டமுடியாது. அது பிளக்கும் நேரில் மாத்திரம் வெட்டலாம்.

122. வைரங்களை வெட்டும்விதம் 1456-ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. ஐரோப்பாவில் வைரம் வெட்டும் வேலை முக்கியமாய் அம்ஸ்டடம் என்ற பட்டினத்தில் நடக்கிறது. வெட்டும்போது பிறக்கும் சூடு சில வேளை வைரம் பதிந்திருக்கிற ஈயத்தையும் உருக்கும். ஒரு பக்கம் வெட்டுவதற்கு மூன்று முதல் முப்பது மணித்தியாலஞ் செல்லும்.

123. வைரத்துக்கு விலை காரற்று என்ற நிறையின்படி குறிக்கப்படும். காரற்று (Carat) என்பது மூன்று கிறேனுக்கு சற்று கதித்த நிறை. அந்தந்த வைரத்துக்கு விலை காரற்று நிறையின் சதுரத்துக்குத் தக்கதாக இருக்கும். அதாவது மூன்று வைரங்கள் ஒன்று, இரண்டு, மூன்று என்ற காரற்று நிறையானால் அவைகளின் விலை ஒன்று நாலு ஒன்பது என்ற விதப்படி யிருக்கும். பெரும் வைரங்களுக்கு 'இப்படியே விலை பார்த்தால் அவை எட்டாமற்போகும்.

124. வைரம் அழியாது. எந்த நீரிலும் கரையாதது. வயிரத்தை எரித்தால் கரித்திராவகம் தவிர, வேறொன்றும் அதிலிருந்து உண்டாவதில்லை. அதனால் அது கரியே ஒழியே வேறொன்றுமல்ல. அது பூமியில் என்ன காரணத்தால் அந்த உருவமடைகிறதோ அது இன்னும் தெரியவில்லை.

125. வைரத்தின் உறுதியினால், அது ஏதோ வகையாய் தாபர விளைவென்றே விளங்குகின்றது. வைரம் தாபர பதார்த்தத்தை அடக்கி யிருப்பதும், வைரத்தை எரித்தால் அதிலே சொற்பமாய்ப் பிறக்கும் மஞ்சட் சாம்பல் சிற்றறைகளை யுடையதாய் இருப்பதும் இதற்கு அத்தாட்சிகளாகும். இதைப்பற்றி அதிக கவனமாய் ஆராய்ந்த **புரூஸ்தர்** என்பவர் இது அம்பரைப்போன்ற கல்லாய் விட்ட ஓர் துளி பிசின் என்று எண்ணுகிறார்.

(தொ-ரும்)

விவேகமும் படிப்புமில்லாவீட்டில் சிக்கிக்கொண்டுள்ள அறிவாளிக்கு வெகுவெகு பாடு. அதனிலும் துன்பகரமான அநுபவம் வேறொன்றிராது.

ஒப்புக்கு விசாரிக்க வருபவர்கள் அதிக தொந்தரையும் வீண் பேச்சும் தாரிருந்தால் வியாதியஸ்தனுக்கு அது எவ்வளவோ பெரிய சுகம்.

பிரபஞ்ச தரிசனம்



இந்தியாவுக்கு வரும் ஐரோப்பியர் நமது பட்டணங்களில் குளிர்ச்சி பொருந்தியும் சுத்தமாயும் ஆரோக்கியமாயும் ஒழுங்காயும் உள்ள ஸ்தலங்களிலே அரண்மனைக் கொப்பான மாளிகைகளிலே வசிப்பவர்களாய் இருந்துகொண்டு, நமது சுதேசிகளின் வாசஸ்தானங்களைத் தங்கள் தேசமாகிய சீமையிலுள்ள அமராவதியைப் பழித்த அழகுவாய்ந்த நேர்த்தியான நகரங்களுடன் சீர்தூக்கிப் பார்க்கின்றார்கள். இந்தியர்களுக்குள் எவர்களுடன் அவர்கள் விவகரிக்கின்றார்களோ அவர்கள் பெரும்பாலும் அவ் ஐரோப்பியரின் கீழ் ஊழியம் செய்யும் உத்தியோகஸ்தரேயாவர். வாஸ்தவமாகவே, துன்பமும் தரித்திரமும் இந்தியாவில் உள்ளனபோல் இவ்வுலகத்தில் வேறெந்த நாட்டிலும் இல்லை ; அசுத்தமும் குப்பையும் கூளமும் கசுமலமும் எங்குமே நிறைந்திருக்கின்றன. இந்த அசுத்தத்துக்கும் அடிமைத்தனத்துக்கும் அற்பத்தனத்துக்கும் நடுவே எவ்வித நன்மையாவது சிலாக்கினையாவது இருக்கக் கூடுமென்றால் அதை ஐரோப்பியர் ஒருக்காலும் நம்பமாட்டார்கள்.

***

இனி, ஐரோப்பியரைப் பற்றி நாம் நினைப்பதோ—சுசிகரமில்லை, எச்சிலில்லை, ஆசாரமில்லை, கண்டதைத் தின்பதும், லஜ்ஜையின்றி ஸ்திரீகளுடன் கூடிக் குடித்து பால் (நாட்டியங்)களில் கூத்தாடுவதும், வியவஸ்தையின்றி ஸ்திரீகளுடன் கலந்து பழகுவதுமாயுள்ள ஜாதியிலே என்ன மேன்மை சுகுணம் இருக்கப் போகிறது?—என்று நாம் கேட்கிறோம்.

***

இவ்விரு கருத்துகளும் வெளித்தோற்றத்தைக் கண்டு எண்ணிய சிந்தைகளேயன்றி உள்ளூரப் பார்த்துச் சொன்னவையல்ல. நாம் அயல் நாட்டாரை நம்முடன் கலந்து பழக விடுவதில்லை. அவர்களை மிலேச்சரென்றிகழ்கிறோம். அவர்களும் நம்மை அடிமைகளென்றும், கறுப்புப் பயல்களென்றும் இழித்துக் கேவலம் செய்கின்றார்கள். இவ்வுபய பக்ஷத்திலும் சிறிது உண்மை அவசியம் இருக்கத்தான்வேண்டும். ஆனால், உள்ளே இருக்கும் வாஸ்தவத்தை உபயபக்ஷத்தாரும் பார்த்தவரல்லர்.

***

ஸ்வதர்மமும் ஜாதிதர்மமும் தான் பிரதிதேசத்திலுமுள்ள ஜனஸமாஜங்களின் க்ஷேமத்துக்கு ஹேதுவாயும், முக்திக்குப் படியாயும் இருப்பது. இந்த ஸ்வதர்மமும் ஜாதிதர்மமும் எப்போது அழிந்ததோ அப்

அவன் அருகில் இல்லாதபோது அவனைச் சிலாகித்து உயர்த்திப் பேசு. எதிரில் இருக்கையிலோ அவன் பிழையைப் பேசித் தெளிவித்துத் திருத்து.

போதே நம் தேசத்துக்கு அதோ கதியும் ஆரம்பித்துவிட்டது. இப்போது நமக்குள் வழங்கிவரும் ஜாதிபேதம் நமக்குள்ள நூதன விபத்துக்களில் ஒன்றும். ஒவ்வொருவனும் தன் சொந்த கிராமத்தில் வழங்கிவரும் ஆசாரத்தையே நித்தியமான வைதீகாசாரமென்று நினைத்துவிடுகிறான். குணத்தால் ஏற்பட்ட ஜாதிதான் ஆதியானது. நம் தேசத்தின் உயிர் நிலைபோலுள்ள அத்தகைய ஜாதி தர்மத்துக்குத்தான் ஆபத்து உண்டாய் விட்டது. இல்லாவிட்டால் இப்படிப் பட்ட தன்மதிப்பற்றதான ஹீன ஸ்திதிக்கு நாம் வருவானேன்?

***

ஸந்தர்ப்பமென்பது ஜன ஸமூகத்திலே ஒரு வகுப்பாருக்கு மட்டும் கிடைத்து அவர்கள் உயரப்போய் விடுகின்றனர். பிறகு அதே ஸந்தர்ப்பம் வேறொரு வர்க்கத்தாருக்குக் கிடைத்துவிடும்போது, எற்கெனவே உயரப்போனவர்களுடன் இவர்கள் போட்டி போடுவோராகிறார்கள். இத்தகைய ஸந்தர்ப்பம் பின்னும் சில வகுப்பாருக்குத் தொடர்ச்சியாய்க் கிடைக்கவே அவர்களும் உயர ஏறிக் கூட்டம் பெருத்து, ஒருவர்மீதொருவர் போட்டி போட்டுக்கொண்டு, உயரப் போனதற்கே ஒரு மதிப்பு இல்லாத நிலையில் திண்டாட்டத்துக்கு வந்துவிடுகின்றனர். தற்காலம் படித்த வகுப்பார் கவலைமிஞ்சி உத்தியோகத்திற்குத்திண்டாடுவது இப்படித்தான்.

***

சிங்கம் தனது நான்கு கால்களுடன் நடக்கிறது. அது மனிதனைப் பார்த்து அவன் நடக்கிறபடி இருகால்களால் நடக்க முயல்வதும், அந்த சிங்கத்தைப்போலவே மனிதன் தன் இரு கைகளையும் கால்களாக்கிக் கொண்டு நான்கு கால்களில் நடக்கப் பிரயத்தனிப்பதும் 'இயல்புமாற்ற' மாகும். இது கூடுமா? எவ்வளவு நேரத்துக்கு இது நீடிக்கும்? அது போலவே, இந்தியர் தமது நாட்டின் பூர்வ நாகரீகத்தை உதறித் தள்ளி மேற்றேச நாகரீகத்தை முற்றிலுமே ஏற்பதென்ற இயல்புமாற்றமும் நன்மை செய்யாவாம். அது அனர்த்தத்திலேயே முடியும். ஆனால், சிங்கத்தின் கம்பீரமான நல்ல குணங்களை மனிதன் கிரகித்துக்கொள்வது குற்றமில்லை. அவ்விதமே, நாம் மேற்றிசையாரது நாகரீகத்திலுள்ள நல்ல அம்ஸங்களைக் கிரகிக்கலாம். ஆனால், முழுதுமே மேற்றிசையாராக மாறி, நமது தேச நாகரீக உருவமே யில்லாமல் அழிந்துபோகப் பார்க்கக் கூடாது.

***

விழித்துக்கொள் என்று மற்றவர்களுக்குச் சொல்லுகிறவர்கள், தாமாவது நஷ்டப்பட்டுப் போயிருக்க வேண்டும்; அல்லது தமது சந்ததியாராவது ஏமாறிப்போனவர்களாகி, அந்த அநுபவங்களைத் தம்மில் உணர்ந்துகொண்டு, அதனால் அப்படி எச்சரிக்கை செய்வோரா யிருக்கவேண்டும். இந்த இருவகையையும் சேராதவர்களுக்கு '**விழித்துக்கோள்**' என்று பிறருக்குப் புத்தி சொல்ல ஒருபோதும் யோசனை தோற்றியிராது. தாங்களே பட்டும் கேட்டும் கண்டுமிராத விஷயத்தில் எவரும் சிரத்தைப்பட்டுப் பேச முன்வரமாட்டார்கள்.

***

ஒரு குடும்பத்தின் கௌரவ நிலையை அறிய விரும்பினால், அது

தன் சாமானை வைத்துப்போன இடத்தில் வீட்டுக்காரர் பூட்டிக்கொண்டு வெளியில் சென்றுவிட்டால், அவர் வருகிறவரையில் காத்திருக்கவேண்டியதே.

முன்னிருந்த பெரிய வாழ்வினின்றும் சோதித்து உணரவேண்டுமே யன்றி, தற்காலக் கேவல நிலையினின்றும் எதுவும் தீர்மானித்துவிட வொண்ணுது. அரிச்சந்திரனின் நிலைமையை மசானம் காவல் காக்கும்போதுள்ள கேவல உடையைக்கொண்டு சொல்லி விடலாகாது. அவ்விதமே, ஒரு நாட்டின் சிறப்பைக் குறித்தும் அதன் புராதன காலப் பெருமையைக் கொண்டு சோதித்துத் தெளியவேண்டுமேயன்றித் தற்கால ஈனநிலையினைப் பார்த்துவிட்டு அவசரப்பட்ட தன்மையில் அபிப்பிராயம் சொல்லிவிடக் கூடாது. இந்தியாவைக் குறித்தும், இந்தியரைக் குறித்தும் மேனுட்டவர் கொள்ளும் சிறுமையான எண்ணங்கள் தற்காலத்திய ஈன சந்தியை நோக்கி உண்டாகியவைகள். பூர்வத்திலிருந்து ஆராய்வாருக்குத்தான் உண்மை—உன்னதம் புலனுகும்.

***

ருஷிய—ஜப்பானிய யுத்தத்திற்கு முன் ஜப்பானைப்பற்றி உலகம் நினைத்தது ஒருவிதம். அந்த யுத்தத்தில் ஜப்பான் வெற்றி கொண்டதற்குப் பிறகு அதை உலகம் மதித்தது வேறொருவிதம். துருக்கி தேசத்தின் பல பாகங்கள் பல நாட்டாருக்குப் பங்கிடப்பட்டு அதன் விஸ்தீரணம் சிறுத்து அது முழுகிப்போனபோது, அவ்வளவுதான் அதன் தலைவிதி—கதி என்று முடிவு கட்டினுேர் ஒருசாரார். பிறகு அது பெற்றுக்கொண்டுவிட்ட ஜயபேரிகையை நோக்கி உலகத்தின் மதிப்பு வேறுவிதமாய்த் திரும்பிவிட்டது. ஆப்கானிஸ்தானத்தைப்பற்றி சில வருஷங்களுக்கு முன்பு நினைத்தது ஒரு தினுசு. இப்பொழுதோ அது ஜப்பான் அதி தீவிர பக்குவத்தில் உருவாயினதுபோல் நவீன ஆப்கானிஸ்தானமாகப் புதுத் தோற்றம் கொள்ளத் தொடங்கி யிருப்பதில் அதைக் குறித்து ஆவலுடனும் எதிர்பார்க்கும் கருத்தின் உயர்வுவேறொரு தினுசு. இவ்வண்ணமே, இந்தியாவும் ஒருகாலத்தில் ஸ்வராஜ்யம் பெற்று நறுமணம் கமழக்கூடும். அதைப்பற்றி அப்போது பாராட்டிப் பேசும் அபிப்பிராயமும் வேறு விதமாய் உயர்வுற்று ஓங்கி நிற்கக்கூடும். வாழ்பவனையும், வாழ்வு தடுமாறியவனையும் உலகம் மதிக்குந்தன்மை எத்துணையோ பேதம்கொண்டதென்பது எவரும் கண்டுவைத்த சங்கதி. பெரிய தேசமாகிய இந்தியா திடீரென்று முன்னேக்கிச் சென்றுவிட முடியாது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மேல் நிலைக்கு ஏறவேண்டும். அவ்விதம் உயர்ந்துகொண்டேதான் போகின்றது. என்றைக்காவது ஒருநாள் அது தனது ஸ்வராஜ்ய எல்லைப்பேற்றினைக் கிட்டிவிடுவது திண்ணம். அதற்காவனமட்டும் நாம் செய்து கொண்டு செல்லக்கடவோம். ஓயாது அந்த முயற்சியிலேயே உழைக்கக் கடவோம். அது நம்மை இழிவு படுத்துவாருக்கு நாம் மௌனமுகமாய் இருந்து தெரிவிக்கும் விடையாக இருக்கட்டும். இறைவன் நமது பிரயத்தினங்களுக்கு விரைவில்தானே வெற்றி நல்குவார். அவர்பாதம் துணை.

> பிறருக்கு அடங்கி நடக்காமல் சுவாதீனத்துடன் வாழப் பிராணிகளும் விரும்புகின்றன. அந்த லட்சியந்தைநீகொள்ள இந்தியர் ஒவ்வொருவருக்கும் உரிமை யுண்டு. ஆகையால் மாணவர்கள் முதலிய இளைஞர்களும் சுவாதீனத்தைப் பெறுவதையே லட்சியமுடையவர்களாக இருக்க வேண்டுமென்று பண்டித மோதிலால் நேரு அழுத்தமாய் வற்புறுத்துகிறர்.



1. சில பணக்காரர்கள் தங்களிடம் அதிகப் பணம் இருப்பதை அக்கிரமம் செய்வதற்கு லைசென்ஸ் கிடைத்ததாகக் கருதிக் காரியங்கள் செய்கிறார்கள்.

2. இந்த உலகத்தில் மனித வாழ்க்கை ரோஜாப்பூ மெத்தையாக இல்லை. வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்திருந்தாலும் துன்பமே அதிகமாகக் காணப்படுகின்றது.

3. சில துன்பங்கள் முதலில் பெரிதாகக் காணப்பட்டாலும் நாளடைவில் சிறிதாக மாறி மறைந்து விடுகின்றன. வேறு சில துன்பங்கள் ஆரம்பத்தில் சிறிதாகக் காணப்பட்டு நாள் செல்லச் செல்லப் பெரிதாக வளர்ந்து பெருந் துன்பத்தைக் கொடுக்கின்றன.

4. சில மனிதர்கள் ஆரம்பத்தில் உயர்ந்த நற்குணங்கள் வாய்ந்த பெரிய மனிதர்கள்போல் தோற்றப்படுகிறார்கள். அவர்களிடம் நெருங்கிப் பழகினால், அவர்களுடைய அல்பத்தனங்களும் அயோக்கியத்தனங்களும் மனதிற்குத் தெளிவாகப் புலனாகின்றன.

5. திறமைசாலியாக இல்லாத முதலாளிகள் சிப்பந்திகள் மீது அடிக்கடி குற்றஞ் சொல்வது ஒரு கௌரவமான வழக்கமாய்ப் போய்விட்டது.

6. சில முதலாளிகளுக்கு யோக்கியமும் திறமையுமான சிப்பந்திகளைக் கண்டால் பிடிக்கிறதில்லை. எங்கே தங்களைப்போல் எதிர்க் கடை ஒன்று வைத்து முன்னுக்கு வந்துவிடுவார்களோவென்று பொறாமைப்படுகிறார்கள். அவர்களை நீக்கியும் விடுகிறார்கள். அல்லது அவர்களின் உழைப்பைப் பாராட்டிப் பேசினால் எங்கே அதிக சம்பள உயர்வு கேட்பார்களோ வென்றும் பின்னடைகிறார்கள். ஏதேனும் அவர்களின் வேலையில் ஒரு குற்றம் கற்பிக்கப் பார்க்கிறார்கள்.

7. சம்பளம் வாங்கித் தின்போர்களில் சிலர் தாங்கள் செய்த குற்றங்களை மறைப்பதற்காக முதலாளிகளிடம் செல்லும்போதெல்லாம் பிறர் மீது கோள் சொல்லுகிறார்கள். சொந்தப் புத்தியில்லாத முதலாளிகளும் 'ஊம்' கொட்டிக் கேட்கின்றார்கள். "புறம் கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் சாதல் அறம் கூறும் ஆக்கம் தரும்" என்பதை உணர்வதில்லை.

கோவை—உலகானுபவ சங்கம்.

ஒரு விஷயத்தில் அறிவும் சிரத்தையும் இளமைப் பருவத்தில் உண்டாகாவிடின் பிற்காலத்தில் உண்டாக மாட்டா. இது பிரத்தியக்ஷ அநுபவம். எனவே, மாணவர்கள் ராஜீய வாதங்களில் கலந்துகொள்ளாமற் செய்துவிடின் ராஜீயவாதமே தேசத்தில் ஒழிந்துவிடலாம். எந்த முயற்சிக்கும் உத்சாகத்[illegible]க்தமே ஒரு புதிய ஜீவனையும் ஒளியையும் கூடயிருந்து உண்டுபண்ணுவது மாணவர்கள்தான்.

II

1. **பெரியவரா ?:**—'எனக்குத் தெரிந்து பிறந்த நேற்றைப்பயல் ; என்னவோ அதிகப்பிரஸங்கம் செய்கிருனேயா !' என்கிருர் அந்த தொந்திப் பெரியவர். வயது பெருத்து தலை நறைத்துவிட்டால் மட்டும்போதுமா ?

2. **பதறுதே:**—உன்னைப்பற்றி அவன் வைதானென்பதைக் கேட்டதும்,— அப்படிச் சொல்லுவானு,— என்கிற சாந்தமான யோசனை உனக்கு இல்லாமற் போவதால், வீண் ஆத்திரத்தில் உன் புத்தியைக் கொண்டு போகிருய். பதருதே—நிதானி.

3. **பழைய கடனுளி:**—பழய கடனைக் கேட்டால், "வாங்குகிற வழியாக வாங்கிக்கொள்" என்கிருன். இன்னும் கேட்டாலோ கையாலும் காலாலும் பேசவந்து வெகுகோபமாகி உதைப்பேன் பார் என்கிருன் !

4. **ஒரு புருஷனின் கூற்று:**—நானே முன் கோபி. அதனுல் என் மனைவி பலமுறை அடிபடுகிருள். அந்த சமயம் பேசாதிரு, அடிகளுக்குத் தப்பித்து விடலாம் என்று மனைவிக்கு எச்சரிக்கை செய்தாலோ, அவளுக்கு சாந்தப்படும் குணமில்லை. அடிபடுவதிலும் குறைவில்லை. என்செய்ய?

5. **இல்லையா ?:**—அந்தப் பெண் வேண்டாமென்றவன், அவளை மணந்தபிறகு அவளுடன் கூடிக் களிக்கவில்லையா ? மனதிற்கு மகா இசைந்தது என்று மணந்துவிட்ட பிறகு மல்லுக்கு நிற்கவில்லையா ? அன்பினர் பகைவராகவில்லையா ? பகைத்திருந்தோர் பல்லிளித்துக் குலாவ வரவில்லையா ? அடித்தவன் பிறகு அன்புடனே அணைப்பதில்லையா ?

6. **பதிலுக்குப் பதில்:**—நீ வழியில் என்னைக் கண்டும்—ஜாடையாய் விலகிச்சென்ருல், நானும் அதற்கு மேல் ஒதுங்கிவிடுவேன். நீ அச்சமயம் வணங்கிஞல், நானும் பதிலுக்குப் பதில் வணங்குவதுண்டுதான். நீ நடக்கிற நடைக்குத் தகுந்தபடியே பிறரது நடையுமிருக்கும்.

T. S. குழந்தைவேல் முதலியார்.

கெட்ட செயல்களோடு கூடிய நற்குணம்.

நோக்கத்தின் நல்லதன்மையையும், செயலின் கெட்ட தன்மையையும் வெகு நுட்பமாய்ப் பிரித்துக் கூறும்போது, கெட்ட செயலோடுகூடிய நற்குணத்தையோ, அல்லது நன்னேக்கத்தையோ புகழ்ந்து கூறுவதால், கெட்ட செயலின் விஷமத் தன்மையைத் தங்களை யறியாமலே சிலாகித்து விடுகிருர்களென்பதை மறந்துவிடலாகாது. இவ்வாறு புகழ்ந்துரைப்பவர்கள் கெட்ட செயல்களை வெறுக்கும் அவர்களது இயற்கையான உத்தம குணத்தைத் தங்களை யறியாமலே கைநழுவ விட்டுவிடுகின்றனரென்றே சொல்லவேண்டும்.

சுயநலத்திலே வாழச் சிலர் பிறக்க, பரோபகார குணத்திலேயே காலமுழுவதும் ஜீவிக்கவும் சிலரை ஈசன் ஆங்காங்கு தோற்றுவிக்கிருர்.



நமது கதாப் பிரஸங்கி.

முருகனின் சத்யாக்கிரகம்.

(357-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஏச்சம்பட்டிக்கு மேற்கே ஒரு மைல் தூரத்தில் அவ்வூர் காளி கோயில் இருக்கிறது. கோவிலைச் சுற்றிலும் உதியமரங்களும் வேப்ப மரங்களும் அடர்ந்து பகலிலும் சூரிய வெளிச்சம் தெரியாதபடி இருட்டைச் செய்துகொண்டிருக்கின்றன. முதல் மரம் இது, விழுதுகள், இவையென அறிய முடியாதவண்ணம், எல்லாம் ஒன்றுபோலப் பருத்திருக்கிற ஒரு பெரிய ஆலமரம் ஆயிரக்கால் மண்டபம்போல் விளங்கிக் கொண்டிருக்கிறது. அம்மரத்தடியில் சூலத்தைப்போல் மூன்று பிரிவாகவும், மூங்கில் இலையைப்போல் ஒரே கூர்மையாகவும் இருக்கின்ற அநேக வேலாயுதங்கள் துருப்பிடித்து அழுக்கடைந்து கிடக்கின்றன. அவ்வால மரத்தில் இருப்புச் சங்கிலிகளில் மணிகளைக் கட்டித் தொங்கவிட்டிருக்கிறுர்கள். கோயிலின் சுற்றுமதில் சில இடங்களில் இடிந்து விழுந்தும், சில இடங்களில் விழத் தயாராகவும் இருக்கின்றன. அந்தக் கோவிலின் கோபுரத்திற்குத் தங்க "ஸ்தூபிகள்" கிடையா. எல்லாம் செங்கல் சுண்ணும்பினுலேயே கட்டப்பட்டவை. கோபுரத்திலிருக்கும் பதுமைகளுக்குக் கைகால்கள் போயும்; சிலவற்றிற்கு உருவமென்பதேயின்றி சுண்ணும்பெல்லாம் உதிர்ந்து செங்கல்கள் மட்டும் வெளியே நீட்டிக்கொண்டும் இருக்கின்றன. போதாக்குறைக்கு அரசு, வேம்பு முதலிய செடிகள் அங்கங்கே முளைத்துக் கோபுரம் பிளவுபட்டிருக்கிறது. கோவில் வாசலின் இருபுறத்தும் இரண்டு பெரிய உருவங்கள் செங்கல் சுண்ணும்பினுல் கட்டப்பட்டு வர்ணந் தீட்டப்பெற்றிருக்கின்றன. சுருட்டை மயிரும், மடித்த வாயும், கையிற் பிடித்த சூலமும், பிறவுமுள்ள தோற்றம் யாவரையும் நெஞ்சு திடுக்கிடச் செய்யும். சிங்கத்தின்மேல் சாய்ந்துகொண்டு, ஒரு கையில் சூலத்துடன் நிற்பதுபோல் காளியின் உருவம் செய்யப்பட்டிருக்கிறது. அக்காளிக்கு "வீரகாளி" யெனப் பெயர்.

புதன்கிழமை மாலை 3-மணியிருக்கும். அம்மனுக்குப் பூஜை முதலியன செய்து, ஒரு கனற் சட்டியில் வாசனைப் பொருள் (சாம்பிராணி) புகைந்துகொண் டிருக்கிறது. அக்

அது என்ன புஸ்தகம் என்று கேட்கும் வழிபோக்கர் நமது வீட்டுத் திண்ணையில் அப்புஸ்தகத்தைப் படிக்கக் குந்திவிட்டால், அவருக்கு நாம் அன்னமிட்டும் அனுப்பலாம். ஏனெனில் கற்றுரைக் கற்றுரே காமுறுவர் ஆதலால்.

கோயிலின் முன்னர் அவ்வூர் நல்லப்ப கவுண்டர் முதலாக யாவரும் கூடி யிருந்தனர். அக்கோயிலின் முன் மண்டபத்தில் மூன்று இடங்களைக் குறித்து, "சகுனம்" கேட்கத் தொடங்கினர். [முன் "குறி" கேட்பது என்பதையே சகுனங்கேட் பது எனவும் நாட்டுபுறத்தில் வழங்கு வர்.] சாதாரணமாக எப்பொழுதும் "இச் இச் இச்" என அடித்துக் கொண்டிருக்கும் பல்லிகள் அது சமயம் சொல்லி வைத்ததுபோல் நெடு நேரம்வரை யெங்கும் சப்தம் செய்யா திருந்தன. எங்காவது சுவற்றின் ஒரு பக்கத்தில் ஓர் பல்லி சென்றுகொண் டிருப்பினும், யாவரும் கண் கொட் டாது அதையே பார்த்துக்கொண்டு தாங்கள் விடும் சுவாசத்தையும் சிறிது அடக்கி மெதுவாக விடத் தொடங்கு வர். பாவம்! அது இவர்கள் குறிப் பிட்ட மூன்று இடங்களிலல்லாமல் எங்காவது ஓர் மூலையிற்சென்று தன் திருவாயைத் திறந்துவிட்டுப் போய் விடும். இவ்வாறு நாழிகை ஐந்து சென்றன. அம்மனுக்கு ஏதோ கோபமென யாவரும் பயந்த மனத் தினராய், எப்பொழுது அம்மனுக்குத் திருவுளம் இரங்கும் என எதிர்பார்த் திருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் நமது முரு கையனும் இருக்கின்றானென்பதை நேயர்கள் நினைவிற்கொள்ளவேண்டும். எங்கே வந்ததும் கௌளிசொல்லிவிடு கிறதோ என மிகுந்த கவலை கொண் டிருந்தான் முருகன். நல்லவேளை! அவ்வளவுநேரம் பல்லி உதவி செய் ததே அவனுக்குப் பேருபகாரமாய் முடிந்தது. இனி ஒரு நிமிஷமும் தாமதிக்கலாகாதென மதித்தான். அளவுக்கு மிஞ்சிய கள் அருந்தியவ னைப்போல் கருவிழிகள் இரண்டை யும் மேற் புருவத்திற்குள் சொருகிக் கொண்டு, கைகளையும், கால்களையும் உதறியவண்ணம் அப்படியே பின் புறம் சாய்ந்தான். யாவரும் திடுக் கிட்டனர். சிலர் விரைந்து சென்று அவனைச் சாயவிடாது தாங்கினர். மார்கழிமாதத்துப் பனியில் மேலே போர்வையில்லாதவனுக்கு உண்டா கும் நடுக்கம்போல, தனது உடலை நடுக்கிக்கொண்டு, இரண்டு கைகளை யும் உயரத் தூக்கி உரத்த குரலில் "அப்பா!" என்றான். எல்லோரு மாக ஒரே குரலில், "அம்மா! தாயே! சொல்லு! சொல்லு! ஏழைப்பிள்ளைகள் ஏதோ தெரிஞ்சும் தெரியாமலும் குத்தங்குறைகள் செய் திருந்தாலும் மன்னிச்சுப்புடு" எனக் கூவினார்கள். அவன் தனது "ஆட் டத்"தை மட்டும் நிறுத்தாமல், "அப்பா! என் மனசு பதைக்கிறது! என் மனசு பதைக்கிறது! எனக்குள்ள பிள்ளைகளில் பாதிப்பிள்ளைகள் வாயில்லா ஊமைப் பிள்ளைகளாயிருந் தால், பூமிக்கு அவற்றைப் பாரமென நினைத்துக் கொன்றுவிட்டு, மற்றப் பிள்ளைகள் மாத்திரம் சுகமாயிருக்க ஆசைப்பட்டால் என் மனசு எப்படி சந்தோஷமாயிருக்கும்? இந்த ஊர் களை யெல்லாம் சுட்டுக் கொளுத்தி னாலல்லாமல் என் 'ஆங்காரம்' தீராது" என பல்லைக் கிட்டிக் கொண்டு நடுங்கியவண்ணம் உரத்துச் சொன்னான்.

—"அம்மா! நாங்க ஒண்ணும் அப்படி செய்யலியே."

ஒருவரை எதிர்பார்த்து ஒரு மணிநேரம் காத்தவர் மனம் சலித்துப் புறப் பட்டுவிடுவதில், இன்னும் ஒரு நிமிஷம்கூடக் காத்திருந்தால் அவசியம் கண்டிருக்கலாம் என்று தன் வீட்டுக்கு வந்தபின் தெரியவருகிறது.

“ஒன்னும் செய்யிலேயா? பூசையென்றும், திருநாள் என்றும் என் பேரைச் சொல்லிக்கொண்டு எத்தனை உசுரை (உயிரை)க் கொல்லுரிங்க.”

“ஆடு, கோழியைத்தான், அதுவும் உனக்காகத்தானே நெடுநாள் வழக்கம்போல் பலி கொடுக்கிறோம்.”

“இம்ம், எனக்காகவா ?—ஆடு கோழியையா பலி? இன்னமேல் ஒரு நொடி பொறுக்கமாட்டேன் ; ஒரு நொடி பொறுக்கமாட்டேன்.”

“தாயே! வேணும், வேணும் ; உனக்குப் பிரியமில்லாவிட்டால் எங்களுக்கு என்னத்துக்கு? இன்னமேல் உன் சந்நிதியிலே ‘ரத்தக் கறை’ செய்யிலே.

“அடே வீரா! அடே செல்லா! [இவர்கள்தான் அவ்வூரில் மிதமிஞ்சிய கட்குடியும், வரம்பு கடந்த தீச்செயலும் உடையவர்கள். ஆதலின் இவ்விருவரை மட்டும் தனிப்பட அழைத்துச் சிலபுத்திமதி கூறின் அதனால் நன்மை மிக விளையும் எனக் கருதியே அவ்விருவர் பெயரைக் கூப்பிடுகிறான்.] என் சந்நிதி முன்னால் செய்யாமல் மறைவாகச் செய்யலாமென்பது நினைப்பா? எங்கே செய்தாலும் எனக்குத் தெரியாதா?

“இல்லெ, தாயே! இல்லெ ; உனக்குத் தெரியாத இடம் லோகத்திலே எங்கே இருக்கு? உனக்குப் பிரியமில்லாவிட்டால் நாங்க எப்பவும் எங்கேயும் செய்யிலே!”

“நல்லது! நாலு ஐந்து நாளாக என் தங்கச்சி மாரி (மாரியம்மன்) என்னைப் படுத்துகிறபாடு இவ்வளவு அவ்வளவு அல்ல. இந்த ஊரிலே அவள் மனங்குளிர விளையாடவேணுமாம். [அம்மை என்னும் நோய் உண்டாக்கல்.] நான்தான், ‘கூடாது; நம் பிள்ளைகள் ஏதோ தெரியாமல் செய்துவிட்டால் அதற்காக நாம் அவர்களை அழித்துவிடலாமா? நாமே அவர்களுக்கு நல்ல புத்தி சொல்லித் திருப்பவேணும்’ என்று சொல்லி வருகிறேன். எனக்காகிலுஞ் சரி, என் தங்கைக்கானாலுஞ் சரி, தேரோ, திருநாளோ எது போட்டாலும் உயிர்க்கொலை கூடாது. அவற்றை உண்பதுங் கூடாது. சம்மதமா?”

“தாயே! சம்மதம், சம்மதம்” என எல்லோரும் சேர்ந்து கூவினர்.

நமது முருகையனுக்கு “சாமி மலையேறி” விட்டது. “இனி உயிர்க்கொலை யில்லாமலேயே திருவிழா நடத்தவேண்டும். அவற்றின் ‘இறைச்சி’ யைக் கனவிலும் நினைத்தல் கூடாது” என ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர். ஆனால், நல்லப்பகவுண்டருக்கு மட்டும் தன் மகன் விஷயத்தில் சிறிது ஐயம் தான். இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொண்டால், எங்கே தன் மகன் தற்கொலை செய்துகொண்டு விடுகிறானோ எனப் பயந்து, அவரும் கூட்டத்தோடு கூட்டமாய், “ஆமா; ஆடு, கோழிகளும் நம்மைப்போல சீவராசிகள் தானே, அவற்றைக் கொன்றால் சாமிக்குச் சம்மதமா யிருக்குமா? கூடாது; கூடாது. நமக்குச் சுடுகாடு வேறேயிருக்க, ஆடு கோழி முதலியவற்றிற்குச் சுடுகாடு நம் வயிறா?” எனக் கூறத்தொடங்கினர். இதற்குள்

காத்திருந்தவர் போனபிறகே, எதிர்பார்த்த மனிதன் வருவதும், அவனிடம் அவர் இப்போதுதான் போனாரென்று வீட்டார் சொல்வதும் அடிக்கடி நேரக்கூடியன. பாவம்! இருவருமே ஏமாறுகின்றனர்.

மாலைச் சூரியன் பொன்னிறங் காட்டி மறைந்தான். ஒரு சிறு குத்துவிளக்கு அக்கோவில் மண்டபத்தில் "மினுக்கு, மினுக்கெ"ன எரிந்துகொண் டிருந்தது. அது சமயம் ஓர் பல்லி அம் மண்டபத்தின் ஓரிடத்தில் மிகப் பலமாய் "கிச் கிச்" என அடித்து விட்டது. "சாமி சொல்லி விட்டது. நாம் குறித்த அந்த (உத்தம) இடத்திலேயே சொன்னது; நான் பார்த்தேன், நான் பார்த்தேன்" என ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டு பிரிந்தனர். இனி நம் நேயர்களுக்கு அவ்வூரில் உயிர்பலியின்றி திருவிழா நடந்ததென்பதையும், புலால் உண்ணலை அடியோடு விட்டுவிட்டனர் என்பதையுங் கூறவும் வேண்டுமோ? அவ்வாறு அவர்கள் புலால் மறுத்ததால் ஆடு முதலியவை மேலும் மேலும் பெருகிக் கழனிகளுக்குநல்லஎருவைக் கொடுத்தன. அதனால் பயிர்கள் ஓங்கி வளர்ந்து அளவிறந்த பலனைக் கொடுத்துவருகின்றன. அவ்வூர்ச் சனங்களும் பசி, பிணி யென்பவற்றைச் சொல்லாலன்றிச் செயலால் அறியாது வாழ்கின்றனர். ஈச்சம்பட்டியை அடுத்துள்ள சில கிராம வாசிகளும் அவ்வீச்சம்பட்டிச் சனங்கள் இவ்வாறு வளம்பெற்றுத் திகழ்வதற்கு உள்ள காரணத்தை யறிந்து, இனித் தாங்களும் அவ்வாறே நடப்பதெனத் தீர்மானித்திருக்கின்றனர். ஐயமுள்ள சகோதரர்கள் அங்கு சென்று அறிந்து கொள்ளலாம்.

வாழ்க முருகையன் நீடூழி.
வளர்க அவன் கீர்த்தி.

முற்றிற்று.

பே. இராமாநுஜ ரெட்டியார்.

யோசிப்பதற்குப் பிடிக்கும் நேரம்.

ஒன்றை எழுதுவதற்குப் பிடிக்கும் நேரத்தைவிட, அதையோசித்து உருவாக்குவதற்குப் பிடிக்கும் நேரம் அதிகம். யோசிக்கிறான்! யோசிக்கிறான்!! ஒரு விஷயத்தோடு ஒரு விஷயத்தைப் பொருத்தப் பார்க்கிறான். சில பொருந்துகிறது. சில பொருந்துவதில்லை. சில இடையில் விட்டுப்போய் நினைவுக்கு வராமலே தடுமாறுகிறது. சில முன்பே எழுதிவிட்ட விஷயமோவென்று கவலையுடன் ஆராயவைக்கிறது. மேஜைமுன் உட்கார்ந்து இரண்டு மணி நேரமாகியும் யோசனை ஒரு வழியில் திரும்பியதாயில்லை. எழுதினால் தானே வேலை செய்ததுபோலாகும்? யோசித்தவாறு கிடந்தால் வேலை செய்ததாகிவிடுமா? அதற்குக் கூலி ஏது? பாடானபாடு இது! ஆயினும், நன்மை செய்யவே இந்தப் பாடு படுவதால், அந்த இன்பத்திற்காக இக்கஷ்டத்தை ஏற்றுத் தாங்க மனது ஒப்பி வேலையில் ஊக்கமூட்டுகிறது.

அவ்வளவுக்கு நமக்கு சக்தி ஏது என்று எண்ணாதே. துணிந்து செய்து பார். எழுதிப் பார். முதல் முறை தவறினும் பிறகு தேர்ந்துவிடுவாய்,..



பெரியாரின் மொழிகள்



(372-ம் பக்கத் தொடர்ச்சி.)

317. He that hath the steerage of my course,
Direct my sail!

SHAKESPEARE.

நான் நடக்கவேண்டிய வழியின் விசையை உடைய ஒருவன் என்னை அவ்வழி நடத்தட்டும். ஷேக்ஸ்பியர்.

318. It is excellent To have a giant's strength, but tyrannous To use it like a giant.

MEASURE FOR MEASURE.

ஒரு ராக்ஷசனுடைய பலத்தை உடைத்தாயிருப்பது ரொம்பவும் மேலானது. ஆனால் அதை ராக்ஷசன் மாதிரி உபயோகிப்பது குரூரமானது.

319. It is the heart and not the brain, That to the highest doth attain. LONGFELLOW.

மேலான பதவியை அடைவது ஹிருதயமே ஒழிய மூளையல்ல.

லாங்பெல்லோ.

320. The earth hath felt the breath of spring, Though yet on her deliverer's wing. The lingering frosts of winter cling.

JOHN GREENLEAF WHITTER.

பூமியானது மாரிகாலக் கடைசியில், இன்னும் மாரிகால அடையாளமான உறைபனிக்கட்டிகள் தங்கியிருப்பினும், வசந்தகால வருகையை உணர்கிறது.

ஜான் கிரீன்லீப் விட்டியர்.

321. Humility that low sweet root. From which all heavenly virtues shoot. MOORE.

வணக்கம் என்பது திவ்யமான புண்ணியங்கள். கிளைக்கும் தாழ்ந்த இனிமையான மூலம். மூர்.

322. Know that we must trust and hope, and neither doubt ourselves nor doubt the Good in one another.

DICKENS.

நாம் எப்பொழுதும் பூர்ண நம்பிக்கையுடனும் எண்ணத்துடனும் இருக்கவேண்டும். நாம் நம்மிடத்திலும் சந்தேகப்படக்கூடாது. மற்றவர்களிடமுள்ள நல்ல குணங்களிலும் சந்தேகப்படக்கூடாது. டிக்கன்ஸ்.

323. Thine be like joy and treasure, Peace, enjoyment, love, and pleasure! BURNS.

சாந்தம், சந்தோஷம், அன்பு முதலிய ஒவ்வொன்றும் உன்னுடைய சந்தோஷமும், நிதியாகவு மிருக்கட்டும். பர்ன்ஸ்.

324. Great art is the expression of the mind of a great man, and mean art, that of the want of mind of a weak man.

RUSKIN.

மேலான தொழிலானது ஒரு மஹானுடைய புத்தியின் வெளித்தோற்றம். இழிவான தொழில் தாழ்ந்தவனுடைய புத்தியின்மையினுடைய வெளித்தோற்றம்.

ரஸ்கின்.

P. E. பாஷியம் நாயுடு.

சென்றுபோன நாட்கள்.

ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதி.

ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்கள் பறிமுதல் செய்யப்பெற்றுப் பெரும் கிளர்ச்சி எழுந்துள்ள இச்சமயம் அவரது ஜீவியத்தை வரைதல் பொருத்தமானது. பலர் பல விதமாக அவரைப்பற்றி வரைந்துள்ளார். அவருடன் கலந்து நட்புமுறையிலிருந்தவகையில் நமக்குத் தெரிந்தவற்றை இங்கு எழுதுகிறோம். பாரதியாருக்கு ஏற்பட்ட பிரசித்தியெல்லாம் அவர் காலஞ்சென்ற பிறகுதான்; **விசேஷமாக அவரது பாடல்களால் தான்.** அவர் ஆதியில் 'சுதேசமித்திர'னில் உதவி ஆசிரியராய் இருந்துவந்த நாளில் அவரைத் தெரிந்தவர்கள் மிகச்சொற்பம். உதவி ஆசிரியரின் நிலை திரைக்குப் பின்னிருந்து வேலைசெய்து அவ்விதமே ஒழிந்துபோவதாம்! "மித்திர"னின் உதவி ஆசிரியராய் இருந்துகொண்டே "சக்கரவர்த்தினி" என்ற மாத ஸஞ்சிகையின் ஆசிரியத்துவத்தையும் ஏற்று அதை நடத்திவர்தார். "மித்திர"னில் '**எனது தாய் நாட்டின் முன்னாட் பெருமையும் இந்நாட் சிறுமையும்**" என்று தொடர்ச்சியாகப் பாடல்கள் எழுதத் தொடங்கினார். மித்திரனில் இதுதான் அவரது முதல்பாடலாகும். இது இப்போது வெளிவந்துள்ள அவரது நூல்களில் சேர்க்கப்படவில்லை. "சக்ரவர்த்தினி" பத்திரிகையில் அவரால் எழுதப்பட்ட வியாசங்களும் பாடல்களும் புது மணம் கமழ்ந்து யாவராலும் விரும்பப்பட்டன.

***

அந்தக் காலத்தில் பாரதியார் தீவிரதேசபக்தராயிருந்தார். எதிலும் நிதானத்தையே யனுசரித்து நின்ற ஸ்ரீமான் ஜீ. சுப்பிரமண்ய ஐயரின் கொள்கைகளில் பாரதியார் வேறுபட்டுப் பிரிந்து, "இந்தியா" என்ற தமிழ் வாரப் பத்திரிகையைத் தொடங்கி அதற்கு ஆசிரியராய் அமர்ந்தார். அப்பத்திரிகையின் சொந்தக்காரர் வேறொருவராவர். பாரதியாரின் தமிழ் நடை அதுமுதற்கொண்டு ஒரு புது வழியில் மாறியது. அதற்கு முன்னர் எவரும் அவ்வழியில் பத்திரிகையை நடத்தவில்லையென்று சொல்லும்வாறாக வெகு சிறப்புடனும் திறமையுடனும் எழுதிவரத் தொடங்கினார். சிறு சிறு பதங்களுடன் கூடிய ஒரு நவீன கம்பீர நடை. இந்தியா பத்திரிகை சனிக்கிழமைதோறும் வெளியாகிவந்தது. நாலாயிரம் பிரதிகள் வரை போய்க்கொண்டிருந்தது. ஒவ்வொரு பத்திரிகையிலும் அவ்வார வர்த்தமானத்தின் சார்பாய் ஒரு பெரிய சித்திரம் கண்ணுக்கினிய காட்சியாய் மிக்க அழகுடன் பிரசுரிக்கப்பட்டு வந்தது. அந்தப் படம் இன்னின்னவாறு இருக்க வேண்டுமென்று சித்ரீகருக்குப் பாரதியார் சொல்லுங்காலையில் அப்படத்தின்

கொடுத்து சந்தோஷப்படப் பிராப்தமில்லா வேளையில், அதைப் பெற்றுக்கொள்ள வேண்டியவரை எவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடிப்போனாலும் அவர் அகப்படார். அந்தப்பொருள் ஆய்விட்டதும் அவர் ஓடிவருவார்.

அம்ஸங்களை யெல்லாம் தமது முகத்திலும் அபிநயங்களிலும் காண்பித்து விடுவார். சித்ரீகரின் மனதில் அந்தப் பாவனைகள் நன்கு பதிந்துவிடும். அவ்விதமே சித்திரமும் தயாராகும்.

***

"இந்தியா" பத்திரிகை பிரபலப்பட்டபொழுது அது மிகவும் உக்கிர வாசகமுள்ளதா யிருந்தது. சிறிதும் அச்சமின்றி எழுதப்படலானது. அந்த அம்ஸம்தான் கடைசியில் அப் பத்திரிகைக்கு ஆபத்தாய் முடிந்தது. பத்திரிகை என்றைக்கும் நடக்கும்படியான ரீதியில் சாந்தமாய் சட்ட வரம்புக்கு உட்பட்டு நடக்கும்படி பல நண்பர்கள் கூறியும் பாரதியாரின் எழுதுகோல் பழயபடியே இருந்தது. பத்திரிகைக்கு ஆபத்துநிச்சயமென்று பலர் கூறினர். ஒருசமயம் பாரதியார் டிராம் வண்டியில் செல்லுகையில் "இந்தியா" பத்திரிகையைப் படித்த ஒரு உத்தியோகஸ்தர் மிக்க கோபாவேசமாய் இப்பத்திரிகையின் ஆசிரியரை அவசியம் தண்டிக்கவேண்டுமென்று பாரதியாரிடம் கூறினர். பாரதியார் 'அப்படியா' என்றார். இந்த ஸம்பவத்திற்குப் பிறகு "இந்தியா" பத்திரிகை தனக்கென்று ஒரு புது காரியாலயமும் அச்சுக்கூடமும் அமைத்துக்கொண்டு வேறாய் விட்டது. பத்திரிகையே வேறு கை மாறினும் அதன்கொள்கை எப்போதும்போல் இருக்கும் என்று ஒரு தனிக் குறிப்பும் வெளியிடப்பட்டது.

***

"இந்தியா" பத்திரிகை வரவரக் 'கார'மாகிவிட்டது. **"சிவாஜி தன் சைநியத்தாருக்குக் கூறியது"** என்று அகவல் ரூபமாய் 'பஞ்சாலிசபதம்' போல் பெருங்காவியமாகத் தொடர்ச்சியாய் பத்திரிகையில் எழுதிவந்தார். அது முற்றும் வீரரஸமாய் இருந்தது. அதனைத் தனிப்புஸ்தக உருவமாய் வெளியிடுதற்குப் பாரதியார் விரும்பினர். அது ஆபத்தென அவரது நண்பர்களால் தடுக்கப்பட்டது. **"இந்தியா" பத்திரிகைக்குப் பாரதியார் அந்தரங்கத்தில் ஆசிரியராக இருந்தாரேயன்றி வெளிப்படையாயன்று.** ஸ்ரீ. ஸ்ரீனிவாசன் என்பவர் ஆசிரியரும் பிரசுரிப்பவருமென்று பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்தது. பாரதியார் ஒரு நிருபநேயர்போன்றும் "இந்தியா" பத்திரிகையில் பாடல்களை மட்டும் தமது பெயருடன் வெளியிட்டு வந்தார். 1907-ம் வருஷத்தில் ஸ்ரீ லஜபதிராயைத் தேசப்பிரஷ்டம் செய்த காலையில் அவர் தம்மைப்பற்றி இரங்கிப் பிரலாபிப்பதாகப் பாரதியார் இந்தியா பத்திரிகையில் அரிய பாடல்களை வரைந்து அதற்குத் தெளிபொருள் விளக்கமும் குறிப்பிட்டார். அந்த விளக்கம் இப்பொழுது வெளிவந்துள்ள அவரது நூல்களில் இல்லை. பாடல்கள் மட்டுமே யுள்ளன.

***

இவ்விதமே அவ்வப்போது நடந்தேறிய ஸம்பவங்களுக்கெல்லாம் சிறு சிறுபாடல்களை "இந்தியா" பத்திரிகையில் தமது பெயருடன் வெளியிடுவதானர். வந்தேமாதர கீதத்துக்கு "இனிய நீர் பெருக்கினை இன்கனி வளத்தினை" என்று தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்றும் வெளியிட்டார். அப்பாடல்களின் மூலமாக மட்டும் அவர் பெயரைத் தமிழ் நாட்டினர் அறிந்துவந்தனர்.

(தொடரும்)

மெத்தைவீடு மேன்மையா? கூரைவீடு மேன்மையா? எது சுகாதாரம் பெருகியதோ அதுவே உயர்ந்தது. மெத்தை வீட்டார் ஆஸ்பத்திரியாயின் பயனென்? கூரைவீட்டார் உழைத்துப் பலசாலிகளாயின் அதுவே மேல்.

சென்றமாதம்

“ஆற்றுப் பெருக்கும் அரசும் அரை நாழி” என்பதாக, தீபாவளி பண்டிகை ஒரு நாட் பொழுதுக்குள் ஒழிவதாயிருப்பினும், அது குடும்பஸ்தனை நசுக்கிக் கசக்கிக் கண்விழி பிதுங்கச் செய்து விடுகிறது! வீட்டுக்காரனின் சொற்பவரவைப் பெண்கள் அறியாமல் ஆகாயத்தில் பறக்கிறார்கள். உயர்தரச் சேலைகளில் கண்ணோட்டம் செலுத்துகிறார்கள். சேலைக்காரனைத் தருவித்து உட்காரவைத்துக்கொண்டு உயர்தரச் சேலைகளாய் எடுத்து வைத்து வ்ாங்க வற்புறுத்த, குடும்பஸ்தனோ சேலையின் நயம், விலை ராசி பார்க்கத் தெரிந்தவர்கள் வேண்டுமென்கிறான். வீட்டுப் பெண்களோ பக்கத்துவீட்டுப் பார்வதியை அழைக்கிறேனே, அந்த அம்மாளுக்கு எல்லாம் தெரியுமே என்கிறார்கள். கடைசியில் வீட்டுக்காரன், இப்பொழுது தான் ஜவுளி வகையில் ஐம்பது ரூபாய் முழுகிற்று; இனி, பணம் வந்து தான் ஆகவேண்டுமென்கிறான். வீட்டுப் பெண்களின் முகம் கோணி விடுகிறது! இவ்விதமே நெடுக இந்த நாடகம் நடந்து, நகைகளும் பாங்கியில் அடகுக்குப்போய் கடன்களுமாகி வீட்டுக்காரனைத் திக்கு முக்காடச் செய்துவிடுகிறது. ஸம்சாரத்தின் தொல்லை தீபாவளி மாதத்தில் தான் நன்கு தெரியவருகிறது. இன்னொரு பெண்ணையும் விவாகம் செய்துகொள்ள எண்ணுவோன் தீபாவளிக்குத் தன் பழய மனைவியோடு இனி வரும் புதிய மனைவிக்கும், அவள் பெறுகிற குட்டி குழந்தைகளுக்கும் வேறு சேலை ஜவுளிகள் எடுக்கவேண்டி வருமே யென்று நினைத்துப் பார்ப்பானுகில் மறு விவாகம் செய்துகொள்ள எண்ணமிட்டதையே விட்டுவிடுவான். வீட்டுப் பெண்களுக்கு வீட்டுக்காரன் படுகிற கஷ்டம் தெரியாதது பெரிய சோதனைதான்! இதில் தையற்காரனின் கூத்து இன்னும் தமாஷ்! அவ்வளவு பணம் செலவிட்டு வாங்கிய துணிகளை எதிரில் கிழித்து மிச்சம் மிகுதியைத் தராமல், “சரி இது இரண்டு ரவிக்கைக்காச்சு, இது மூன்று ‘ஜாக்கிட்டுக்கு, இது நாலு பாடிக்கு, இது இரண்டு பாவாடைக்கு, இது நாலு சொக்காய்க்கு” என்று சொல்லி அவ்வளவு துணிமணிகளையும் சுருட்டிக்கொண்டு போய்விடுகிறான்! இவற்றில் அவன் தனக்கென்று கத்தரித்து எடுத்துக்கொண்டதுபோக மிச்சமே வீட்டுக்குத் திரும்புகிறது! இதற்குப் பிறகு இவற்றிலுள்ள சாயம் பளபளப்பினுடைய உறுதியைச் சோதித்துப் பார்க்க வண்ணானிடம் சலவைக்குப் போடுகிறார்கள்!

தீபாவளியில் குடும்பஸ்தனின் பாடான பாடு!

***

“போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடே” என்பதாக ஸைமன் கமிஷன் மறுபடியும் இந்தியாவுக்கு வந்து விசாரணை நடத்தி வருகிறது; பூனவில் இது நடத்திய விசாரணையில் இந்திய ஜனத்தலைவர்கள் எவரும் சாக்ஷியம் தர முன்வரவில்லை,

ஸைமன் கமிஷனின் விசாரணை.

'சாமான்யமாகிய மரங்கள் மட்டும் கவனத்தைக் கவர்ந்து, முக்கியமாகிய தோப்பு கண்ணிற்படாமலே போய் விடலாம்' என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையில் எழுதப்பட்டுள்ளது. தோப்பு என்பது இந்திய ஜனத்தலைவர்களையே குறிப்பிடுவதாகும். பூனாவில் ஸைமன் கமிஷனைப் பகிஷ்கரித்ததுபோல், லாகூர் விசாரணையின் போதும் பகிஷ்கரிப்பு நடந்து, அதில் ஸ்ரீ லாலா லஜபதிராய் போன்ற பெரியோர்கள் போலீஸாரால் அடிகளும்பட நேர்ந்துவிட்டது. இனி இக்கமிஷனின் விசாரணை முடிவு பெறுவதற்குள் என்னென்ன நேருமோ!

***

"கத்தியைப் பார்க்கிலும் கன கோபம் கொலை செய்யும்" என்பதாக, தனது உடன்பிறந்தாளை அவள் கணவன் அடித்தும் வைதும் ஹிம்ஸித்தானென்ற ஆத்திரத்தில் அவனையே வேலை தீர்த்துவிட்டான் ஒருவன்! இது பாலக்காட்டிற்கு அருகில் உள்ள கல்மண்டபம் சுங்கச்சாவடிக்கருகில் நடந்த சம்பவம். ஒருவன் தன் மனைவியோடு வைப்பும் கொண்டிருக்க, அந்த வகையில் மனைவி சீறிவிழ, அதற்குக் கணவன் அவளைத் தாக்கிவிட்டுச் செல்ல, இதை 14-வயதுள்ள தன் தம்பியிடம் அக்காள் சொல்லியழ, உடற்பிறப்புப் பாசத்தால் கோபம் மீறித் தன்னையே மறந்து தமக்கையின் கணவனைக் கத்தியால் கொலை செய்துவிட்டான்! நாளை தமக்கை விதவையாவாளே என்று நினைத்துப்பார்க்க நேரமில்லை. தனக்கு சிக்ஷை நேருமே என்று எண்ணவும் புத்தி போகவில்லை. கடுஞ்சினம் எதையுமே மறைத்துவிடுகிறது. இவ்விதமே, தன் தமக்கை அவளது கைக்குழந்தையை அடித்ததைப் பொறாமல் அவளைத் தம்பி அடித்துவிட, பக்கத்திலிருந்தவர்கள் "அவள் புருஷன்முன் அவளைத் தொட்டு அடிக்கலாமா?" என்று கோபிக்கவும், அப்போதுதான் அவனுக்கும் தன் தவறு தெரியவந்ததாம்! எந்த வேளையிலும் கோபம் சண்டாளம் தான். கொலையும் செய்யுந்தான்.

***

"உறவுக்கு ஒன்பதுபடி, ஊருக்குப் பந்துபடி" என்பதாக, தம் தேசத்தவர்களிடம் மதிப்பு வைக்காமலும், அவர்கள் சார்பில் நில்லாமலும், தம் ஆவலாதிகளை யெல்லாம் அன்னியர்பால் வைத்து, நடந்து, அரசாங்கத்தின் பக்கமே துணையாக நின்று, அதன்பயனாக மேன்மேலும் புதிய பதவிகளை ஏற்றுவாழ்ந்தவர்களில் கல்கத்தாவில் இப்போது காலஞ்சென்றுவிட்ட ஸ்ரீமான் எஸ். ஆர். தாஸ் என்பவரும் ஒருவராவர்.

காலமான ஸ்ரீ எஸ். ஆர். தாஸ்.

இவர் நமது தேசபந்து தாஸின் நெருங்கிய பந்துவாயினும், தேசபந்துவைப்போல் ஜன்ம பூமிக்குப் பாடுபட்டவரல்லர். ஸர்க்காரில் பெரிய பதவிகளிலேயே நோக்காயிருந்து முடிவில் இந்தியா கவர்ன்மெண்டின் சட்ட மெம்பர் பதவியையும் ஏற்றார். இவர் ஸ்தாபிக்க முயன்ற ஒரு பாடசாலைக்கு ஆசிரியர்களைத் தேடிப் பிடிக்க இங்கிலாந்துக்குச் சென்றார். இவர் பிறந்த நாட்டில் தக்க ஆசிரியர்கள் கிடைக்கவில்லை போலும்! இதிலிருந்தே இவர் தம் நாட்டினரை மதித்த மதிப்பினை யுணரலாம். இவ்விதமும் சில பெரிய மனிதர்களின் போக்கு கோணலாகப் போகின்றது! அவர்களுக்கே செல்வமு கீர்த்தியும் வெற்றியும் கூடுகின்றது!

மதிப்புரை.

கம்ம சரித்திரச் சுருக்கம்:—

ஸ்ரீமான் சு. வேங்கடசாமி நாயுடு அவர்கள் இயற்றியது. விலை அணு 4. கிரவுன் 1 x 16ல் 34-பக்கங்கள் உள்ளது.

இந்நூல் தெலுங்கைத் தமது தாய்ப் பாஷையாகக் கொண்டுள்ள கம்மவார் வகுப்பினரது பூர்வ உன்னத சரிதையை விவரமாயும் தெளிவாயும் உரைக்கின்றது. அன்னாருக்கு ஒரு புத்துணர்ச்சியையும் அளிக்கின்றது. தென்னிந்தியாவில் கம்மவார் வகுப்பினரிற் பெரும்பாலார் வியவஸாயமே ஜீவனமாக உள்ளவர்கள். செட்டும் சிக்கனமும் செல்வமும் நிறைந்தவர்கள். பெண்மக்களும் ஆண்மக்களும் நல்ல பலசாலிகள். விசேஷமாய்த் தெய்வபக்தி கொண்டவர்கள். ஆனால், போதிய கல்வியும் முன்னேற்றமுமில்லை. எனினும், இப்பொழுது அபிவிர்த்தியில் ஊக்கமுடையோராய் முற்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு இந்நூல் ஒரு நல்ல 'எழுப்புத'லாகும்.

ஆண்டெண் மர்ம ரகசியங்கள்:—

ஸ்ரீமான் எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் இயற்றியது. விலை ரூ. 1. டிம்மி 1 x 8-ல் 112-பக்கங்களுள்ளது.

இதில் மர்ம சாஸ்திர நுட்பங்களையும், மணவாழ்க்கைக் கிரமங்களையும் சுருக்கமாய்க் கூறப்பட்டுள்ளது. எந்த விஷயம் சொல்லப்படவில்லையென்றில்லாமல் யாவும் பல குறிப்புகளாய்த் தொகுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறான நூல்கள் இப்பொழுது அநேகம் வெளிவந்திருப்பதில், இதனை ஒரு சங்கிரகமான நூல் என்று கூறலாம்.

சிற்றின்ப வெற்றி:—

ஸ்ரீமான் பண்டிதர் ம. மாணிக்கவாசகம்பிள்ளை அவர்கள் இயற்றியது. விலை ரூபா 2-4-0 கிரவுன் 1x16ல் 475-பக்கங்கள் கொண்டது.

சிற்றின்பத்தில் உண்மையாகவே வெற்றி படைத்தோரெனப்படுவோர், முக்கியமாய் மறுமைக்கான பேரின்ப வாழ்விலும் விசேஷமாகப் பங்கு கொண்டவர்களாகவே கருதப்படுவர். அதுதான் முறை. அங்ஙனம் கருதும் வழியில் உருவாவதற்கேற்ற முறையில் இந்நூல் அத்யற்புதமாய் விசாலித்த நோக்குடனும் உயரிய எண்ணங்களையும் கருத்துகளையும் அமைத்து ஒரு சிறந்த நடையில் ஆக்கப்பெற்றுள்ளது. ஆசிரியர் தமது சொந்த அபிப்பிராயத்துடனும் மதிநுட்பத்துடனும் இந்நூலை எழுதிச் சென்றுள்ளார். நமது பூர்வீக ஆசாரணைகளின் சிறப்புகளையும், வழக்கத்திலிருந்து வரும் நல்ல அம்ஸங்களையும் தெளிவாய் விளக்கி, மேனாட்டின் பகட்டான முறைகளைக் கண்டனம் செய்து அறிவுச்சுடர் கொளுத்துகின்றார். இது கேவலம் ஒரு சிற்றின்ப நூலன்று. மறுமை வாழ்க்கையின் பேரின்ப முக்தியை இல்லறத்திலிருந்தவாறேபெறக் கூடுமென்பதை விளக்குதற்பொருட்டு இகபரசாதகமான இருவகை நலங்களையும் விஸ்தாரமாய்க் கூறவந்த நூலாகும். மர்ம சாஸ்திர சம்மந்தமானவைகள் யாவும் விளக்கமாயும் விரிவாயும் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன், ஆஸ்திக சம்பந்தமான தத்துவங்களையும் அழகாக விவரிக்கப்பட்டுள்ளன. ஆசிரியரின் உத்தமமான நோக்கத்தை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம்.

(இப்புஸ்தகங்கள் யாவும் "அமிர்த குணபோதினி" ஆபீஸில் கிடைக்கும்.)

“ அமிர்த குணபோதினி ”

விபவஞூத்திய கார்த்திகைமீ பஞ்சாங்கம்.

	ஆங்.		தமிழ்	வார.	திதி	நக்ஷ.	விரதாதி முதலியவை.
	15		1	வி	திரி 42-22	கேட் 9-37	சூன்யதிதி விருச்சிகோவ் 15—59 விஷ்ணுபதி கரிநாள்
	16		2	வெ	சது 48-43	மூல 17-18	சதுர்த்திதிதி
	17		3	ச	பஞ் 54-14	பூரா 24-26	திருச்சானூர் தீர்த்தம்
	18		4	ஞா	ஷ 58-32	உரா 30-34	ஸ்கந்தஷ்டி, அநூராதா கார்த்திகை
நவம்பர்	19		5	தி	ஸப் 60-0	ஶ்ரவ35-18	மகரம்சுபம் [34-16
	20		6	செ	ஸப் 1-16	அவி 38-20	
	21		7	பு	அஷ் 2-9	சத 39-31	
	22		8	வி	நவ 1-4 உப 56-53	பூட் 38-54	சாபாயனம் 30-38 அவமா
	23		9	வெ	ஏகா 53-3	உட் 36-10	ஸ்மார்த்த ஏகாதசி,
	24	விருச்சிகம் (5—29)	10	ச	துவ 46-35	ரே 31-53	வைஷ்ணவகைசிக ஏகாதசி, கரிநாள்
	25		11	ஞா	திர 38-47	அசு 26-11	பரணீ தீபம், பிரதோஷம்
	26		12	தி	சசி 30-5	பர 19-26	சதுர்த்தசிதிதி, கிருத்திகா தீபம் கிருத்திகா விரதம்
	27		13	செ	○ 20-47	கிரு 12-4	விஷ்ணு சர்வாலய தீபம், திதி துவயம்
	28		14	பு	பிர 11-24	ரோ 4-35 உப 52-46	துவிதியாதிதி
	29		15	வி	துவி 2-21 உப 51-40	ஆரு 50-47	
	30		16	வெ	சது 46-45	புந 45-17	[நாள்
	1		17	ச	பஞ் 40-55	பூச 41-11	ஜ்யேஷ்டா கார்த்திகை 44-19, கரி
	2		18	ஞா	ஷ 36-49	ஆயி 38-49	
டிசம்பர்	3		19	தி	ஸப் 34-38	மக 38-21	
	4		20	செ	அஷ்34-26	பூர 39-46	
	5		21	பு	நவ 36-12	உத் 43-4	
	6		22	வி	தச 39-38	ஹஸ்47 55	
	7		23	வெ	ஏகா 44-29	சித் 54-4	ஸர்வைகாதசி
	8		24	ச	துவ 50-22	ஸ்வா 60-0	
	9		25	ஞா	திர 56-53	ஸ்வா 1-8	பிரதோஷம்
	10		26	தி	சசி 60-0	விசா 8-46	மாஸ சிவராத்திரி
	11		27	செ	சசி 3-40	அநு 16-34	
	12		28	பு	● 10-27	கே 24-22	
	13		29	வி	பிர 16-58	மூல 31-48	சந்திர தரிசனம், விருச்சிக துவிதியா திதி
	14		30	வெ	துவி22-58	பூரா 38-40	சாபோவி 51-51, மூலா கார்த்திகை, விருச்சிக சாப - திரிதியா திதி

	கு	ரா	அ
—	15உக்கு		—
சு	ர கே புத ச		

“ அமிர்த குணபோதினி ” பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை,